

# அதிபர் கனகசபாபதி மணிவிழா மலர் 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்
# கனகசபாபதி
# மணிவிழா
# மலர்
# 1995

வெளியீடு :
மணிவிழாக் குழு
ரொறன்ரோ,
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| மலர் | இதழ்கள் |
|---|---|
| **மணியும் மலரும்** | |
| உள்ளக் கமலம் | 06 |
| ஒன்றிலிருந்து ஒன்று | 07 |
| **மகிழ்வும் வாழ்த்தும்** | |
| GREETINGS FROM MAHAJANA COLLEGE O. S. A. - CANADA | 09 |
| வாழிய, பல்லாண்டு வாழியவே! | 10 |
| வாழ்த்துச் செய்தி | 11 |
| தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்பு | 12 |
| SKANDA VARODAYA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION (CANADA) | 12 |
| மகாஜனா | 13 |
| ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் மங்காத நினைவுகள் | 14 |
| மாமனிதர் வாழ்க! | 15 |
| வாழ்க இன்னும் அறுபது ஆண்டுகள்! | 16 |
| BEST WISHES! | 17 |
| CONGRATULATIONS! | 18 |
| KANNEX: A PERSONIFICATION OF DEVOTION AND VOLUNTEERISM | 19 |
| MESSAGE OF GOOD WISHES | 19 |
| கனகசபாபதியிவரே! | 20 |
| மணிவிழாப் போற்றி வாழ்த்துவோமே! | 21 |
| கல்விக்குரிசில் வாழியவே! | 23 |
| அறிஞ நீ வாழி, வாழி! | 23 |
| அறுபதை அடையும் ஆசான் | 24 |
| KANNEX HAS MUCH TO OFFER | 25 |
| **ஆசிரியரும் அதிபரும்** | |
| எனது ஆசிரியர் | 28 |
| நான் கண்ட மாஸ்ரர் | 31 |
| எமது குருநாதர் | 34 |
| பொற்கால இரைமீட்டல் | 36 |
| பொ. க. வின் நிர்வாகத் திறன் | 39 |
| மகாஜனங்கள் மனத்தில் நிலைத்து நிற்பவர் அதிபர் பொ. கனகசபாபதி | 40 |
| மாணவர்க்கொரு கலங்கரை விளக்கம் | 43 |
| **நண்பரும் தொண்டரும்** | |
| எனது இனிய நண்பன் | 46 |
| "கனக்ஸ் எங்கிருந்தாலுமென்?" | 48 |
| தன்னலங் கருதா நண்பன் | 52 |
| மேதா விலாசத்திற்கு நண்பன் கனகசபாபதி ஓர் எடுத்துக்காட்டு | 54 |
| ஒரு சந்திப்பு | 56 |
| **ஆற்றலும் அறிவும்** | |
| வித்தியாசத்தின் நிறைகுடம் | 62 |
| மேன்மையுறும் மேடைகள் | 66 |
| கல்விமான் கனகசபாபதி | 70 |
| உயர்ந்த மனிதர் | 71 |
| கனடாவில் தமிழ்க் கல்வியும் கனகசபாபதியும் | 73 |
| என்றுமே பொற்காலந்தான் | 75 |
| தமிழர் கூட்டுறவு இல்லத்தின் நூல்நிலைய அதிபர் | 76 |
| கனகசபாபதி அவர்களின் முற்போக்குச் சிந்தனைகள் | 77 |
| **மனையும் மாட்சியும்** | |
| குடும்பத் தலைவர் தாயுமானார் ஆகின்றார் | 81 |
| அத்தான், என் அத்தான்! | 85 |
| MY FATHER | 87 |
| நன்றி மறப்பது நன்றன்று | 88 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியார் திகழ் கண்டம் முடையான் மலர் மல்கு
பிணிவார் சடை யெந்தை பெருமான் கழல் பேணித்
துணிவார் மலர் கொண்டு தொண்டர் தொழு தேத்த
நணியான் நமை யாள்வான் நல்ல நக ரானே.

- தேவாரம்

# மணியும் மலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் கமலம்

அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களுக்கு மணிவிழா!
மஹாஜனங்களின் கல்வித்துறைக் கண்மணிக்கு அகவை அறுபது.

கல்வியைக் கண்ணெனப் போற்றுபவர் ஈழத்துத் தமிழர். எதனை மறந்தாலும் செய்ந்நன்றியை அவர்கள் மறப்பதில்லையே.

இந்த முதுசொத்தில் ஊறிவளர்ந்த உள்ளக் கமலங்களுக்கு அதிபர் அவர்களுக்கு அகவை அறுபதாம் என்னும் செய்தி சூரியோதயமாயிற்று; மலர்ந்து விரிந்தன.

துள்ளி எழுந்தார்கள் அன்பர்கள். தூபங்கள் காட்ட விழைந்தார்கள். தீபங்கள் ஏற்ற ஏழுந்தார்கள். அர்ச்சனைகள் செய்துபார்க்க ஆசைப்பட்டார்கள். தான்தோன்றியாக, முன்னோடியாக ஒரு விழாக் குழு தலையெடுத்தது.

பொருந்த்மானவருக்குத் திருத்தமானவொரு மலர் தயாரிக்கும் பணியை அந்த விழாக்குழு என்னிடம் ஒப்படைத்தபோது மலையளவு மகிழ்ச்சி என்னுள்ளே கலைபயிலத் தொடங்கியது.

ஆயினும் மலர் விரியும் காலம் பொருந்திவரும் கட்டத்தில் யான் வெளிநாடு செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. 'யாமிருக்கப் பயம் ஏன்' என நண்பர்கள் வாழ்த்தி வழியனுப்பினர். திரு. து. ஈஸ்வரகுமார் கட்டுரைகளைச் சேர்த்து உதவினார். செல்வி சரோஜா தம்பிப்பிள்ளை எழுத்தமைப்பை அழகுறச் செய்திருந்தார். பிரதிகளை ஒப்புநோக்கி எழுத்துப் பிழைகளைத் திருத்தும் முக்கியமான பணியை திரு. எஸ். ஜெகதீசன் மேற்கொண்டார். புகைப்படங்களுக்குப் பொறுப்பெடுத்தார் விழாக்குழுத் தலைவர் திரு. எஸ். திருச்செல்வம். ஓவியர் சசி பத்மநாதன் அட்டைப் படத்தை ஆக்கித்தர முன்வந்தார். அப்புறம் என்ன?

மலர் வேலை இவ்விதம் இலேசாக முடிந்துவிட்டது. ஆனால், இந்த மலரின் மகரந்தமானவர் இலேசானவர் அல்லர். அதிபர் திரு. பொ. கனகசாபதி அவர்கள் மிகவும் கனதியானவர்; கனகமானவர். அவரை இத்தகையதொரு விழா மலருக்குள் அடக்கிவிட முடியாது என்பதை அவரது நண்பர்கள் நன்கு அறிவர்.

அதனால், இது அவரின் அரும் பணிகளை முழுமையாக மதிப்பீடு செய்ய விரிந்த மலர் என்பது பொருந்தாது. அவரது மணி விழா நினைவாகத் தொகுக்கப் பெற்ற ஒரு மலர்ச் செண்டு என்பதே பொருந்தும்.

அவர் பெரிய அதிபர். பெரிய கல்லூரிகளுக்கு அதிபராக இருந்த காரணத்தால் அவர் பெரிய அதிபர் ஆகிவிடவில்லை. அயராத உழைப்பினால், சமுதாய முன்னேற்ற நினைப்பினால், ஆற்றல் மிக்க மாணவர் உலகத்தை உருவாக்கிய மாண்பினால், அற்புதமான குணவியல்புகளின் கவர்ச்சியால் பெரிய அதிபரென எல்லோரும் மதித்துப் போற்றும் அளவுக்கு அவர் பவனி வருகின்றார். அவருடைய சொல்லுக்குப் பொருள் அதிகம். அந்தப் பொருளுக்கு அவரது மாணவர் உலகில் பெறுமதி அதிகம்.

அத்தகைய உத்தமருக்கு மணிவிழா என்னும் செய்தியைக் கேட்டுப் பல உள்ளக் கமலங்கள் முகிழ்ந்துள்ளன. அவற்றையெல்லாம் கொய்து ஒரு செண்டாக அவரது மணி விழா நடக்கும் இந்த நல்ல நாளிலே அவரது அன்பர்கள் சார்பிலும் விழாக் குழு சார்பிலும் அவருக்கு வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இயற்கை மலர்ச் செண்டு இரண்டொரு நாட்களில் வாடிவிடும். இதய மலர்ச்செண்டு வாடாதது; நித்தியமானது.

இந்த வாடாமலர்க் கொத்துக்கென்றே மலர்ந்த உள்ளக் கமலங்களுக்கும் அவற்றைக் கொய்து கொத்தாக்கப் பலவகையாலும் உதவ முன்வந்த செய்ந்நன்றி மறவாச் செம்மல்களுக்கும் விழாக்குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பது என் கடன்.

வாழ்க அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள்! வளர்க அவரது காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற தன்னலம் கருதா நடைமுறைத் தொண்டுகள்!

**வி. கந்தவனம்**
**மலர் ஆசிரியர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிலிருந்து ஒன்று

ஒன்றிலிருந்து ஒன்று என்பது பொதுவான விதிகளில் ஒன்று.

'அதிபர்' என்று நாம் எல்லோரும் அன்புடன் அழைக்கும் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் மணி விழாக் கொண்டாட்டம் உருவாகவும் அதுவே காரணமாக அமைந்தது.

1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி கவிஞர் கந்தவனம் அவர்களின் மணிவிழாப் பூர்த்தி வைபவம் மொன்றியலில் நடைபெற்றது. கவிஞர் அவர்களது குடும்பத்துடன் நானும் எனது மனைவியும், மற்றும் திருவாளர்கள் பி. ஞானேஸ்வரன், ரி. ஈஸ்வரகுமார் ஆகியோரும் ஒன்றாக ஒரே வாகனத்தில் பயணம் செய்தோம். விழாவிற்கு மறுநாள் ரொறன்ரோ திரும்பிக் கொண்டிருக்கும் வழியில், பலதும் பத்துமான பேச்சுகளுக் கிடையில், அதிபர் கனகசபாபதி அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் பற்றிய விடயமும் வந்தது.

இவ்வருடம் செப்டம்பர் 04ம் திகதி அவரது அறுபதாவது பிறந்த நாள் என்பது சந்தேகமின்றித் தெரிய வந்ததும், அவரது மணிவிழாவை அடக்கமான ஒரு விழாவாக, நடத்துவதென்று நாம் பயணம் செய்த வாகனத்துக்குள்ளேயே முடிவெடுத்து விட்டோம். உண்மையாகச் சொல்வதானால், அதிபர் அவர்களிடம் அனுமதி கேட்காமலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பதுதான் சரி.

இவ்வருட முற்பகுதியில் நாம் மீண்டும் ஒரு தடவை கூடிப் பேசினோம். இவ்வேளையில் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களும் எம்முடன் சேர்ந்து கொண்டார். மணிவிழாக் குழு உத்தியோகபூர்வமாக அமைக்கப்பட்டது. அதன் தலைமைப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. மொத்தத்தில், அதிபர் அவர்களது நண்பர்கள், இலக்கிய அன்பர்கள், பழைய மாணவர் என்னும் வகையில் ஐவர் அடங்கிய கூட்டாக மணிவிழாக் குழு அமைந்தமை எமக்குத் திருப்தியைத் தந்தது.

மணிவிழாக் குழு உருவாகிய கதை இதுவே!

''எவரொருவர் தமது உற்றம், வீடு, குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்கு வெளியே வந்து, பிரதிபலன் கருதாது ஏதாவது ஒரு வகையில் சமூகத்துக்கும் மக்களுக்கும் சேவை புரிகின்றாரோ, அவரது சேவை கௌரவத்துக்குரியது. அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர்'' என்ற கோட்பாட்டுக்கிணங்க, அதிபர் கனகசபாபதி அவர்களின் மணிவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

கனடாவைக் குட்டித் தமிழீழம் என்கின்றனர். என்னைப் பொறுத்தளவில், புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் தலைநகரமாக இது விளங்குகின்றது என்று சொல்வதே மிகப் பொருத்தம் போலத் தோன்றுகின்றது. அண்மைக் காலத்து எழுச்சி நிகழ்வுகள் இதனை ஆமோதிக்கின்றன. இங்கு வாழும் தமிழரது எதிர் காலத்தையிட்டு அதீத அக்கறை கொண்டு சேவை புரிந்து வரும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரில் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் முக்கியமாகத் திகழுகின்றார்.

கல்விப் பணி, சமூகப் பணி, பொதுப் பணி ஆகியவற்றுடன் எழுத்துப் பணியையும் கடந்த சில வருடங்களாக முக்கியமானதாக்கி அவர் ஆற்றிவரும் சேவைகள் மதிப்பிடற்கரியவை. இவ்வாறான ஒரு அறிஞர் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமே என்பதும், அவரது காலத்தில் வாழ்ந்து அவருடன் பழகச் சந்தர்ப்பம் கிடைத்ததே என்பதும் எமக்குப் பெருமை சேர்ப்பவையாகும்.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் 04ஆம் திகதியிலிருந்து வரும் ஓராண்டு காலத்தை, ''அதிபர் கனகசபாபதி மணிவிழா ஆண்டாக'' நாம் பிரகடனஞ் செய்துள்ளோம். இந்த ஒரு வருட காலத்தில், பல்வேறு மட்டங்களில், பலவேறு சங்கங்கள் அமைப்புகளாலும் அதிபர் அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதே எமது பெருவிருப்பம். இந்த வகையில் மணி விழா ஆண்டின் அங்குரார்ப்பண வைபவமாக நாம் நடத்தும் விழா அமைகின்றது.

மணிவிழா நினைவாக இரு நூல்கள் வெளியிடப்படுகின்றன. ஒன்று, மணிவிழா மலர். மற்றையது, தமிழர் தகவல் மாதாந்த மஞ்சரியில் கடந்த நான்காண்டுகளில் அதிபர் கனகசபாபதி அவர்களால் எழுதி வெளியான கட்டுரைகளில் பத்தினைக் கொண்ட தொகுப்பு. 'அதிபர் ஒருவரின் கூரிய பார்வை' என்ற பெயரில் இது வெளிவருகின்றது. மணிவிழா மலர் மணி விழாக் குழுவினாலும், 'அதிபர் ஒருவரின் கூரிய பார்வை' என்னும் கட்டுரைத் தொகுப்பு 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனத்தினாலும் வெளிக்கொணரப்படுகின்றன.

குறுகிய காலத்தில் மணிவிழா மலரைத் தயாரித்து வழங்கும் கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கும், மணிவிழாக் குழுவின் இணைச் செயலாளர்களான திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம், திரு. பி. ஞானேஸ்வரன், பொருளாளர் திரு. ரி. ஈஸ்வரகுமார் ஆகியோருக்கும் எனது மனமுவந்த நன்றிகள்.

மணிவிழா வெற்றிபெற உதவிய அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றிகள் என்றுமுண்டு.

**திரு எஸ். திருச்செல்வம்**
**தலைவர்**
**மணிவிழாக் குழு**
**1995 ஆகஸ்ட் 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோனாகி யானெனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!

- திருவாசகம்

# மகிழ்வும் வாழ்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# GREETINGS FROM MAHAJANA COLLEGE O. S. A. - CANADA

**M. Karthigesu**
Patron, Mahajana College O.S.A. - Canada
Former Chairman, Town Council, Kankesenturai

Steeped in history and tradition, Mahajana and Mahajanans have great pleasure in extending their greetings and felicitation to Mr. P. Kanagasabapathy on the occasion of his Mani Vizha that is being celebrated by the Tamil community of Toronto, Canada.

It is observed in common parlance that the quintessence of a man's personality is to be found in the sum-total of the styles of his accomplishments during a life time. This is what the French writer, Buffon, meant when he said "Le style c'est' l' homme" - "The style is the man". Viewed from a broader perspective, therefore, we are urged to visualise a variety of images when we think of Mr. P. Kanagasabapathy. Looking tall and handsome with an athletic - build and captivating smile, he has blossomed forth as a great teacher, a successful principal, an educationalist, a prolific writer in Tamil, a literary critic in his own right, a connoisseur of fine arts, a tireless community worker and above all a speaker on the stage with a flair for repartee and chaste humour. His styles of approach are as diverse as are his achievements. No wonder, therefore, his personality has caught the attention and imagination of his compatriots, old students and friends alike!

While felicitating him on his 60th Birthday, we take special pride in the fact that the Mahajana College Old Students' Association, Canada, stands privileged and enriched by his presidency. As a founding President, his leadership has been one of continuing inspiration for all the Mahajanans in Canada. Suffice to say, his self-less service to the cause of Mahajana will remain indelible in the hearts and minds of all Mahajanans.

We wish Mr. P. Kanagasabapathy and his children, Manivannan, Manimaran, Manimoli and Manivili the best of health and every success in all their endeavours.

We also have great pleasure in endorsing and associating ourselves with the glowing tributes that are being bestowed on him today.

We congratulate the Mani Vizha Committee, especially its Chairman, Thiru. S. Thiruchelvam, for their initiative in organising this richly deserved function.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
**Mahajana College Old Students' Association**
தெல்லிப்பழை, இலங்கை. Tellippalai, Sri Lanka.

22.05.1995.

# வாழிய, பல்லாண்டு வாழியவே!

எங்கள் கல்லூரியில் புகழ்மிக்க ஆசிரியராகவும் தலைசிறந்த அதிபராகவும் விளங்கிய திரு. பொ. கனகசபாபதி அவர்கள் இவ்வாண்டு மணிவிழாக் காணுகின்றார் என்பதை எண்ணித் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பூரிப்பில் மிதக்கிறோம். மகாஜனா அன்னையின் உயர்ச்சிக்கும் பெருமைக்கும் இவர் செய்த சேவைகள் பற்பல. எம் கல்லூரியின் பொற்காலம் எனப் போற்றப்படும் நற்காலத்துக்கு இவர் தம் ஆசிரியப் பணிமூலம் ஆற்றிய தன்னலமற்ற தூய சேவைகள் அவரிடங் கல்வி கற்ற மாணவச் செல்வங்களால் அன்றும், இன்றும் என்றுமே நினைவுகூரத்தக்கன.

எம் கல்லூரி அதிபராக மகாஜனா சிற்பியின் வழி நின்று அதே தரத்துக்குக் கல்லூரியைச் சகல துறைகளிலும் வளர்க்க, அதன் மகிமையை உயர்த்த தன் உடல் பொருள் ஆவி அனைத்தையுமே அர்ப்பணித்தவர். அதிபராகிப் பெரும் பொறுப்புக்களைச் சுமந்த போதும், ஆசிரியப் பணியையுங் கைவிடாது தன்னால் இயன்றளவு மாணவருக்குக் கல்வியைப் புகட்டுவதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டு விளங்கினார். எத்தனையோ சிறந்த வைத்திய நிபுணர்களையும், சிறந்த நல்லாசான்களையும், பல்துறை விற்பன்னர்களையும் தன் அயராத சேவையால் உருவாக்கிய பெருந்தகையாக இவர் மிளிர்ந்தார்.

பணிவுடைமை, இன்சொல் பேசுதல் ஆகிய வாழ்க்கையைத் தன் அணிகலன்களாகக் கொண்டு தன்னுடன் பழகியவர்களைத், தன்னிடங் கல்வி கற்றவர்களைத் தம்பாற் கவர்ந்திருந்தார். தம்மை எதிர்ப்பவர்களையுங் கூடப் பொறுத்து அணைத்து, அனுசரித்தே எக்காரியத்தையுச் செய்ய முற்படுவார். எல்லோரிடமும் இதமாகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சிறந்த நற்குணசீலர்.

இன்றுகூட எம் கல்லூரியின் வளர்ச்சியையே தன் நோக்கமாகக் கொண்டு முழு மூச்சுடன் இயங்கி வரும் இப்பெருந்தகையின் பணி கண்டு எம் சங்கம் பேருவகை கொள்கின்றது; பெருமிதமடைகின்றது. மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கத்தினரின் பங்கு எவ்வளவு அவசியமானது, முக்கியமானது என்பதைத் தாம் அதிபராக இருந்த காலத்தில் எவ்விதம் உணர்ந்து நடந்தாரோ, அவ்விதமே இன்றும் பழைய மாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்து, உலகெங்கும் பரந்து கிடக்கும் எம்மவர்கள் தம் நாடுகளில் எல்லாம் எம்கல்லூரியின் கிளைச் சங்கங்களை அமைக்கத் தம் ஆலோசனைகள் மூலம் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி வருகிறார். அவரின் நற்செயல்களைப் போற்றுகின்றோம். அதற்குத் தலை வணங்குகின்றோம்.

இத்தகைய உத்தமரை, சற்குணரை இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என எம் சங்கச் சார்பில் வாழ்த்துகின்றோம்.

வணக்கம்.

**சி. உருத்திரலிங்கம்**
**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,**
**தெல்லிப்பழை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் — பாரிஸ்

**ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE MAHAJANA - PARIS**

A. A. E. C. M - P.
137, Rue du Menilmontant,
75020 Paris.

*Président :*
A. Jeyakumar

*Vice Présidents :*
K. Kanakeswaran
Y. Sivalingam

*Secrétaires Joint :*
S. Kanesalingam
Mme. P. Karunaivel

*Trésorier :*
S. Sutharsan

*Membre de Comité :*
S. Manoharan
P. Yogarajah
S. Ithayamoorthy
Mme. V. Thayalan
A. Sivakumaran

## வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான் என்பதே மனிதவியல் கோட்பாடு அல்ல. எப்படியும் வாழலாம் என்போர் பலர். இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறுப்போர் சிலர். அதிலும் தாம் வாழும்போது மற்றவர்களையும் வாழவைத்து சமுதாய வழிகாட்டியாக வாழ்வோர் ஒரு சிலரே.

அந்த வரிசையிலே நல்லாசானாக, நல்வழிகாட்டியாக தான் சார்ந்த சமுதாயத்திற்கு 35 வருடங்களுக்கு மேலாக தன்னை அர்ப்பணித்துக் கல்விச்சேவை ஆற்றிவரும் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் உயர்திரு. கனகசபாபதி அவர்கள் மணிவிழாக் கொண்டாடுவதையிட்டு பிரான்சில் உள்ள மகாஜனா பழைய மாணவர்களும் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். கல்விமான் கனகசபாதியின் மணிவிழா பெருவிழாவாகவும், சிறப்பாக நடைபெறவும், மகாஜனக் கல்லூரியின் பொற்கால நாயகர்களில் ஒருவராக மதிக்கப்படும் அதிபர் அவர்கள் நீடுழி காலம் வாழவும், பிரான்ஸ் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

**A. ஜெயகுமார்**
**தலைவர்**
**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**பிரான்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளையின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியர், அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களுக்கு மணி விழாக் கொண்டாடி மலர் வெளியிடுவதையிட்டுப் பெரு மகிழ்வடைகிறோம். எமது கல்லூரியின் அதிபர்களுள் தமக்கெனத் தனித்துவப் பாணியைக் கொண்டவருக்கு மணி விழா எடுத்தல் சாலவும் பொருத்தமானதே.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் இருந்து எண்பதுகளின் முற்பகுதிவரை அவர் எமது கல்லூரியில் ஆசிரியராக, பின் அதிபராக இருந்து அரும்பெருஞ் சேவையாற்றினார். அக்காலத்தில் நாம் களம் பல கண்டோம்; வளம் பல பெற்றோம்; வெற்றி பல சமைத்தோம். அகில இலங்கை ரீதியில் நடைபெறும் நாடகப் போட்டியில் தொடர்ந்து பத்து வருடங்கள் முதலாமிடம். அவ்வாறே உதைபந்தாட்டப் போட்டியில் மாவட்ட ரீதியில் எட்டு வருடங்களாகத் தொடர்ந்து வெற்றிக் கேடயம். இது போன்ற பல சாதனைகள் எமது முன்னை நாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதியின் காலத்தில் நடந்தன.

விடியலில் வெள்ளை ஸ்கூட்டரில் கல்லூரிக்கு வந்து, பொழுதுபட்டபின் வீடு செல்லும் வரைக்கும் அவரது உலகம் நமது கல்லூரி. அக்காலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் பரவலாக முளைவிடும் காலம். இக் காலத்தில் பிரத்தியேக வகுப்புக்களை சனி, ஞாயிறுகளில் நடத்தி, தானே தாவரவியல் பாடத்தைக் கற்பித்தார். பெருந்தொகையான மாணவர்களைப் பல்கலைக்கழகம் புக வழி வகுத்தார்.

''சென்ற இடங்கள் சிறக்கப் பணியாற்றி நின்ற பெரியன்'' என வாழ்த்துவதோடு, தொடர்ந்தும் கல்லூரியின் வளர்ச்சிக்குக் கனடாவிலிருந்து பணியாற்ற நீண்ட ஆயுளை இறைவன் கொடுப்பான் என வேண்டிக் கொள்கிறோம்.

''வெல்க மகாஜனா மாதா!''

திரு. இ. திருநாவுக்கரசு
திரு. ஜெ. ஜெகநேசன்
இணைச் செயலாளர்கள்

## SKANDA VARODAYA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION (CANADA)

Mr. Kanagasabapathy is a distinguished old student of our college. We take great pleasure in sending our best wishes on his 60th birthday celebration.

May God bless him with continued good health and prosperity to serve the Tamil community and the cause of education.

Happy birthday!

Anton K.Sandrasagra
Secretary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் – ஐ.இ
# TELLIPPALAI MAHAJANA COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION - UK

**PRESIDENT:**
Mr.G.Natgunan
67 Hazelmere close
Northolt
Middlesex UB5 6UP
0181-841 5186

**TREASURER:**
Mr.S.Rajkumar
14 Kneller Road
New Malden
Surrey KT3 5NE
0181-395 8573

**SECRETARY:**
Mr.N.Sri gengatharan
27 Orpheus Tower
Desmond Street
London SE14 6HY
0181-692 5240

மகாஜனா!

கல்வி கலை விளையாட்டுத்துறைகளில் அன்றும் இன்றும் துலங்கும் ஒரு மகத்துவம் நிறைந்த கல்வி நிறுவனம். எல்லோரும் இணைந்த குடும்பம் என்ற உணர்வு.

மாணவர், பழைய மாணவர், ஆசிரியர், அதிபர், பெற்றோர் என்ற இக்குடும்பத்தினரின் உண்மையான உணர்வுபூர்வமான உழைப்பின் அர்ப்பணிப்பு. இவை மகாஜனா வெற்றியின் காரணிகள். இக்காரணிகள் வரிசையில் -

விஞ்ஞான ஆசிரியராக - ஒழுங்காற்றல் முதல் பல்வேறு துறைப் பொறுப்பாளராக - தொடர்ந்து அதிபராக மகாஜனாவில் பல்லாண்டுகள் பரிமளித்த திரு. கனகசபாபதி அவர்கள் தன் சிறந்த சேவையால் உறவு பூர்வமான ஆசிரியர் மாணவர் பெற்றோருடனான அணுகு முறைகளால் பலரது நெஞ்சில் நிறைந்த அதிபராக இன்றும் திகழ்கிறார்.

மகாஜனாவின் சிற்பி அமரர் ஜெயரத்தினம் அவர்களின் ஆளுமைத்திறனும் தன் குரு அமரர். ஓரேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் மனித நேயமும் நிறைந்து இவரின் சேவைக்கு வலுவூட்டின எனலாம்.

கனக்ஸ் என அன்புடன் பலரால் அழைக்கப்படும் திரு. கனகசபாபதி அவர்களது சேவைகள் இன்றும் கனடாவின் மகாஜனா பழைய மாணவர் சங்கத்தின் மூலம் தொடர்வது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

ஆற்றல் வாய்ந்த ஆசிரியருக்கு
ஆளுமை நிறைந்த அதிபருக்கு
மனிதம் நிறைந்த மாமனிதனுக்கு
மகாஜனாவின் பெருமைக்குரிய மகனுக்கு வயது அறுபது ஆவதை ஒட்டி இடம்பெறுகின்ற விழாவின் போது அவரை நீடுவாழ வாழ்த்துவதில் இலண்டன் மகாஜனாவினர் பெருமை அடைகின்றனர். செய்ய வேண்டியதைக் கால மறிந்து செய்யும் கனடா அன்பர்களைப் பாராட்டுகிறோம்.

மலர் சிறப்பாக அமையவும் விழா வெற்றி பெறவும் வாழத்துகின்றோம்.

G. நற்குணன்
தலைவர்

நாக. சிறீகெங்காதரன்
செயலாளர்

26.06.95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் மங்காத நினைவுகள்


அமரர் திரு. சு. குமாரசுவாமி அவர்கள், 1965இல் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் மந்த நிலையேற்பட்டது யாவரும் அறிந்த உண்மை. இந்த நாட்களில் புத்தூரையும் அதன் அயற் கிராமங்களையும் சேர்ந்த மக்கள் மனக் கவலையுடன் இருந்ததையும், தம் பிள்ளைகளின் படிப்பு, பழக்க வழக்கங்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனவே என்று கலங்கியிருந்த நாட்களையும் நான் நன்கு அறிவேன். வெளியூர் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பிக் கல்வி பயில வைப்பதற்குப் பண வாய்ப்பு இல்லாமையால், 'குமாரரைப் போன்று மீண்டும் ஒரு தெய்வம் எமக்குக் கிடைக்காதா' என்று ஏங்கியிருந்த நாட்களில், வரப்பிரசாதமாக வந்தமைந்த பெருந்தகைதான் இன்று மணிவிழாக் காணும் என் இனிய நண்பர் திரு. பொ. கனகசபாபதி ஆவார்.

ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் அதிபராக 1971இல் பதவியேற்ற திரு. கனகசபாபதியின் வருகையால் எம்மூர் மீண்டும் மனத்தென்பு கொண்டு பாடசாலையைப்பற்றிப் பெருமையுடன் பேசத் தொடங்கினர். அதிபர் பதவியேற்ற அன்றே, பல உன்னத திட்டங்களைத் தீட்டி, எவர்க்கும் முன்னோடியாக நின்று இரவு பகலாக அயராது உழைத்தார். மாணவர்களும் புத்துணர்ச்சி பெற்று தமது கல்வி வளர்ச்சிக்காகவும், கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டார்கள். கிராமம் கிராமமாகச் சென்று பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைக்கும்படி மக்களை ஊக்கப்படுத்தினார். இவரது அதிபர் காலத்தில் எமது பாடசாலை கல்வி, விளையாட்டுத்துறையில் முதல் இடங்களை வகித்தது.

திரு. கனகசபாபதி ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமல்ல. இவர் பாடங்களை இனிதே புகட்டக்கூடிய ஒரு சிறந்த ஆசிரியராகவும் போற்றப்பட்டு வந்தார் எனபது கண்கூடு. முக்கியமாக விலங்கியல் (Zoology) பாடத்தைத் திறமையுடன் கற்பித்தார் என்பதற்கு அவர் காலத்தில் வெளிவந்த க. பொ. த. (உயர் தரம்) பரீட்சைப் பெறுபேறுகளே சான்று பகரும். இவர் படிப்பித்த காலங்களில் விலங்கியல் பாடத்தில் எமது கல்லூரி முன்னணி இடத்தைப் பெற்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடத்தை விஸ்தரிக்கும் நோக்கில் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட வேண்டும் என்று தீர்மானித்து இரவு பகலாக, வார இறுதி நாட்களிலும் கூட ஊர் மக்களிடம் வீடு வீடாகத் திரிந்து நிதி சேகரித்தமையைப்பற்றி நம்மூர் மக்கள் பெருமையுடன் பேசியதை என் காதால் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். இப்படிப்பட்ட தியாகி ஒருவர் நம்மிடையே தோன்றுவது மிகவும் அரிதிலும் அரிதாகும்.

திரு. கனகசபாபதி அவர்கள் ஈழத்தில் மட்டுமல்ல, கனடாவிலும் தன் தியாக உணர்வைக் காட்டத் தவறவில்லை. தமிழ் மக்களின் வளர்ச்சிக்காக இரவு பகலாகத் தன்னை மறந்து செயலாற்றி வருகிறார் என்பது எங்கள் எல்லோர்க்கும் தெரிந்த உண்மை. ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவர் சங்க (கனடா கிளை)த்தின் சிரேஷ்ட காப்பாளராக இருக்கும் திரு. கனகசபாபதி அவர்களின் சிறந்த ஆலோசனைகள் எமது சங்கத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

இன்று மணிவிழாக் காணும் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் பல்லாண்டு காலம் சுகமாக வாழ வேண்டும் என்று எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகிறேன். வாழ்க என் நண்பர் திரு. கனகசபாபதி.



**வே. இலகுப்பிள்ளை**
தலைவர், பழைய மாணவர் சங்கம் (ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி)
சிரேஷ்ட விஞ்ஞான ஆலோசகர்
கனேடிய அணுசக்திச் சபை, ஒட்டாவா
பேராசிரியர், பௌதிகத்துறை
காள்ரன் சர்வகலாசாலை, ஒட்டாவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDU TEMPLE SOCIETY OF CANADA

*(A regd. religious and Charitable Organization. Revenue Canada Reg. No: 0485094-39-13)*
**Temple Site:10865 Bayview Avenue, Richmond Hill Ont. L4S 1M1 Tel.: (416) 883-9109**

Mailing Address
P. O. Box 22092
45 Overlea Blvd.
Toronto, Ont. M4H 1N9
Canada

*President:*
N.SIVALINGAM

*Vice-President:*
S.S.KRISHNAN

*Secretary:*
K.VENKATARAMAN

*Asst-Secretary:*
K.SANMUGADAS

*Treasurer:*
K.JEYANATHAN

*Asst-Treasurer:*
V.BASAVIAH

*Trustees:*
A.ARASARATNAM
M KODEESWARAN
V.G.KRISHNAN
R.K.MOORTHY
K.NATHAN
N.RAVINDRAN
K.S.SATHI
S.SENTHIVEL
N.R.SUBRAMANIAM
ASHOK TILOKANI
T.VIGNARAJAH
KUNJ VORA
P.YACHAMANANI

# மாமனிதர் வாழ்க!

மணிவிழாக் கொண்டாடும் தமிழினத்தைத் தலை நிமர்த்திய மகாஜன மணிக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மகாஜனன் என்ற வகையிலும் தமிழன் என்ற வகையிலும் மகிழ்ச்சியடைகின்றேன். இம் மணிவிழாக் கொண்டாடும் இவ் அற்புதப் புருஷர் தமிழினத்திற்குச் செய்த சேவைகள் சொல்லில் அடங்காதனவாகும். தமிழ் ஈழத்திலும் தமிழனைத் தலை நிமிரச் செய்தது போதவில்லை என்பதனால், கனடாவிலும் தமிழன் உள்ளான், அவனுக்கும் தனது பணி தேவை என்ற பரந்த உள்ளங் கொண்ட இவர் தனது குடும்பத்துடன் 1987இல் கனடாவிற்குள் கால் வைத்தார். இங்கே வந்தவர் இளைய தலைமுறையில் தொடங்குவதன் மூலம் தமிழையும் தமிழனையும் வளர்க்கலாம் எனக் கருதினார். எனவே North York கல்விச் சபையில் பல்கலாச்சார கல்வி ஆலோசகராகச் சேர்ந்ததின் மூலம் தறிகெட்டு நிற்கும் தமிழ் இளைஞர்களை
நல்வழியில் இட்டுச் செல்கின்றார்...
நல்வழியல் இட்டுச் செல்வார்.....


இவ்வாறு தமிழினத்துக்கு உழைத்துவரும் இம் மேதை தன் குடும்பத்தையும், தன் மணிகளையும் தலை நிமிர்த்த தன் கடமையிலிருந்து தவறவேயில்லை. இக்கடமை தவறாத மகாஜனன் தமிழ்ப் பணி என்ற கடமையிலிருந்தும் தவறமாட்டார். எதிர்காலத்தில் இம் மாமனிதரின் தமிழ்ப் பணி மேலும், மேலும் வளர வேண்டும் என்றும், இவர் பவள, நூற்றாண்டு விழாக்களையும் கொண்டாட வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**நா. சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
50 பிளாக்குவெல் அவெனியு அலகு 45
ஸ்காபரோ ஒன்ராறியோ கனடா M1B 1k2.
தொலைபேசி:(416) 293 4697.



# வாழ்க இன்னும் அறுபது ஆண்டுகள்!

எமது இணையப் போஷகரும் எனது நீண்ட கால நண்பருமாகிய திரு. பொன். கனகசபாபதி அவர்களின் மணிவிழாவன்று எமது இணையத்தின் சார்பில் எமது இனிய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வட மாகாணத்தின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான மகாஜனக் கல்லூரி அதிபராக அவர் கடமையாற்றிய காலத்திலேதான் நான் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

நிர்வாகத் திறமை, கல்வித் தகைமை, தன்னலங்கருதாத சமூக சேவை போன்ற குணாதிசயங்களில் சிறந்து விளங்கும் சீரிய பண்பாளர் இவர்.

இன்னும் அறுபது ஆண்டுகள் வாழ்ந்து எமது சமூகத்திற்குப் பல தொண்டுகள் ஆற்ற வேண்டுமென வாழ்த்தி, இறைவனை வணங்குவோமாக!

**சின்னையா சிவநேசன்**
**செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BEST WISHES!

I am delighted to write this felicitation to the souvenir published on the occasion of Mr. Kanagasabapathy's sixtieth birthday. I have associated with him for over 40 years. Though far removed geographically from his arena of activity, I have followed his progress in life and his contributions to the education community and the community in general in educational welfare.

As a student in India, from where I began my association with him he was brilliant and dedicated with clear ideas of what he was going to do after completing his degree. The idea of serving as a teacher was deeply implanted in his mind. It is no wonder that with his brilliant academic record and ambition to serve as a teacher, he turned out to be one of the best (if not the best) teachers of zoology in Jaffna of his time, no mean achievement by any standards. He was looked upon as a model by his students because he led them by example.

His brilliance was not confined to the four walls of the classroom. As a principal he had a mission to make Mahajana which was already great, greater. I have heard scores of his students who had come to the hill country in Sri Lanka as teachers sing his praise both as a teacher and as a principal *par excellence*.

He is one of the very few Sri Lankans in Canada to achieve fame. He continues his service to education with devotion and is of immense help to those Sri Lankans seeking educational advice.

I have not gone into the details of his work and achievements because they are too well known to bear repetition. But I have to point out that he has achieved fame above all because of his knowledge, sincerity of purpose, honesty, dedication, putting service before self, his easy-to-approach nature and himself. He is defintely one of those who will leave behind footsteps in the sands of time.

I wish him all the best in life and many more fruitful years of life.

**R. Sivasithambaram**
Emeritus Director of Education, Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONGRATULATIONS!

I am fortunate to have been taught by many great educators throughout my years, all of whom have influenced my life in some way, but no one has had a greater effect on my life than Mr Kanagasabapathy. Over our thirty five year acquaintance, he has not only been a mentor to me, but a friend as well.

The first time I met Mr Kanagasabapathy, he had taken the assignment to teach my advanced level Zoology classes at Mahajana College. His personality, wisdom and excellence in teaching won the admiration and praise of nearly everyone in Jaffna. Not long after teaching me the wonders of the animal kingdom, he became the principal of Puttur Somaskanda College and subsequently Mahajana as well, but unfortunately a few years after I left school.

The position at Mahajana came about because Mahajana had just lost the great Mr. Jeyaratnam to retirement and the college searched for someone distinguished enough to fill the void. Mr. Kanagasabapathy's reputation earned him the position which he successfully carried out. He continued on in Mahajana, maintaining the school's excellence in education, athletics and other extracurricular programs. He moved on and retired from the college.

He now resides in Canada, where I visit him on every occasion I can. I watch with admiration how he has become a leader and a confidant of the Tamil community as well as to his friends and alumni of Mahajana College.

My family and I would like to take this opportunity to congratulate Mr. Kanagasabapathy on his sixtieth birthday and wish for many more.

**Dr. M. Ganesan**
Chairman, Department of Medicine
and Pulmonary Medicine
Milford Hospital
Milford, Ct. U.S.A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KANNEX : A PERSONIFICATION OF DEVOTION AND VOLUNTEERISM

Bali Gill former
Multicultural Consultant,
North York Education Board

Kannex is not a kind of person you meet every day: for me, he was a rare find when in 1990, a friend introduced him to me to work with Tamil community and students in the Multicultural Services of North York Education Board. He impressed me instantly with his minute observation as well as his apparent commitment to his work as on educational assessor. He has an innate passion for going beyond the confines of his duty when it comes to helping somebody who needs his intervention. His affable demeanor as well as his profoundly caring treatment of his community have earned him a great deal of respect in the educational community of North York board of education. Teachers and administrators depend on him heavily in terms of educational assessments and trust his observations and advice pertaining to the Tamil students and community. His genuine concern with his community is greatly warranted at this time when the community is struggling to get established in its new country of residence. The community also needs a great deal of direction and support in educational and social fields. And Kannex is the fittest person for this role. I envy the Tamil community for having Kannex as a community activist.

I am pleased to learn that the Tamil community is honouring Kannex to recognize his selfless services. Kannex deserves this honour. My heartiest congratulations, Kannex!

Bali Gill

# MESSAGE OF GOOD WISHES

On the occasion of the 60th birthday of Mr. P. Kanagasabapathy, very beloved and leading member of our family, it is with great pleasure that we join the friends and well wishers who are organising the birthday celebration in Toronto, Canada. Being a leading educationist and a man of academic and professional distinctions, the family has been proud of his achievements in Sri Lanka, in Nigeria and now in Canada.

His guiding light "Darly" is no more to join in the celebrations and is no more to guide him, help him and to stand with him to enjoy his rising popularity. No doubt her soul will be consoled by the subsequent events.

We are happy to join all those in Canada in wishing Mr. Kanagasabapathy long life, good health, prosperity and further elevations in his profession and success to the children.

K. Sivagananathan & Family
K. Saravanapavan & Family
K. Iskandaraja & Family
K. Aravinthan & Family
N. Suthanthiramoorthy & Family

Colombo
September 4th, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க**

அன்புமலர் பூத்திருக்கும் அறிவழகு சேர்த்திழுக்கும்
இன்பநலப் புன்முறுவல் எழில்முகத்தை அலங்கரிக்கும்
பண்புமகள் பதியெனவும் பழரசத்தின் நதியெனவும்
கண்பெறவே பவனிவரும் கனகசபா பதியிவரே!

**ன**

விலங்கியலைச் செப்பமுற விளக்குவதில் இன்றுவரை
இலங்கையிலே இணையறியா ஏற்றமிகும் ஆசிரியர்
பலங்கனியின் சுளையெடுக்கும் பக்குவம்போல் மாணவரின்
கலங்கலெலாங் களைந்தெடுக்கும் கனகசபா பதியிவரே!

**க**

சீரியநற் கல்வியிலே சிறந்தவிளை யாட்டினிலே
தாரணியில் தனக்கிணையில் லாதவகை தலையெடுத்த
பூரணமா கல்லூரி மகாசனவின் புகழ்வளரக்
காரணருள் கனத்தவராம் கனகசாப பதியிவரே!

**ச**

ஆதியிலே ஆசிரியர் பாதியிலே அதிபரெனச்
சாதனைகள் பலபுரிந்து சரித்திரங்கள் நாட்டியவர்
சோதனையில் வேதனையில் தொடர்ந்துமகா சனமகளின்
காதலராய்ப் பணிபுரியும் கனகசபா பதியிவரே!

**பா**

அதிபுகழார் சோமஸ்கந் தாவதிபர் ஆகியிவர்
முதுமரபால் தாழ்ந்தவர்கள் முன்னுயரப் பலவழிகள்
மதிமுறையால் வகுத்தரிய சமதருமக் கல்வியினால்
கதியளித்த கருணைமகன் கனகசபா பதியிவரே!

**ப**

எங்குபணி புரிந்திடினும் எல்லவர்க்கும் கல்வியெனும்
பங்கமிலாக் பகுத்தறிவுப் பரந்தநெறிப் பயிர்வளர்த்தே
இங்கிதமாய்ச் சலிப்புவெறுப் பேதுமின்றிப் பகலிரவாய்
கங்கையெனப் பாய்ந்துவரும் கனகசபா பதியிவரே!

**தி**

வெல்வினைகள் புரிந்திடவும் மேன்மையுடன் மாணவர்கள்
நல்வழியில் நடந்திடவும் நற்றமிழர் நுண்கலைகள்
பல்வகையால் பயின்றிடவும் பழுத்தகனி போன்றநிறை
கல்வியினை அளித்துநின்ற கனகசபா பதியிவரே!

**யி**

புலம் பெயர்ந்து புதுவாழ்க்கை புரிகனடா நாட்டினிலும்
நிலைதளர்ந்து தமிழிளைஞர் நெறிமாறிப் போகாது
நலம்புரியும் தமிழ்க்கல்வி நாகரிகம் தழைத்துவரப்
பலபணிகள் செய்துவரும் கனகசபா பதியிவரே!

**வ**

வினைத்திறமும் மதித்திறமும் வித்துவமும் கொண்டுபல
இனத்தவரின் கல்வியிலும் ஈடுபட்டு வடயோக்கின்
அனைத்தறியா லோசகராய்ப் பணியாற்றி அருந்தமிழர்
கனத்தபுகழ் காத்துவரும் கனகசபா பதியிவரே!

**ரே**

இணையில்லாத் துணையாகி இதயத்து மூச்சான
அணியில்லக் கலைஅமிர்தம் அகல்விளக்காய் மாறியபின்
மணிமக்கள் நால்வரையும் வளர்க்கின்ற கடமையிலே
கணமேயும் கண்துஞ்சாக் கனகசபா பதியிவரே!

**!**

புதிதான சிந்தனைகள் பொருளாகிப் பயனாக
இதமாகப் பணியாற்றி எல்லோர்க்கும் வழிகாட்டிப்
பதினாறின் எழிலுடனே மணியாண்டிற் பவனிவரும்
மதிவாணர் கனகசபா பதிவாழ வாத்துவமே!

**- வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாப் போற்றி வாழ்த்துவோமே!

- சிவா. சின்னத்தம்பி -

*சீரணியம்மன் வீற்றிரு சீர்சண்டிலிப்பாய் ஊரில்
தாரணியுவந்த தமிழ் திருபொன் ஐயாவின்
ஆரணி அணங்கு ஆச்சிமுத்து உறவால் உதித்த
காரணன் திரு. பொ. கனகசபாபதி கருவே.*

*ஆலங்குழாய் தமிழ்க்கலவனில் ஆரம்பக்கல்வி
ஆங்கில இந்துவிலோ இடைநிலைக்கல்வி
இஸ்கந்த வரோதயாவில் உயர்ந்திட்ட புள்ளியால்
இந்தியபல்கலைக் கழமோ இவரை அணைத்ததே அள்ளி.*

*துள்ளிய இளமைத்துடிப்பின் திறமையில் துள்ளி
பள்ளியில் முதன்மையாய் படிப்பினில் துள்ளி
புள்ளியோ பெருகிப் பெரும் புள்ளியு மாகி
வெற்றியை மேவிய பொன் வெகுமதியானான்.*

*விலங்கியல் கற்றுயர் வித்துவான் ஆகியே
இலங்கையன் தானென துலங்கியும் காட்டி
புலமையின் பரிசினைபெற்ற புகழ்பட்டதாரி - தெல்லிப்பழை
தலம் மகாஜனாவில் தரமிகு உபாத்தியானான்.*

*உயர்ந்தநல் உருவம் உவப்பிலா உள்ளம்
அயர்ந்திடா உழைப்பு அளப்பிலா ஆர்வம்
அசைந்திடா உறுதியும் ஆளுமை ஆற்றலுமாய்
இசைந்துமே இன்கலைப் பிரியனாய் எளிமையாய் உளன்.*

*இலக்கிய ஆய்வலன் இணையிலா வாசகன்
கலக்கிய ஆசான் கடமையில் கண்ணினன் - சிலர்
வலைக்குள் தலைமை உபாத்தியாய் வாழ்ந்ததால் ஓர்
நிலையில் இருந்து நிமிரா நின்ற நற்குரு.*

*தெல்லிப்பழை திறன்மிகு மகாஜனா திருக்கல்லூரியில்
துல்லியமாகியே துலங்கித் துணிந்ததோர் அதிபராய்
கல்வியே கருந்தனம் கற்றிடவருக கற்பீரென்றே
நல்மாணவராக்கி நிறைவளாகம் அனுப்பிய நல்ல குருவே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறத்தின் மகத்துவத்தை நயமாகக் கொண்டகணம்
இல்லறத்தில் குளித்திடவே அமிர்தகௌரிநாயகியை மணந்து
பல்லறங்கள் புரிந்து பெற்றெடுத்த பிள்ளைகளே
நல்மணி வண்ணன், மாறன், மணிமொழி, மணிவிழியாம்.

நிலபுலம் இருந்தும் நலம்பல புரிந்தும்
இலமென என்றுமே ஈழத்தமிழரோ இன்னலுக் காகி
பலமதை இழந்து படித்தவராகினும் பந்தம் பிடித்தே
நலம்பெறும் நிலையில் நாடே வெறாதெவர்க்கு.

கற்றுயர்ந்து கனிந்துதிரும் கனகசபாபதி கோன்
மற்றவர்க்கென மிளிர்ந்துள மானுட மாணிக்கமாகியே
சுற்றவரின் சிறப்பொற்றுமையை சீர்சேவையுமாக்கிப்
பற்று வைத்துப் பாடசாலைகளைப் புகழ்பெறவைத்த பதியே.

நாடுவிட்டு நைஜீரியாசென்று நல்தொழில் பெற்றுமங்கே
பாடுபட்டுப் பணிதொடரப் பாதை திறந்ததுபோல்
இருண்ட கண்டமதில் இருளகன்று ஒளி வீசச் சற்று
பொருண்மியத்தில் புரட்சிசெய்த பொ. கனக சபாபதி.

தமிழரென்ற காரணத்தால் தன்கடன்பணி செய்தே
அமிழ்தினும் இனிய இன்மொழி பரப்பியெங்கும்
கமழ்ந்திடச் செய்திடவே கனடா வந்துபெருந் திறனால்
கல்விச்சபை கண்டேபல் கலாச்சாரப் பணி தொடர்ந்தபதி.

மணிகளைப் பெற்றநல் மணிவிழா நாயகன்நற்
பணிகளைச் செய்திடப் பக்கபலமாயிருந்த பதியரசியோ
துணைவனைச் சடுதியில் விட்டுப்பிரிந்த துயரம்
தணியுமோ வாழ்விலவர்க்குத் தமிழே சொல்வாய்.

தமிழுக்கென்றும் தீபமாய் சுடர்விடும் சபாபதி
அமிழ்தானவர் அன்பர்க்கு ஆராத்தி எடுத்திடல் தகுமே
மகிழ்வானவர் மாவித்தகர்க்கு மணிவிழா எடுப்பதெம்கடன்
புகழ்பெறவே மணிவிழாப் போற்றி வாழ்த்துவோமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்குரிசில் வாழியவே!

கல்வியினைத் தம தின்னுயி ராகவே
கருதிடும் ஈழத் தமிழருக்கு
தெல்லிநகர் தனில் அறிவொளி பரப்பியே
திகழ்ந்த மகாசனப் பள்ளியிலே
இல்லை இவன்பணிக் கீடுஇணை யாமென
யாவரும் விதந்த பெருமையுளான்
வல்லபேர் அதிபராம் கனக சபாபதி
வாழிய நீடு என வாழ்த்துவமே!

செந்தமிழ் மக்களின் வாழ்வு நலத்தினைச்
சிந்தையிற் கொண்டவன் தன் பணியாற்
தந்த மருத்துவர் எந்திர வல்லுநர்
சார்கலை மேலவர் எத்தனை பேர்!
சொந்தநிலம் கலை சொத்து நலங்களை
துறந்து பெயர்ந்த தமிழ ரினம்
வந்த இடத்திலும் வண்டமிழ் பேணிட
வைத்திடும் சீரியன் வாழியவே!

அன்னை தமிழ்மொழி யைக்கனடாவினிற்
ஆர்வுடன் பள்ளிகள் பயிற்றுதற்கு
முன்னின் றுழைத்து முன்னேறிச் செயித்தவன்
முத்தமிழ் வித்தகன் மூதறிஞன்
பொன்னும் மணியும் கலந்த அணியெனப்
பூந்தமிழ் ஏடுகள் தோறும் இவண்
தன்னுடைக் கல்விக் கருத்தினைத் தந்தடும்
கல்விக் குரிசிலை வாழ்த்திடுவோம்!

ஆறுபத் தாண்டுகள் ஓடி மணிவிழா
அதிபர் அடைந்தனன் அன்ப ரெலாம்
கூறும் அவன் திறம் கல்விநலம் பணி
கூடி விதந்தனர் நன்றியுடன்
பேறாம் எமக்கிந்தப் பெரியோன் கிடைத்தது
பீடுற ஆண்டுகள் நூறுக்குமேல்
வீறொளிர் சேவைகள் செய்திவர் விளங்கிட
வேண்டுதல் செய்குவம் நின்மலனை!

**- அளவையூரான் -**

# அறிஞ நீ வாழி, வாழி!

*கனகசபா பதிபேர் ஐயன்*
*காதலாய் கல்வி கண்டோன்*
*மனவய மாகக் காந்த*
*வலயத்துள் பள்ளி செய்தோன்*
*இனமுயர் குறிக்கோ ளொன்றே*
*இதயத் தாலெழுதி வைத்தோன்*
*தினமின்று அறுப தானான்*
*திருவிழாக் கண்டான் வாழி!*

*அறுபது ஆனான் இன்று*
*அகவைக்கு ளிளைஞ னாகி*
*தருமுயர் பதவி கொண்ட*
*தமிழனாய் கனடாத் தேசம்*
*உறுமொரு செம்மல் என்ற*
*உயர்வினால் தமிழன் கல்வி*
*பெறவொரு வழியே செய்த*
*பெருந்தகை வாழி! வாழி!!*

*மகாஜனன், உலக முற்றும்*
*மன்றங்கள் வழுத்தும் மேலோன்*
*தகாதவை புகலாத் தக்கோன்*
*தானெழத் தமிழ் உயர்ந்த*
*தகைமையால் மணிவிழாவை*
*சான்றவர் நடத்தக் கண்டான்*
*வகையுற மேலும் நன்மை*
*வழங்கியே வாழி! வாழி!*

**வே. இராஜலிங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதை அடையும் ஆசான்

இடர்கள் கலைந்து இன்பம் சூழ
எடுத்து மகிழ்வோம்
துளிர்த்தன இலைகள் என்று
தொட்டு மகிழ்வோம்
மலர்ந்தன பூக்கள் என்று
வாசம் நுகர்வோம்
எனவே
அறுபதை அடையும் ஆசானுக்கும்
அன்பினைக் காட்டி நிற்போம்.

எல்லோருமே பிறக்கின்றோம்
எல்லோருமே கற்கின்றோம்
எல்லோருமே சிரிக்கின்றோம்
எல்லோருமே சிறக்கின்றோமா?
இல்லை, இல்லை.
எனவே
சிறப்புக்கள் பல சூழ
சித்திகள் பல சேர
அறுபதை அடையும் சமூகத் தலைவனை
வாழ்த்தி நிற்போம்
வணக்கம் சொல்வோம்.

யாருக்குத்தான் நேரமுண்டு
இந்த யந்திர நாடு தன்னில்
ஆளோடு ஆள்பேச முடியாமல்
அவதியாய் திரிகின்றோம்
பார்ட்டிகள், டான்சுகள் என
ஒரு கூட்டம் பறக்கையிலே
நேரத்தை வரவழைத்து
நேர்மையாய் சேவை செய்யும்
நால்வருண்டு என நாம்
நம்பிக்கையொடு மகிழ்வோம்.

நாம் காணும் நால்வருக்குள்
நெடிய உருவமாய் நிமிர்ந்த நடையுமாய்
'ஆம்' என்று எப்போதும் கூறும் அசலாய்
அறுபதை அடையும் மகாஜனனும் உள்ளார்
மகிழ்வுடனே அவரைப் போற்றிடுவோம்.

கல்வியில் மட்டுமல்ல கலை இலக்கியம் சினிமா
விளையாட்டு இவற்றை யெல்லாம்
'கவ்வி' எடுத்துக் காக்கும் பண்புடையோன்
கடும் உழைப்பாளி
வெய்யில் எரித்து நிற்க மகாஜனாவில்
விளையாட்டை வளர்த்தோன்
எல்லோரும் திகைத்து நிற்க அங்கு
ஏற்றங்கள் காண்பித்தோன்
ஆமாம்
பல்கலையின் ஆசான் பகட்டில்லா மனிதன்
பல்லாண்டு காலம் இன்னும் வாழ
வாழ்த்தி நிற்போம். வணக்கம் சொல்வோம்.

*- ஆர். என். லோகேந்திரலிங்கம் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KANNEX HAS MUCH TO OFFER

There are some moments in one's life that one fondly remembers, and one such occasion was the day I was introduced to Mr. Ponniah Kanagasabapathy, affectionately known as Kannex.

Professionally, Kannex has been working in the field of education for the last twenty years as a teacher and counsellor. The North York Board of Education is very privileged that Kannex has been able to be part of our system for the last five years both as a teacher and as a Multicultural Consultant. He is perceived as knowledgeable, experienced, sensitive and professional and his credibility is a matter of record. The degree of concern and professionalism in which he has handled his duties have been highly commended by school staff and administrators. The presentations that he gave to teachers on the educational background of Tamil speaking students and the teaching strategies that he suggested, were highly regarded by school staff. They appreciated the impact of his considerable teaching experience in his work with students.

Kannex has made a considerable contribution to the Tamil speaking students, and their parents. He has provided newly arrived parents with a good background on the educational system in Ontario and on the school in particular, and the parents have been very appreciative of his professional expertise on educational matters. As for the students, he assisted them with their academic, social and emotional concerns of adjusting to a new educational system and country. What stands out in Kannex's work, is the degree of compassion and sensitivity in which he has handled all his cases.

On a personal level, Kannex is a very kind, compassionate and caring human being. His colleagues at the North York Board enjoy working with him tremendously as he is an active, positive and co-operative member of the team.

Kannex, thank you for being so honest and dedicated. You have much to offer.

**Dr. Smita Sengupta**
Supervisor
Multicultural Services Unit
North York Board of Education



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் அலுவலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Great performances are filled with intense, concentrated energy. I don't mean nervous hyperenergy, but the kind that exudes passion, caring, enthusiasm, and joy."

- Buck Rodgers

# ஆசிரியரும் அதிபரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசிரியர்

பொழுது கிளம்பி இளவெயில் இலேசாகப் பூமிப் பரப்பில் படரத் தொடங்கிவிட்ட காலை நேரம்! யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள்ளே, புறநிலைப் படிப்புகள் அலகில், 'உளவளத்துணை' கற்கை நெறியைப் பயிலும் மாணவர் மத்தியில் 'அமர்வுகள்' (sessions) என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றுகிறேன்.

"......... ஆகவே குறிப்பிட்ட நேரத்தில் உளவளத் துணையாளர் அந்த இடத்தில் நிற்பது ஒரு மொழியற்ற செய்தியை (non verbal message) துணை நாடி வந்தவருக்குத் தருகிறது. 'நான் உங்கள் மீது அக்கறையாக இருக்கிறேன்' என்பதுதான் அந்தச் செய்தி. துணையாளருக்கும் துணை நாடி வந்தவருக்கும் இடையே இறுக்கமான நம்பிக்கை தரும் உறவை வளர்க்க இச் செய்தி பெரிதும் உதவும். உளவளத் துணையைப் பொறுத்து மாத்திரமில்லை. வாழ்க்கையிலும் இது இப்படித்தான்!



## திருமதி கோகிலா மகேந்திரன்

அதிபர், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

எனது வாழ்க்கையில் ஐந்து வயது முதல் இன்றுவரை நான் பல்வேறு துறைகளிலும் ஏறத்தாழ நூற்று ஐம்பது ஆசிரியர்களிடம் பயின்றுள்ளேன். ஆனால் திரு. ச. பொ. கனகசபாபதி, கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை போன்ற ஓரிரு ஆசிரியர்கள்தாம் என் மனத்தில் மிக ஆழமாய்ப் பதிந்துள்ளனர். அந்தக் காலத்திலே திரு. கனகசபாபதி அவர்கள் மணி அடித்த மறுகணம் வகுப்பில் நிற்பதை எந்த ஒரு காரணியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலை இருந்தது. அவர் மாணவர்களாகிய எங்கள் மீது - எங்கள் வளர்ச்சி மீது அளவற்ற அக்கறை கொண்டிருந்தார் என்ற செய்தி எங்கள் நனவிலி (sub conscious) மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்........"

எனது கண் இமைகள் மாறி மாறித் தழுவிக் கொண்டன. குயில் ஒன்றின் நெஞ்சை அள்ளும் கானம் வெளியே இருந்த மாமரத்தில் கேட்டது. எண்ணங்கள் ஒரு கணம் மகாஜனக் கல்லூரியின் மேற்குப்புற மாமரத்தடி வகுப்பறைக்குச் சென்று திரும்புகிறது.

நாங்கள் க.பொ.த. (சா/த) சித்தியடைந்து உயர்தர வகுப்புக்கு அனுமதிக்கப்பட்டுள்ளோம். உயிரியல்துறை (Upper VIth B1) முதல் நாள் காலை நாலு பாடங்களுக்கும் எந்தெந்த ஆசிரியர்கள் வருவார்கள் என்று எமக்குள் பல ஊகங்கள்! அதிபர் தெ. து. ஜெயரத்தினம் பணித்து ஒரு நேர சூசிகை போடப்பட்டு விட்டால் அது இலகுவில் மாற்றப்பட மாட்டாது என்பதும் தெரியும். விலங்கியல் பாடத்துக்குக் 'கனக்ஸ்' வர வேண்டும் என்று சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானுக்கு மாணவர் குழு ஒன்று 'நேர்த்தி' வைத்து ஒரு நிமிடம் ஆகவில்லை, அவர் வகுப்பு நோக்கி வருகிறார்!

கறுப்பு நிறத்தில் அந்த எடுப்பான மூக்கும், உயரமும், ஒரு காலைச் சற்றே சரித்து நடந்தாலும் கம்பீரம் சற்றும் குறையாத அந்த நடையும் "விலங்கியல் படிக்க உனக்கு விரும்பமில்லாவிட்டாலும் நான் விடுவேனோ பார்" என்ற அந்தச் சிரிப்பும்! காலை நேரக் காற்று வளைந்து வளைந்து வீசிவிட்டுப் போகிறது.

"சிவனேஸ்வரி! றெஜிஸ்ரரை எடுத்துக் கொண்டு வாங்கோ!"

ஓகோ! இவர்தானா வகுப்பாசிரியரும்? எங்கள் மனத்தின் உற்சாகத்திற்கு இனி எங்கே வேலி போடுவது? "Non -Vertebrates - Amoeba" அவர் கற்பிக்கத் தொடங்கிவிட்டார். நிறச் சோக்குகளுடன் அழகான அமீபாவின் படம் அடுத்த ஓரிரு நிமிடங்களில் கரும் பலகையில் வந்துவிட்டது. எப்போதுமே அவரது கற்பித்தல் உத்திமுறை அப்படித்தான் இருக்கும். தலைப்பை எழுதுவார். அது தொடர்பான படங்களை மிக அழகாகவும் நேர்த்தியாகவும் கரும்பலகையில் கீறுவார். அந்தப் படங்களின் உதவியோடு அவ்விடயம் பற்றி மிக விரிவாகவும், நுணுக்கமாகவும் விளக்கம் தருவார். பின்னர் நாங்கள் எழுதிக் கொள்ள வேண்டிய குறிப்புகளைச் சொல்லுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய குரலின் உலோகத் தன்மையில் வகுப்பு மயங்கிப் போய் ஊசி விழுந்தாலும் கேட்கும் அமைதியுடன் இருக்கும். எப்போதுமே அவரிடம் ஒரு சிறு கண்டிப்பு இருக்கும். ஆனால் பாடவிடயமாக யாரும் எந்தச் சந்தேகமும் எப்போதும் கேட்கலாம். பதில்கள் எல்லாம் விரல் நுனியில் இருந்து மிகச் சரளமாக வரும். 'இவருக்குப் பாடமில்லாத விலங்கியல் புத்தகம் எதுவும் இல்லைப் போல இருக்கிறது' என்பதுதான் எங்களுக்கு அவரைப் பற்றிய கணிப்பு!

'நிலம், மலை, நிறைகோன், மலர் நிகர் மாட்சியும்' என்று நல்லாசிரியனைப் பற்றி நன்னூலார் சொல்லும்போது 'மலை' என்ற சொல்லை இவரைப் பார்த்துத்தான் எழுதியிருப்பாரோ என்று நான் கற்பனை செய்வது உண்டு. மாணவரால் தேடிக் கண்டு பிடிக்க முடியாத உச்சியைக் கொண்ட விலங்கியல் அறிவு மலை அவர்!

விரல் நுனியில் இருந்து விடைகள் வருமென்றா சொன்னேன்? தவளைகளையும் எலிகளையும் வெட்டிப் பரிசோதிக்கும்போது, அவர் விரல் நுனிகளின் நுணுக்கமான அசைவில் ஒரு சங்கீதக் கலைஞனின் மென்மையும், ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் ஒரு நிலைப்பட்ட உறுதியும் காணப்படும். ஆய்வுகூடத்தில் நாங்கள் சுற்றி நிற்க, ஒரு தவளையின் நாளத் தொகுதியைச் செய்து காட்டிவிட்டு, எங்களைத் தனித்தனி அனுப்புவார். எங்களுக்குத் தனித்தனி தட்டுகளும் தவளைகளும் தரப்படும். நாங்கள் தாறுமாறாக ஓரிரு நாளங்களை வெட்டிவிடுவோம்.

''என்ன சுபாஸ் சந்திரன்... உங்கடை தவளைக்குள்ளை எவ்வளவு ரத்தம் இருக்கெண்டு அளந்திட்டீங்களா?'' சிரித்துக் கொண்டே கேட்டுவிட்டுத் தான் சுபாஸ் சந்திரனின் ஸ்டூலில் அமர்ந்து செய்து காட்டுவார்.

செய்முறை வகுப்புகளில் நாங்கள் கீறுகிற படங்களில் இலகுவில் திருப்தி அடையமாட்டார். எப்போது கொண்டு போனாலும் அதில் ஒரு திருத்தம் சொல்லுவார்.

''இன்னும் திறமையாய்... இன்னும் திறமை யாய்....!'' ''கனக்ஸ் இட்டை ஒரு கையெழுத்து வாங்க ஏழு தரம் பிறந்து வரோணும்'' என்று நாங்கள் அலுத்துக் கொள்வதுண்டு. அதனால் நாங்கள் பேசாமல் இருந்துவிட்டு, செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வந்தவுடன் பதிவேடுகளைக் கொண்டு போவோம்.

''நாளைக்கு றெயின். இண்டைக்கு வாறீங்கள். என்ன செய்யிறது?'' என்று சொல்லித் திருத்திச் சிரித்து விட்டுக் கையெழுத்து வைப்பார். அந்தக் கையெழுத்தின் அமைப்பழகைப் பற்றி ஒரு தனிக் கட்டுரை எழுதலாம் போங்கள்!

மணி அடித்த மறுகணம் எப்படி வகுப்பில் நிற்பாரோ, அப்படியே அடுத்த மணி அடித்த மறுகணம் வகுப்பைவிட்டு வெளியேறிவிடுவார். அடுத்த ஆசிரியரின் நேரத்தில் ஒரு கணத்தையும் தான் எடுத்துக் கொள்ள மாட்டார். பல சமயங்களில் சொல்லிக் கொண்டிருந்த குறிப்பில் ஒரு வசனம் பாதியில் நிற்கும்! அதனாலென்ன, அடுத்த வகுப்பில் யாரிடமும் கேட்காமலே, விட்ட அந்தச் சொல்லில் இருந்து பாடம் தொடங்கும். அவரது நினைவாற்றல் மிக அலாதியான தொன்று.

அவர் எப்போதாவது 'லீவு' எடுத்ததாக எனக்கு நினைவு இல்லை (மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தது தவிர - அதுவும் நாங்கள் அவரிடம் படிக்க முன்னர்). வகுப்பு நேரத்தில் வகுப்புக்கு வராதுவிட்ட நாளும் இல்லை. வகுப்பு நேரத்தில் ஒரு நிமிடத்தையேனும் வீணாக்கியதாயும் இல்லை. ஆனால் பாடத்திட்டம் முடியாது. அவ்வளவு ஆறுதலாக, விபரமாகத் தெளிவாகப் போவார். வகுப்பில் மிகப் பின் தங்கிய மாணவனும் விளங்கிக் கொள்வான். இதனால் சகல விடுமுறைகளிலும் மேலதிக வகுப்பு நடக்கும். பொதுவாக முளையவியல், கூர்ப்பு, பாரம்பரியம், சூழலியல் (Embryology, Evolution, Genetics, Ecology) போன்ற பரப்புகளை விடுமுறையில் தான் செய்வார். எப்படியும் சோதனைக்கு முதல் பாடப் பரப்பு முடிந்துவிடும். எங்கள் வகுப்பில் யாரும் விலங்கியல் டியுசனுக்குச் செல்லவில்லை. எங்கள் எதிர் காலத்துக்கு அவர் மனதாரப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு விட்டாரே! பிறகென்ன?

மாணவர் ஒழுக்கத்திற்கும், மாணவர் தலைவர்களுக்கும் அவர் எங்கள் காலத்தில் பொறுப்பாக இருந்தார். மாணவர்கள் அவருக்குப் பிடிக்காத விதமாய் நடந்து கொண்டால் அதை உடனே கண்டும் காணாமல் விட்டு விடுவார். பார்த்து, ஆறுதலாக, ஒரு பொருத்தமான சந்தர்ப்பத்தில் 'பகடி' போல் சொல்லித் திருத்தி விடுவார். மேலதிக வகுப்புக்கு நேரத்துக்கு வராவிட்டால் கட்டாயம் 'அறுவை' இருக்கும். இன்னொரு சம்பவம் எனக்குத் தெளிவாக நினைவில் உண்டு. தலைமயிர் காதை மூடி இருக்கும்படி இழுப்பது அப்போது ஒரு ஸ்டைல்.எங்கள் வகுப்பில் ஒரு மாணவி மட்டும் அப்படி இழுத்து வருவார். அவர் கடைசி வரிசையில் இருப்பார். ஒரு நாள் திரு. கனகசபாபதி அவர்கள் குறிப்புச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அந்த மாணவி பக்கத்தில் இருந்தவருடன் கதைத்ததால் இடையில் சில சொற்களைத் தவறவிட்டு விட்டார். தவற விட்டுவிட்டு,

''சேர், கேக்கேல்லை. ஒருக்காத் திருப்பிச் சொல்லுங்கோ'' என்று கேட்டார்.

எல்லாவிடயங்களையும் நன்கு அவதானித்த இவரோ, ''நான் திருப்பிச் சொன்னாலும் உங்களுக்குக் கேளாது'' என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவி, ''ஏன் சேர்?'' என்று கேட்க, இவர், ''உங்கடை தலைமயிர் சவுண்ட் புறூவ் போலை இருக்கு'' என்று சொல்ல, வகுப்பு முழுவதும் 'கொல்' என்று சிரிக்க....

அன்று முதல் அந்த மாணவி காதை மூடி இழுப்பதை நிறுத்திவிட்டார்.

தான் எல்லா விடயங்களையும் தெளிவாகக் கற்பிப்பார். குறிப்புத் தருவார். ஆனால் இன்னும் மேலதிகமாக வாசிக்கும்படி எங்களைத் தூண்டுவார். ஒரு முறை தவணைச் சோதனை விடைத் தாள்களைத் திருத்திக் கொண்டு வந்து வகுப்பில் எங்கள் பார்வைக்குத் தந்தார். நாற்பது புள்ளிகளைப் பெற்றிருந்த ஒரு மாணவி அவரிடம் சென்று,

''சேர், இந்தக் கேள்விக்கு, நீங்கள் நோட்சிலை தந்தபடி எல்லாம் எழுதியிருக்கிறன்தானே. நீங்கள் ஏன் முழு மாக்ஸ் போடேல்லை'' என்று கேட்டார்.

''ஓம், என்னுடைய நோட்ஸ் அப்படியே எழுதியிருக்கிறீங்கள். அதைவிட லைபிறறியிலை உள்ள ஏதாவது ஒரு புத்தகத்திலை உள்ளதையாவது அப்பிடியே எழுதியிருந்தீங்கள் எண்டால் நான் நூறு மாக்ஸ் போட்டிருப்பன்'' என்று தனது வழமையான சிரிப்புடன் சொன்னார் இவர். அதன் பிறகு அந்த மாணவி எப்போது ஓய்வு நேரம் கிடைத்தாலும் நூல் நிலையம் போகத் தவறுவதில்லை.

ஒரு முறை எங்கள் இரசாயனவியல் ஆசிரியர் நாங்கள் முதல் நாள் மாலை பாடசாலைக்கு வராதமைக்குத் தண்டனையாக வகுப்புக்கு வெளியே அனுப்பிவிட்டார். நான், சிவனேஸ்வரி, ராஜேஸ்வரி, மங்கையற்கரசி நாலு பேரும் வகுப்பிலே கெட்டிக்கார மாணவிகள். அதில் மூன்று பேர் மாணவ தலைவிகள் (Prefects). நான் சிரேஷ்ட மாணவர் தலைவி (Senior Prefect). நாங்கள் வெளியே நிற்பதை அதிபர் கண்டாரோ நாங்கள் தொலைந்தோம். என்ன செய்வது என்று தெரிய வில்லை. வகுப்பாசிரியர் திரு. கனகசபாபதி அவர்களே ஒரே ஒரு கலங்கரை விளக்காகத் தெரிந்தார். அவரைத் தேடி விலங்கியல் ஆய்வுகூடம் சென்றோம். ''சரி, அந்தாள் ஒரு கோபத்திலை இப்படிச் செய்துபோட்டு தெண்டால், நீங்கள் இப்பிடியே ஐஞ்சு வயசு மாதிரி அழுது கொண்டு வாறது?'' என்று எங்கள் மனத்தைத் தடவிய அந்த மிருதுக் குரல் இன்றும் என் காதில் ஒலிக்கிறது. ஆம்! அந்த உலோகக் குரல் தேவையான போது இப்படி அதீத அன்புக் குரலாயும் மாறும்.

பிறகு, வகுப்பாசிரியர் என்ற முறையில் எங்களை முதல் நாள் பாடசாலைக்கு வராது நிற்கத் தான் அனுமதித்ததாயும், ஆகவே எங்களை மன்னிக்கலாம் என்றும் அவர் தந்த கடிதத்தை அடுத்து நாங்கள் வகுப்பினுள் சென்றோம் என்று சொல்லுங்கள்!

உலோகக் குரல்! மிருதுக் குரல்! அதிபராக மகாஜனாவில் நற்பணியாற்றி ஓரிருவரின் தன்னலச் செயற்பாடுகளால் மனம் புண்பட்டு, வெளிநாடு செல்ல முடிவெடுத்தபோது... எங்களிடம் (பழைய மாணவர், ஆசிரியர்) விடைபெற்ற அன்று..... இக்குரல் VIBGYORஆக உடைந்திருந்தது கண்டு நாங்கள் அழுதோம்.

''எனது மனோநிலையே அன்றைய நாளின் வானிலையாகும். வளம் பெறுவதிலும், வழி தவறுதலிலும் எனது ஆளுகையே அதீதமாகின்றது. எனது செயல்கள் மாணவனுக்கு மகிழ்ச்சி தரலாம். மனச் சோர்வு தரலாம். நோய் தரலாம். நோய் அகற்றலாம். மாணவன் உலகம் வியக்கும் மானுடனாகலாம் அல்லது எதிர் மானுடனாகலாம்''

என்று றொஸ் என்பவர் ஒரு நல்லாசிரியர் நிலையில் நின்று கூறுவார். இந்தச் சிறு நாட்டில் அவரது மாணவியாகிய நான், இன்று ஒரு வளமான வாழ்வு வாழ்கிறேன் என்றால், நாலு பேர் பாராட்டும்படி ஏதாவது செய்கிறேன் என்றால்,... அந்த எனது ஆளுமையின் அத்திவாரம் எனது ஆசிரியர் திரு. பொ. கனகசபாபதி அவர்களால் போடப்பட்டது என்று நான் தயங்காது, பெருமையுடன் கூறுவேன்.

''உன் வாழ்வுக்கு ஒரு நோக்கு உண்டு. அதுதான் மாணவர் சமூகத்துக்கு நீ ஆற்ற வேண்டிய பணி'' என்ற வாசகத்தை முகத்திலே எழுதி ஒட்டிக் கொண்டவர் போல மகாஜனா மைதானத்தில் அவர் உலவிய நாட்கள்! அதை நான் எப்போதும் நினைத்துக் கொள்... இல்லை. தவறு! மறந்த பொருளை அன்றோ நினைப்பது?

மணிவிழா நாயகராக அவர் வந்திருக்கிற இந்த வேளை.... அவரது தலைமயிர் மெதுவாக நரைத்துப் போயிருப்பதை, இன்று நாங்கள் பார்க்கும் அவரது புகைப் படங்கள் காட்டுகின்றன. ஆனால் எங்கள் மனத்தில் அவர் உருவம் என்றும் பச்சையாய்.... பசுமையாய்... பூங்காவாய்... பொய்கையாய்....! நிலவு உதித்ததைப் போல் அவர் முகத்தின் நிறைவும், எப்போதும் வெள்ளையாய் வரும் அந்தத் தூய்மையும்...!

தன்னம்பிக்கை, நடுவு நிலைமை, நேர்மை, சத்தியம், துணிவு, வழிகாட்டல், விவேகம்.... இவற்றின் கூட்டு அவர். தலைமைத்துவம் அவருக்குப் பொருத்தமான ஒன்று. அந்தத் தலைமைத்துவத்தைப் பேணி, இன்று மணிவிழாவை மகாஜனாவில் கொண்டாட.... நாங்கள் கொடுத்து வைக்கவில்லை!

கனடாவில் அவரின் கல்வித் தொண்டு இன்னும் அறுபது ஆண்டுகள் வாழட்டும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட மாஸ்ரர்

1957ஆம் ஆண்டு முற்பகுதி. TRP நீடிக்கப்படாததால் கேரள ஆசிரியர்கள் மகாஜனாவை விட்டு நாடு திரும்பிக்கொண்டு இருந்த வேளை, மற்றும் பலருடன் நானும் H.S.C. முதலாம் வருட வகுப்பில் இருக்கிறேன். ஆசிரியர் பற்றாக்குறை, என்னைப் போல் சிலருக்கு மகிழ்ச்சி. தாவரவியல் கற்பிக்க வந்த தவமணி விலங்கியலும் கற்பித்தார். மே மாதம் ஒரு நாள் எங்கள் வகுப்பறையில் கம்பீர மலை ஒன்று. வெள்ளை காற்சட்டை, வெள்ளைச் சட்டை, அடர்த்தியான கரும் சுருள் தலைமயிர், கட்டான கட்டழகன்.

ஐயத்தை நீக்கினார் Missiamma (தவமணி). இவர்தான் உங்கள் விலங்கியல் ஆசிரியர் என்று கூறி இருவரும் மற்ற ஆய்வு கூடம் சென்றார்கள். மகேந்திரன் எனது நண்பன் (அங்கும் இங்கும்) இடைவேளைக்குப்பின் தகவல் திரட்டி வருகிறான். அவர் சண்டிலிப்பாய், Bsc. Hons., தங்கப்பதக்கம், முதல் மாணவர், கெட்டிக்காரர். நாங்களும் முதல் மாணவர்தான் (அவரின் ஆசிரியத் தொழிலுக்கு). ஆசிரியர் மாணவர் இடைவெளி குறைகிறது. அவர் மாணவனாகிறார். எங்களுடன் சினிமா பற்றி விமர்சிக்க இன்னும் ஒரு மாணவன் தில்லையில் கூத்தாடிய கனகசபாபதி. எங்களுக்கு படமும் பாடமும், பகிடியும், படிப்பும், கற்பிக்கிறார். கனகரில் ஒரு காதல். மிருகவியலில் ஒரு மோகம். அவர் ஒரு தலை சிறந்த ஆசிரியராகிவிட்டார்.

அவரின் முதல் மாணாக்கர்களில் 60% பல்கலைக்கழகம் தெரிவானார்கள். எல்லோரும் விலங்கியலில் சித்தி. சனி ஞாயிறுகளில் விலங்கியல் விசேட வகுப்பு. பல்கலைக்கழக விஞ்ஞானத் தேர்வில் மகாஜனா முன்னணியில். வைத்தியத்துறை, பற் சிகிச்சைத்துறை, மிருகவைத்தியத்துறை, பொது விஞ்ஞானத்துறை என்று ஒவ்வொரு ஆண்டும் தேர்வு கூடுகிறது. 1960ஆம் ஆண்டு கல்லூரியில் வைரவிழா. விஞ்ஞான விலங்கியல் ஆய்வு கூடம் பார்வையாளரைக் கவர்ந்தது. இவை எல்லாம் எங்கள் மாஸ்டரின் சாதனை.



யார் இவர்?

மாணவர் இடையே சுலசலப்பு. எமக்குப் போட்டியாக ஒரு மாணவரா (படிப்பில் அல்ல)? எங்கள்

1960ஆம் ஆண்டு பாடசாலை விலகிய நான் மாஸ்டருடன் தொடர்பாக இருந்தேன். 1962ஆம் ஆண்டு லீவில் வந்தபோது மாஸ்டர் மோட்டார் சையிக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்தில் காயமுற்று காலில் பத்துடன் இருந்தார். அன்று எடுத்த புகைப்படத்தின் பிரதியை இங்கு காணலாம். மாஸ்ரரின் லீவினால் மகாஜனாவில் ஏற்பட்ட மூன்று மாத வெற்றிடத்தை வேலையின்றி வெறுப்புடன் இருந்த எனது அன்றைய காதலி (பின்னர் மனைவி இன்று வரை) கைப்பற்றிக் கொண்டார். May 1963ல் நான் லீவில் நிற்கும்போது கனகரின் கலியாணப் பேச்சு, பெண் விபரம் என்னிடம் கூறினார். உடனே கொழும்பு சென்று எனது நண்பன் சிவாவுடன் (மாஸ்ரரின் மாணவன்) G.P.O. நூலகம் சென்று நான் ஒரு அங்கத்தவன் ஆனேன். ஏன் என்றால் கனகரின் எதிர் காலக் கௌரி (அமர்தகௌரி) அங்கு நூல்நிலையப் பொறுப்பாளர். எனது சிபாரிசில் அவர் பெண் எடுத்து விட்டார். என்னே சிஷ்ய பக்தி. ஆனால் நான் ஒரு புத்தகம்கூட எடுக்கவில்லை. 1963 யூலை 3 அவரின் கல்யாண எழுத்து: சமூகம் அளிக்க முடியவில்லை. ஆனால் நவம்பர் 3 கலியாணம் கண்கொள்ளாக் காட்சி. ஆலங்குழாய், குருநகர் விழாக்கோலம் கண்டேன். திருமணத்தின்பின் புத்திரபாக்கியம், செல்வம், அதிபர் பதவி இரவு பகல் ரியூசன் என்று அவரின் சாகசங்கள் பற்றி அறிந்தேன். எல்லாம் கௌரியின் அருள். திரும்பவும் எனது திருமணத்தில் தனது நன்றிக் கடனாக பெண்வீட்டு அலங்காரப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்தார். அவர் எங்கள் குடும்ப நண்பன் ஆகிவிட்டார். செப்படம்பர் 4 அவர் அறியாமல் பிறந்த நாள். செப்டம்பர் 4 நான் அறிந்து திருமணம் செய்த நாள்.

1981 நைஜீரியா மோகம். ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். என் மனைவி, பின்னர் மாஸ்டர், பின்னர் மாஸ்டர் மனைவி பிள்ளைகள் மணிவிழி, மணிமொழியுடன் இறுதியில் நான் எல்லோரும் நைஜீரியா சென்றோம். தன்னுடன் சிலகாலம் இருக்க வேண்டும் என்றதினால் இரு குடும்பமும் ஒன்றாக இருந்தோம். தண்ணீர் வசதி குறைவு. மழை பெய்யும்போது பீலியில் தண்ணீர் சேர்ப்பது, மழையில் குளிப்பது, கிணறுகள் தேடி அலைவது என்று பல சுவையான அனுபவங்கள். மாஸ்டர் வீட்டில் தினமும் அன்னதானம். தினமும் குறைந்தது இரண்டு விருந்தாளிகள் தங்கி இருப்பார்கள். பலர் வந்து போவார்கள். படம் (Video), சீட்டு ஆட்டம், கலந்துரையாடல் பகிடி என்றால் மாஸ்டர், கௌரி முன்னுக்கு நிற்பார்கள். 1986 பிற்பகுதி எங்கள் சொந்த நாட்டு நிலமை சீராக இல்லை. நைஜீரியா வந்த கூட்டம் கனடா சென்றது. எங்கள் குடும்பம் 87ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதியும் கனகர் குடும்பம் ஜனவரி 19ஆம் திகதியும் அமெரிக்காவில் டாக்டர் கணேசன் (மாஸ்டரின் மாணவன், எனது மைத்துனர்) வீட்டில் வந்து சேர்ந்தோம். 20ஆம் திகதி நள் இரவு வேட்டை நாயில் (Greyhound) இரு குடும்பமும் புறப்பட்டு 21ஆம் திகதி கனடா எல்லை கறுப்புக் குளத்தில் (Black Pool) வந்து குதித்தோம். விசாரணையின் பின் மாலை 4 மணிக்கு மொன்றியல் சேர்ந்தோம். சமூகக் காப்புறுதி இலக்கம், வேலை அனுமதிப் பத்திரம் என்பன வரும்வரை அரசாங்க ஊதியத்தில் இருந்து கொண்டு French, Book Keeping, Computer ஆகிய முக்கலைகளையும் பயின்றோம். இலங்கையில் 35 புள்ளி வாங்கிய எனக்கும் 35 புள்ளி போட்ட மாஸ்டருக்கும் இங்கு 85, 90 என்று மார்க்குகளை அள்ளி வீசினார்கள். பலவேளைகளில் மாஸ்டரிலும் பார்க்க மாணவனுக்கு புள்ளிகள் அதிகம்.

மாஸ்டரின் மனைவி வைத்திய பரிசோதனைக்குச் சென்ற இடத்தில் அவரது சுவாசப்பையில் ஒரு தழும்பு இருப்பதாகக் கூறப்பட்டது. பின்னர் சத்திரசிகிச்சை செய்வது நல்லது என்று சத்திர சிகிச்சையும் செய்து பூரணகுணத்துடன் இருந்தார். சமூகக் காப்புறுதி இலக்கம், வேலை அனுமதிப் பத்திரம் கிடைத்து இரு குடும்பமும் ஆடி மாதம் ரொறன்ரோ வந்தோம். ரொறன்ரோ வந்து பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் சேர்ப்பது, பெற்றோர் வேலை தேடுவது என்று ஓயாத அலைச்சல். சந்தோஷமாக இருந்த மாஸ்டர் குடும்பத்தில் ஒரு அதிர்ச்சி. கௌரிக்கு ஞாபக சக்தி சில சமயம் குறைகிறது என்ற காரணத்தால் ரொறன்ரோ மகளிர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். தினமும் அவரை ஆஸ்பத்திரியில் நான் பார்த்து வந்தேன். அவரின் நிலைமை சற்று வித்தியாசமாக இருப்பதை அறிந்த நான் ஒரு நாள் அவரிடம் நீங்கள் எதற்கும் கவலைப்படத் தேவை இல்லை, உங்கள் பிள்ளைகளை நாங்கள் கவனிப்போம் என்றேன். அதற்கு மாஸ்டரின் மனைவி கூறிய பதில் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. ''பிள்ளைகள் தங்களைப் பார்ப்பார்கள். நீங்கள் மாஸ்டரைப் பார்த்தால் போதும்.'' எவ்வளவு ஆழமான வார்த்தை. திருமண வெள்ளி விழா காண வேண்டும் என்ற ஆசையுடன் இருந்தவர் ஒரு மாதத்திற்கு முன்னர் எங்களை விட்டு Oct-05-88ல் பிரிந்து சென்று விட்டார். எதற்குமே அசையாத மாமேருமலை அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்தது. மாஸ்டர் ஒரு பாலகன் போல விம்மி விம்மி அழுவதைக் கண்டு எல்லோரும் கலங்கினர். இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஆண் பிள்ளைகள் மணிமாறன், மணிவண்ணன் இருவரும் மரணச் சடங்கிற்கு வந்தனர். இப்படித் துவண்ட மாஸ்டர் தனக்கு ஏற்பட்ட இழப்பைச் சமாளித்து வாழ்க்கையை ஒரு சவாலாக எடுத்து இன்று எங்களுக்கும் தனது குடும்பத்திற்கும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறார். மனைவி இன்று இருந்திருந்தால் மாஸ்டரின் திறமை இரட்டிப்பாக இருந்து இருக்கும். அன்று பாதுகாப்பு வேலையில் தொடங்கிய மாஸ்டர் இன்று தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் ஒரு பாதுகாப்பாளராக விளங்குகிறார்.

நண்பர் மணியத்தின் உந்தலில் மாஸ்டரின் தலைமையில், கார்த்திகேசு ஆசிரியரின் யாப்புடன் மகாஜனா பழைய மாணவர் சங்கம் இங்கு 1989ம் ஆண்டு இறுதியில் ஆரம்பமானது. மாஸ்டர் கல்வி பயின்ற ஸ்கந்தவரோதய பழைய மாணவர் சங்கம் அவர் அதிபராக இருந்த சோமஸ்கந்தா பழைய மாணவர் சங்கம் ஆகியனவும் இங்கு இயங்கி வருகின்றன. ஆனால் அவர் மகாஜனா பழைய மாணவர் சங்கத்தில் மட்டும் பதவி வகித்து எங்களை வழி நடத்தி வருகிறார். பத்திரிகைகளிலும் அவரை முன்னாள் மகாஜனக் கல்லூரி அதிபர் என்றுதான் எழுதுவார்கள். மகாஜனாவில் ஆசிரியராக, அதிபராக கையாண்ட யுக்திகளை இங்கும் கையாண்டு எங்கள் சங்கத்தை பிரபல்யமாக்கிவிட்டார். சொன்ன சொல், குறிப்பிட்ட நேரம் அவரது தராகை மந்திரம். கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் உபதலைவராக இருந்து வருகிறேன். இந்த இரண்டு வருடத்தில் இரண்டே இரண்டு நாட்கள், அதுகூட ½ மணித்தியாலங்கள் மட்டும் நிர்வாக சபைக் கூட்டத்தில் என்னால் தலைமை வகிக்க முடிந்தது. இதில் இருந்து அவரின் ஒழுங்கு, பொறுப்புணர்ச்சி, கடமை என்பன புரியும். தவறு ஏதாவது நடந்தால் தனது சார்பிலும் மற்றவர்கள் சார்பிலும் மன்னிப்புக் கோரத் தயங்கமாட்டார். அதே வேளை, தப்பு நடக்கும் இடத்தில் சுட்டிக் காட்டவும் தட்டிக் கேட்கவும் தயங்க மாட்டார். எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்பது அவரின் நல்ல குணம். இதனை துஷ்பிரயோகம் செய்யும் சிலரால் அவர் சங்கடப்படுவதை நான் கண்டிருக்கிறேன். ஆனால், எப்படியும் சமாளித்து வெற்றி கண்டு விடுவார். எந்த வைபவத்திற்கு எவர் அழைத்தாலும் தனது சிரமத்தைப் பொருட்படுத்தாது சம்மதித்து விடுவார். மனவைராக்கியம், இரு கால்கள் T.T.C. இம் மூன்றிலும் அபார நம்பிக்கை வைத்திருக்கிறார். நேரத்திற்குச் சென்றும் விடுவார். சில சமயம் முடியாமல் போனால் காரணம் கூறுவார். Busy என்ற சொல்லைப் பாவித்ததை நான் அறியேன். கவிஞர் எழுதியதுபோல் கனடாவில் கடுகதி வேகத்தில் இயங்கிவரும் ஓர் அபூர்வ கணனி கனகசபாபதி மாஸ்டர். எந்தத் துறையில் எந்தத் தகவல் தேவையோ அதை ஒரே இடத்தில் பெற வேண்டு மானால் எங்கள் மாஸ்டரை நாடலாம். அவர் ஒரு 'தமிழர் தகவல்' என்றே கூறலாம். சஞ்சிகை, பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, கலை நிகழ்ச்சி, மேடை என்று ஏதாவது ஒன்று அல்லது மேற்பட்ட சாதனை மூலம் தினமும் அவரை கேட்கவோ அல்லது காணவோ முடியும். இவைகளை நான் தவற விட்டேன் என்றால் இரவு 12 மணிக்கு வீட்டில் தொடர்பு கொள்வேன்.

கடந்த 38 ஆண்டுகளில் மாஸ்டர் என்னுடன் நல் ஆசிரியனாய், நண்பனாய், மந்திரியாய், சக மாணவனாய், தலைவராய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய், ஒருபொழுதேனும் கருத்து வேற்றுமை இன்றிப் பழகி வந்திருக்கிறார். இந்த நிலை தொடரும். இன்று மணிவிழா காணும் மணிகளின் தந்தை ஆரோக்கியமான Money நிரம்பிய, Many Many விழாக்கள் காண வேண்டும் என்று வாழ்த்தும்

**கதிர் துரைசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது குருநாதர்

தமிழ் ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற பழம் பெரும் நகரம் காங்கேசன்துறை. இந்நகரத்தில் குருநாதர் கோவிலுடன் அமைந்த குருவீதியில் வாழ்ந்தவர் எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியரும் சமூகத் தொண்டருமான குருநாதபிள்ளை. இவரது மகள் 'டாலி(ங்)' அக்காவுடன் நான் பள்ளி சென்றதும், அவரது வழிநடத்தலின்படி நேர்வழி சென்றதும் பசுமையான பழைய நினைவுகள். சிரேஷ்ட கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேறிய பின்பு உயர்கல்வி பெறுவதற்கு 'டாலி' அக்காவின் கணவர் எங்கள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் என்னை மகாஜனாவில் சேர்த்தார். மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியதன் காரணமாக எமது 'குருவீதி' கலகலப்பானதொன்றாக மாறியது. எமது பெருமதிப்பிற்குரிய விலங்கியல் ஆசிரியர் பின்னர் ஏழாலை மகாவித்தியாலயத்தில் சிலகாலம் அதிபராக இருந்தபின் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாவிற்கு அதிபராக வந்தார். வெளி மாவட்டத்தில் விஞ்ஞான ஆசிரியராகவிருந்து சொந்தவூருக்கு மாற்றலாகி வந்தபோது திரும்பவும் ஸ்ரீ சோமஸ்கந்தாவில் எமது அதிபரக்குக் கீழ் கடமை புரியும் ஒரு வாய்ப்புக் கிடைத்ததை நான் ஒரு பெரும்பேறாகக் கருதுகிறேன்.

## ~ நா. கணேசபிள்ளை ~

'புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் திரு. பொ. கனகசபாபதியின் காலம் ஒரு பொற்காலம்' என்று எல்லோரும் புகழ்ந்து கூறுகிறார்கள். கல்வி நிர்வாகச் செயல்முறையில் பல மாற்றங்கள் இக்கல்லூரியில் ஏற்பட்டன. இதனால் மாணவர் மட்டுமல்லாது என் போன்ற ஆசிரியர்களும் பயனடைந்தனர். மாணவர்களின் தேவைகள், ஆசிரியர்களின் தேவைகள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஈடுபாடு இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கல்லூரியை ஓர் உயர்ந்த நிலைக்கு உயர்த்திய பெருமை எங்கள் அதிபருக்குரியது. மாணவனை மையமாகக் கொண்ட கல்விச் செயல்முறையே மேலோங்கி வெற்றி நடைபோடும் இன்றைய நிலையை விஞ்சும் வகையில் 70களில் தனது கல்வி நிர்வாகச் செயல்முறை மூலம் முதல்தரமான அதிபர் என்ற பெயரைப் பெற்றார். எங்கள் அதிபர் மாணவர்களின் கனவுகள், அவர்களது எதிர்பார்ப்புக்களுக்கு எல்லாம் வழிசமைத்துக் கொடுத்ததன் விளைவாக, இவரது காலத்தில் பல திசைகளில் இருந்தும் அனுமதிக்காக மாணவர் ஓடோடி வந்ததமை யாவரும் அறிந்த உண்மை. இன்றும் கனடாவில் பல பழைய மாணவர்கள் எங்கள் அதிபருடன் இணைந்து இயங்கி வருகிறார்கள் என்றால், அது அவரது ஆளுமையின் கவர்ச்சியான ஈர்ப்புச் சக்தியாகும்.

ஆசிரியரைப் பாடசாலைச் செயற்பாட்டின் தொழில் தேவைக்கேற்பத் தேர்ந்தெடுப்பதிலும், அவர்களைத் தமது தொழிற்றுறை அபிவிருத்திக்குத் தயாரிப்பதிலும், அவர்களை ஊக்குவிப்பதிலும் எமது அதிபர் கைதேர்ந்தவர் என்றே கூறுவேன். இவ் வகையில் பெரிதும் பயனடைந்தவர்களில் நானும் ஒருவன். எமது அதிபருக்குக் கீழ் கடமை புரிந்தவர் எவராயினும் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை மறந்து கல்லூரி வாழ்வில் ஒன்றித்து விடுவர். யாராவது குறை கூறுபவர்கள் இருந்தாலும் காலப்போக்கில் அவர்கள் தமது தவறுகளை உணர்ந்து கல்லூரி நிர்வாகச் செயல் முறைகளை மதித்து நடக்கத் தொடங்கிவிடுவார்கள். ஆசிரியரின் வகுப்புச் சூழலுக்கு ஏற்ற வசதிகளை நிறைவேற்றுவதற்கு எந்த விதத்திலாவது நிதியைப் பெற்று அதனை நடைமுறைப்படுத்திவிடுவார். இதன் மூலம் மாணவர் பெரும் பயனைப் பெறுகிறார்கள் என்று மகிழ்ச்சியடைவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் மாணவர்களும், ஆசிரியர்களும் ஒரு கலைப்பூங்காவில் வாழ்கிறார்கள் என்ற எண்ணத்தினால் போலும், சென்றவிடமெல்லாம் தாவரங்களினாலேயே வேலிகளும், பாடசாலையின் நானாவிதச் செலவை ஈடுசெய்யக்கூடிய பழ மரங்களையும், மனதில் கிளு கிளுப்பை ஏற்படுத்த வல்ல பூமரங்களையும் நாட்டி மகிழ்வார். இப் பாரம்பரியமான செயல்முறைகள் இவர் நிர்வகித்த கல்லூரிகளில் இன்னும் தொடர்கின்றன. புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாவிலும், தெல்லிப்பழை மகாஜனாவிலும் பாரிய கட்டிடங்கள் இவரது பெரு முயற்சியினால் எழுந்தவையே. கல்லூரியின் உயர்ந்த இலட்சியங்களையும், குறிக்கோள்களையும், மக்கள் மனங்களில் எழுச்சியடையச் செய்து அதனால் பெற்றார்கள் தமது கல்லூரிக்கென வாரிவழங்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்குவதில் வெற்றி கண்டவர்.

பொதுவாக இலங்கைக் கல்வி நிர்வாகச் செயல் முறையை நோக்கும்போது, கல்வி நிர்வாகத்தில் உயர்பதவி வகிப்பவர்கள் குறைந்தது இருவருடமாவது ஒரு கல்லூரியில் கல்வி நிருவாகத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். காலப் போக்கில் தனிநபர் விருப்பு வெறுப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் இலங்கைக் கல்வி நிருவாகக் கொள்கை, கல்லூரிகளில் இரண்டு வருடப் பயிற்சி பெற்றால் போதுமானது என்று தளர்த்தப்பட்டது. ஏனெனில் கல்லூரி நிர்வாகத்தில் ஈடுபடுபவர்கள் கல்லூரியினாலும், பெற்றோரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவர்கள். இவ்வகையில் எமது அதிபர் அவர்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்பதை விட அவரின் சேவையினால் கல்லூரிகள் உயர்ந்த நிலையை அடைந்தன என்று கூறுவது பொருத்தமானதாகும். வழமையாக ஒரு அதிபர் தனது கோரிக்கைகளுடன் கல்விக் கந்தோரை அணுகினால் கல்வியதிகாரிகளும், கல்வியதிபதியும் அவரை எப்படியாவது சமாளித்து அனுப்பிவிடுவார்கள். ஆனால் எங்கள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் கல்விக் கந்தோருக்குச் சென்றால் வெறுங்கையோடு திரும்பமாட்டார். ஒரு கல்வி யதிகாரிக்கிருக்காத செல்வாக்கு கல்விக் காரியாலயத்தில் எங்கள் அதிபருக்கு இருந்ததைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து கொண்டேன். கல்வியமைச்சிலும் ஏனைய கல்விக் கூட்டங்களிலும் எமது அதிபரின் பெயர் பிரபல்யமடைந்திருந்தமை யாவரும் அறிந்த உண்மை.

கனடாவில், குறிப்பாக வடயோர்க் கல்விச் சபையின் கீழ் உள்ள இலங்கை இந்திய மாணவர்களும் பெற்றோரும் உண்மையில் கொடுத்து வைத்தவர்கள் என்றே கூற வேண்டும். ஏனெனில், கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பல்கலாச்சார சேவைகளில் எமது அதிபர் ஈடுபட்டு வந்ததை யாவரும் அறிவர். கடந்த வருடம் முதல் அவர் பல்கலாச்சார ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்றமை எமது சமூகத்திக்குக் கிடைத்த பெருமதிப்பாகும். இன்று ரொறன்ரோ மாநகரில் வதியும் எந்தவொரு தமிழ் மாணவனுக்கும் எங்கள் அதிபரை நன்கு தெரியும். அத்துடன் அவரிடமிருந்து கல்வி சம்பந்தமான ஆலோசனைகளையும் பெற்று வருகின்றனர்.

எமது அதிபர் தான் சேவை புரிந்த கல்லூரிகளில் சமய சம்பந்தமான விழாக்களையும் மன்றங்களையும் புத்துயிர் பெறச் செய்து, மாணவர் மனத்தில் சமய உணர்வை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வந்தார். தொடர்ந்தும் அவரது பழைய மாணவர்கள் தமது சங்கத்தின் மூலம் கனடாவில் உள்ள றிச்மண்ட் ஹில் விநாயகர் ஆலயத்தில் ஒரு திருவிழாவைச் செய்து வருகிறார் என்றால், அது அவரது சமயப் பணியின் வெளிப்பாடாக அமைகிறது. மாணவரின் எழுத்தாற்றலை வெளிக்கொணர்வதில் இருந்து பெரும் கலைஞர்களைக் கௌரவிப்பது வரைக்கும் எமது அதிபரின் இன்னொரன்ன சேவைகளை எடுத்தியம்பிக் கொண்டே போகலாம்.

எமது அறிவுப் பசியைத் தீர்த்து, ஆலோசனை வழங்கி எமது வாழ்வை வழி நடத்திய எமது குருநாதர் எமக்கு மேலும் அறிவுரை வழங்க நீண்ட நோயற்ற வாழ்வை வழங்க வேண்டுமென்று இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால இரைமீட்டல்

யுத்தம் என்று ஆரம்பித்துவிட்டால் எத்தனையோ விடயங்களை இழந்துதான் ஆகவேண்டும் என்று இங்குள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கும் போய்த் திரும்பாத நண்பன் ஒருவன் சொல்லிக் கொண்டே இருக்கிறான். சொந்த நாட்டு வாழ்வை யுத்தம் காரணமாக இழக்க வேண்டுமா என்பது பற்றித், தாடி வைத்த மற்றும் தாடி வைக்காத நண்பர்கள் இருவர் பியர்ச்சாலைகளில் அடிக்கடி விவாதித்துக் கொள்கிறார்கள். வேற்று நாட்டுப் புரியா மொழித் தினசரியில் வாழ்க்கை விடிந்து கொண்டும், இருண்டு கொண்டும் இருக்கிறது. மனம் தாங்க முடியாத துயரம்! தாய் நாட்டு இழப்பு! என்பதை மட்டும் என்னால் கூற முடியும். இதை வேறு வார்த்தைகளில் விளக்க என்னால் முடியவில்லை. ஆனால், ஒரு மனிதன் தனது தாய்நாடு பற்றித் துயருறுவது போலவே, ஒரு தாய்நாடு தனது புதல்வர்கள் எட்டாத் திசைகளில் அலைப்புறுவது பற்றியும் துயர் கொள்ளுமா என்பது தெரியவில்லை. தாய்நாடு ஒரு சடம்தான் என்றும், இல்லை அது உயிருள்ள பறவை என்றும் மனத்துள் எண்ணங்கள் முடிவுறாது மோதிக் கொண்டு கிடக்கின்றன. ஒரு பேச்சுக்குத் தாய்நாட்டின் துயரை யாராவது பதிவு செய்ய முடியும் எனில், அதில் எமது மதிப்பிற்குரிய அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களது இழப்பும் ஒரு அழுத்தமான பதிவாக இருக்கும்.

சில மாதங்களுக்கு முன் எனது நண்பன் ஒருவன், அதிபருக்கு அறுபது வயது நிறைவதாகவும், அதற்குக் கனடாவில் எடுக்கும் விழாவில் வெளியிடப்படவுள்ள மலரில் எனது படைப்பும் இடம்பெற வேண்டும் எனவும் தொலைபேசியில் இரண்டு மூன்று தடவைகளும், கனவில் ஒரு தரமும் வலியுறுத்தினான். எனக்கு எழுதுவது தொழில் அல்ல. எனது படைப்புகள் இந்த நூற்றாண்டின் சிகரங்களும் அல்ல. ஆனாலும் இப்படிச் சில பேர் என்னை எழுதுமாறு பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். (வேறு சிலர் என்னை எழுதாதே என்றும் பயமுறுத்துகின்றனர்.)

அதிபர் பற்றி எழுத வேண்டும் என்ற கட்டளையை மீறவும் முடியாமல், அதிபர் பற்றி எழுத ஏற்படும் தயக்கத்தை மீறவும் முடியாமல் கடந்த சில வாரங்கள் நான் பட்ட அவஸ்தை தனிக் கதை. ஒருவரது பணிகள் அவரது வாழ்வுக் காலத்தில் கௌரவம் செய்யப்பட வேண்டும் என்று விரும்புபவன் நான். அதேவேளை ஒருவரது பணிகள் பற்றி நாம் கூறப் போவது, அவரைத் துதிபாடும் ஒன்றாக ஆகிவிடும் என்றால் அது நல்லதல்ல என்பதும் எனது அபிப்பிராயம். ஆனால் யாராவது அறுபது வயதாகும் வரை பார்த்து, ''அண்ணை, உங்கடை அறுபது வயதுக் காலத்திலை என்ன நல்ல விசயங்கள் சாதிச்சனீங்கள்? எனக்கெண்டா அப்படி ஒண்டும் இருக்கிற மாதிரித் தெரியேல்லை. இருந்தாச் சொல்லுங்கோ'' என்று கேட்பார்களா என்ன. எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு பாராட்டுவார்கள். ஒருவரது வாழ்வுக் காலத்தில் அறுபது வருடங்கள் முக்கியம் எனக் கணித்து நாங்கள் எடுக்கும் விழாவில் அல்லது மலரில் அவரது வாழ்வைப் பற்றி விமர்சனம் செய்வது ஒருவகையில் சரியல்ல எனத் தோன்றினாலும், உண்மையில் அவரது வாழ்வின் நல்ல அம்சங்களை மாத்திரமன்றி, நல்லதல்லாத அமசங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது என்றே நான் நம்புகிறேன். இது அறுபது வயதுவரை வளரக்கூடிய ஏனைய பெருந்தகைகட்கும், அறுபது வயதுவரை வாழ்வோம் என்று நம்புகிற தமிழ்ப் பெருங்குடி மக்கள் பலருக்கும் உதவியாய் இருக்கும். இவ்வகையில் அதிபரது (எனக்குத் தெரிந்த) வாழ்க்கைக் காலத்தை பௌதிக, இரசாயன ஆய்வுகட்கு உட்படுத்திப் பார்த்தால் எனக்கு அவரது நல்ல அம்சங்கள் மாத்திரமே கண்ணுக்குப் பெரியதாய்த் தெரிந்தன. (நான் முன்பு கூறியது போல, அறுபது நிறைகிறது என்ற காரணத்துக்கான புகழ்ச்சி அல்ல இது.)

மற்றவர்களுக்காக வாழும் மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அதிபரைப் போல, மிக அதிகத் தொகையினரான மற்றவர்களுக்காக, வாழச் சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிடையாது. அந்தச் சந்தர்ப்பத்தை அவர் நன்கு பயன்படுத்தினார். ஏறத்தாழ 2,500 பேர்களது நல்வாழ்வு மகாஜனா என்ற குடைக் கீழ் அவரால் வளம்பெற முடிந்திருக்கும். அத்தனை பேர்களும், அவர் தம் பெற்றோரும் ஒரு குறுகிய காலத்திலேயே மகாஜனா என்ற சொல்லை ஒரு மந்திரம் போல உச்சரிக்கக் காரணமானவர் அதிபர். எனது கல்லூரிக் காலத்தில் கணிசமானதும், முக்கியமானதுமான பங்கு அதிபரது நிர்வாகத்தின் கீழ் நடந்தது ஒரு வகையில் எனது அதிர்ஷ்டம் என்றே கருதுகிறேன்.

அதிபர் ஒரு முழுமையான நல்லுணர்வுகள் உள்ள மனிதராக இருந்தார். அதேவேளை, பரந்து பட்ட துறைகளில் ஒரு நிபுணராகவும் இருந்தார். இதனாலேயே கல்வி மாத்திரமன்றிக் கலை, விளையாட்டுப் போன்ற துறைகளில் அவரது காலம் மகாஜனாவின் பொற்காலம் ஆகியது. உதாரணமாக, 1970 முதல் அதிபர் பதவிக்கு வரும்வரை மகாஜனாவின் வருடாந்த மலரான 'மகாஜனன்' அச்சிடப்படவில்லை. 1970ல் அச்சிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்கூடத் தீர்க்கப்படவில்லை. அதிபர் பதவிக்கு வந்த சில காலத்திலேயே இக்கடனைத் தீர்க்க ஒரு நல்ல வழியைத் தேர்ந்தெடுத்தார். அப்போது ஈழத்துத் தமிழ் நாடக உலகில் நல்ல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. கட்டுப்பெத்தைத் தமிழ்ச் சங்கம் புகழ்பெற்ற ரஷ்ய நாடகமொன்றைத் தமிழில் தயாரித்திருந்தது. 'பிச்சை வேண்டாம்' (அலெக்ஸி அபுசோவ்) என்ற அந்த நாடகம் தாசீஸியஸின் நெறியாள்கையில் பாலேந்திரா, ஆனந்தராணி போன்றோர் நடித்திருந்த அற்புதமான தயாரிப்பு. இந்த நாடகம் நிதி உதவிக்காகப் போடப்பட்டது. பழைய மாணவர்கள் ஆதரவை வழங்கினர். (அந்தக் காலத்தில்) பெருந் தொகைப் பணமான 20,000 ரூபாய்க் கடனும் தீர்க்கப்பட்டதுடன், அதே வருடம் மகாஜனன் மலரும் வெளிவந்தது. இந்த ஒரு நிகழ்ச்சியில் பல சாதகமான அம்சங்கள் இருந்தன. கல்லூரியின் கடனை அடைப்பதில் எல்லோரும் பங்கெடுக்க வேண்டும் என்பது ஒன்று. நகரங்களில் மாத்திரமே நிகழக்கூடிய நவீன நாடகங்களைக் கிராமங்களிலும் மேடையேற்ற முடியும் என்று நம்ப வைத்தது மற்றொன்று. இவற்றைவிட முக்கியமாக எனக்குத் தெரிந்த ஒரு விடயம், 'பிச்சை வேண்டாம்' பார்க்க அத்தனை பேருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவற்றுக்கு, ஆசிரியராக இருந்த மயிலங்கூடலூர் பி. நடராஜனும் ஒரு முக்கிய காரணம். அப்போது நுழைவுச் சீட்டு பத்து, ஐந்து ரூபாய்களாக இருந்த ஞாபகம் (எனக்கின்னும் அறளை பெயரவில்லையெனில்).

# இளவாலை விஜயேந்திரன்

ஒஸ்லோ, நோர்வே

இந்த நிகழ்வு பிற்காலத்தில் நானும் வேறு சிலரும் பாடசாலைக் காலத்தில் 'புதுக' என்ற காலாண்டுச் சஞ்சிகையை ஆரம்பிக்க நிதி சேர்ப்பதில் அனுபவமாக உதவியது. அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் 'யுகதர்மம்', 'சம்பந்தம்' போன்ற நாடகங்களை நாம் அம்பனைக் கிராமத்தில் (மகாஜனாக் கல்லூரி அரங்கில்) துணிச்சலோடு மேடையேற்றக் காரணமானது.

அதிபரது வெள்ளை உடுப்பும் அந்த ஸ்கூட்டர் ஓட்டமும் இப்போதும் கண்ணுக்குள் நிற்பன. அந்த வேகத்திற்கு பாடசாலையை இத்தனை நேரம் பிரிந்து இருந்துவிட்டேனே என்ற அவரது ஏக்கம் காரணமோ தெரியவில்லை. காலையில் 'புற்போல் பிறக்ரீஸ்' எடுக்கிற நேரமும் மாணவர்கள் அவரைக் காண்பார்கள். பேச்சுப் போட்டிக்காகவோ, விளையாட்டுப் பயிற்சிக்காகவோ பின்னேரம் நிற்கும் மாணவர்களும் அவரைக் காண்பார்கள். காலையில் பிந்தி வருகிற மாணவப் பெருந்தகைகளையும், பின்னேரங்களில் வீட்டுக்குப் போகாமல் 'மசிந்திக் கொண்டு' நிற்கிற பெருந்தலைகளையும் அவருக்குத் தெரியும். 'பிறக்ரிஸ்'க்கு ஒழுங்காக வராத வீரர்களையும் தெரியும். பாடம் 'கட்' பண்ணிப் படத்துக்குப் போகிறவர்களையும் தெரியும் அல்லது தெரியவரும். இந்த மாதிரிக் கனக்க விவகாரங்களை ஒரே நேரத்தில் கவனிப்பதால்தான் அவரைக் 'கனக்ஸ்' (கனக்க என்பதன் 'ஆங்கில' வடிவம்) என்று அழைத்தார்களோ என்னவோ.

இப்படிப் பல தரப்பட்ட விவகாரங்களுக்கு இடையிலும், அவருக்குப் படிப்பிக்கிற வேலை இருந்தது. விலங்கியலைப் படிப்பிக்கக் கை நிறையக் கலர்ச் சோக்குகளுடன் அந்த அசோக மரங்கள் வரி சையாய் நிற்கிற பகுதியிலிருந்த 'லெக்சர் ஹோலி'ல் இருந்த எங்கள் வகுப்பறைக்கு அவர் அடிக்கடி வருவார். அவர் ஆசிரியராக எமக்கு வகுப்பறைக்குள் இருக்கையில் அயலில் நிகழும் விவகாரங்களையும் கவனித்துக் கொண்டிருப்பார். ஆனால் பாடம் பிசகாது. படமும்தான்.

நான்கு அல்லது ஐந்து வருடங்கள்தான் அதிபர் எமது பாடசாலையில் அதிபராக இருந்திருக்கிறார். ஆனால் அவரது காலம் ஒரு பொற்காலம் என்றே அவரது கால மாணவர்களால் கருதப்படுகிறது. பொற்காலம் என்றால் சோழர் காலம் மாதிரிக் கற்பனை செய்யாதீர்கள். சோழர்கள் போல ஊரான் சொத்தைக் கொள்ளையடித்துக் கடல் கடந்து நாடு பிடித்துப் பொற்காலம் கண்டவரல்ல அதிபர். அவர் அதிபராக வருவதற்கு முன் அதே கல்லூரியில் நான்கு அதிபர்களை நான் சந்தித்திருப்பேன். ஆனால் என்னால் அந்தப் பொற்காலத்திற்குரிய அடையாளங்களை இந்த அதிபரது காலத்திலேதான் தெளிவாகக் காண முடிந்தது. வேறு யாராவது காண முடியாமல் இருந்திருந்தால் அது ஆச்சரியம்.

மாணவர்களுக்குப் பாட நூல்கள் மட்டுமல்ல உலக விவகாரங்களும் இலக்கியங்களும் முக்கியம் என்பதை அதிபர் யோசித்ததால்தான் நாங்கள் பாடசாலை நேரத்திலேயே பத்திரிகை படிக்கவும், விகடன், குமுதம் வாசிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. நல்ல ரஷ்ய நூல்கள் மலிவாகக் கண்காட்சி ஒன்றில் போகின்றன என்ற, ஒரு மாணவனான எனது சொல்லைக் கேட்டு என்னிடமே காசு தந்துவிட்டு அந்த நூல்களை வாங்குவித்த ஒரு ஆசிரியையும் (திருமதி அனந்தசயனன்), அதற்குரிய சுதந்திரத்தை வழங்கிய அதிபரும் இருந்த காலம் பொற்காலம் என்றே எனக்குப்படுகிறது. ஒரு மாணவன் (அடியேன்தான்) பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடகத்தைத் தயாரிக்கும் வாய்ப்புக் கிடைத்ததும் அந்தப் பொற்காலத்திலேதான். அடிக்கல் நாட்டப்பட்டுப் பல வருடங்களாக எழும்பாது நின்ற கட்டிடம் (அமரர் தெ. து. ஜெயரத்தினம் நினைவு மண்டபமாக) எழும்பியது ஒரு பொற்காலத்திலேதான் நிகழ்ந்திருக்க முடியும். பாடசாலை என்பது வெறும் கட்டிடங்கள் மட்டுமல்ல என்பதை நினைத்து, வீதியோரங்களில் கடுதாசிப் பூக்களையும், உள்வீதி வரிசையில் அசோக மரங்களையும் நட்ட அதிபரது காலத்தைப் பொற்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தகும். ஏதோ ஒரு நிதித் தேவை ஏற்பட்டபோது அதிபரது காலத்திலேதான் வீடியோவில் இரண்டு தமிழ் திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. முதன்முறையாக என்னைப்போல எத்தனை பேர் அன்று வீடியோ பார்த்தார்களோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

இப்படிப் பல விதங்களில் சிறந்து விளங்கிய ஒரு அதிபரைப் பற்றி நானோ அல்லது வேறு எவருமோ எழுதினாலும் பாராட்டாகவே இருக்கும். அதனாலேதான் இந்தக் கட்டுரையை (இது கட்டுரையா என நீங்கள் கேட்பது புரிகிறது) நான் எழுதும்போது தயக்கம் காட்ட நேர்ந்தது. அதேவேளை அவரைப் பற்றி ஒரு சில குறைகளையாவது கூறாவிட்டால் இது நிறைவு பெறாது என்றும் தோன்றுகிறது.

அதிபர், பாடசாலைக்குப் புகழ் சேர்க்கும் மாணவர்கள் தவறு செய்யும்போது அவர்கள் மீது கடும் கண்டிப்பைக் காட்டவில்லைப் போல எனக்குள் ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. அது உண்மையா, அப்படியானால் அது ஏன்?

'கோழைகளின் யுத்தத்'தில் மகாஜனாவைவிட்டு விலக நேர்ந்தபோது, தனது நிலைபற்றி மாணவர்களுடன் பேசி அவர்களைத் தனக்கு ஆதரவாகத் திருப்ப முனையாதது ஏன்? அன்று அவரைப் பற்றி முற்றாகத் தெரிந்திருந்து அவரை ஆதரிக்கும் நிலையிலேயே பெரும்பாலான மாணவர்கள் இருந்தார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

இப்படிச் சில கேள்விகள். மகாஜனாவுக்கு அவர் அதிபராக வர முன்பு, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் அதிபராக இருந்தார். அவர் மாற்றலாகிச் செல்லக்கூடாது என்று அந்தக் கல்லூரி மாணவர்கள் ஏன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்பது, அவர் மகாஜனாவுக்கு வந்த சில நாட்களிலேயே எனக்குப் புரிந்தது. இறுதியில் மகாஜனாவைவிட்டு அவர் விலகிய பிறகு தனியார் கல்விக்கூடங்களில் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் அவரது பாடத்துக்காக அலைமோதியபோது, எத்தனை சிறந்த ஆசிரியரை நம் மகாஜன அன்னை இழந்திருக்கிறாள் என்று மனத்துள் அழுதிருக்கிறேன். சொன்னால் நீங்கள் நம்பப் போவதில்லை. நீங்கள் எதையும் நம்பப் போவதில்லை.



**1978ஆம் ஆண்டு மகாஜனக் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினரை வரவேற்றல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ. க. வின் நிர்வாகத் திறன்

திரு. பொ. கனகசபாபதி அவர்களின் நிர்வாகத் திறன் அறிய அவர் அதிபர் பதவி வகித்த மகாஜனக் கல்லூரியை உருவாக்கிய வரலாற்று நாயகர்களின் செயற்றிறனையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தமது தலைமைப் பதவியைத் துறந்து தமது இல்லத்தில் திண்ணைப் பள்ளி அமைத்தார். அங்கு அவரைத் தொடர்ந்து சென்ற மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்போது மேலும் மாணவர்கள் அங்கு சென்றார்கள். எதிர்பாராத முறையில் அழைப்பின்றி ஆசிரியர் இருவர் அங்கு சென்று சேர இடவசதி கருதி அம்பனையில் ஒரு சிறு நிலப்பரப்பில் கொட்டில் அமைத்துத் திண்ணைப் பள்ளி இடமாற்றம் பெற்றது. அங்கும் மாணவர் வருகை அதிகரிக்க ஆசிரியர்களும் சென்று சேர திண்ணைப் பள்ளி மகாஜன வித்தியாலயம் ஆனது. வித்தியாலயத்தையே அழித் தொழிக்கும் நோக்கில் எதிர்ப்புக்கள் அதிகரித்தன. இவை பாவலர் முன் நீடித்து நிலைக்கவில்லை. வித்தியாலயம் மேலும் வளர்ச்சி பெற்றது. இத்தனை நிகழ்வுகளுக்கும் காரணம் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் தன்னலமற்ற பலன்கருதாத தியாக சேவையே எனலாம். செயற்கரிய செய்வர் பெரியர் என்பது புலனாகிறது. அயராது உழைத்த அவர் உடம்பு நலிவடைந்தது. ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில், விட்டநிலையைத் தொடரும் அதிகாரம் செல்ல வேண்டிய இடத்திற்கே சென்றடைந்தது. பாவலரின் மைந்தன் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் வித்தியாலயத்தை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றார். ஆசிரியராக அங்கு பணியாற்றியவர்; தந்தையாரின் மனநோக்கை நன்குணர்ந்தவர். அந்த நோக்கை நிறைவேற்றத் துரிதமாகச் செயற்பட்டார். அவர் தொட்டதெல்லாம் பொன்னாய் விளைந்தது. பத்து வருஷ ஆட்சிக்குள் வித்தியாலயம் முழு மாற்றமடைந்தது. அதன் காரணம் அவர் செயற்றிறனே. இவ்விரு இலட்சியவாதிகளின் தன்னலமற்ற அயராத சேவையின் பயனாக உருவாகியதே நவ மகாஜனா.


திரு. பொ. கனகசபாபதி அவர்கள் அங்கு ஆசிரியராகப் பல வருஷங்கள் பணி புரிந்து அதிபர் பதவி ஏற்கும்போது மகாஜனக் கல்லூரியின் தரம் நாட்டின் தரமுயர்ந்த கல்லூரிகளில் (Super Grade) ஒன்றாக விளங்கி எழுபதுக்கும் அதிகமான தரமான ஆசிரியர்களையும், இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட மாணவர்களையும் ஒரு உயர் கல்லூரிக்கு வேண்டிய சகல அம்சங்களையும் தன்னகத்துக் கொண்டு திகழ்ந்தது. இவை அனைத்தும் அதன் அதிபர் பதவி ஏற்பவர்க்கு உந்து சக்தியாய் உணர்வூட்டுவன. இந்தகைய கல்லூரியின் அதிபர் பதவி ஏற்பதும் அதனை நிர்வகிப்பதும் பெருமைக்குரியதே.

திரு. பொ. கனகசபாபதி அவர்கள் இதனைத் திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றவர்; சேவை மனப்பான்மை உள்ளம் படைத்தவர்; உயர்தர வகுப்பு ஆசிரியராகப் பல வருஷங்கள் அங்கு பணியாற்றியவர்; ஆசிரியர், மாணவர் அனைவரின் மதிப்புப் பெற்றவர்; பாடசாலையின் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு சரி, பிழை தெரியத் தெளிந்து செயலாற்றியவர். மகாஜன சிற்பி எனப் பாராட்டப்படும் அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் செயற்பாடுகளில் ஈடுபட்டு உழைத்தவர். அவரைப் பின்பற்றுபவர். சுருங்கக் கூறின் அனுபவஞானம் பெற்றவர். அனுபவ ஞானமே செயல்திறனின் மூலம்.

திரு. பொ. கனகசபாபதி அவர்கள் அதிபராய் செயலாற்றும்போது மகாஜனா பெற்ற பெறுபேறுகளே அவர் நிர்வகிக்கும் திறம் பெற்றவர் என்பதை எடுத்துக் காட்டுவன. திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களை என்றும் நினைவுகூரும் பொருட்டு அவர்கள் பெயரில் மணிமண்டபம் அமைத்தமையும் சிறப்பே.

அனைவராலும் சிறந்த அதிபர் எனப் பாராட்டப்படும் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் மணிவிழாச் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம் என்பதைத் தெரிவிப்பதோடு அன்னார் நல்ல சுகபலத்துடன் மேலும் நற்பணிகள் பல புரிந்து பல்லாண்டு காலம் இனிது வாழவும் வேண்டுகின்றோம்.

வாழ்க மகாஜனா! வாழ்க அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள்!



**வே. தியாகராசா**
**முன்னைநாள் ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனங்கள் மனத்தில் நிலைத்து நிற்பவர் அதிபர் பொ. கனகசபாபதி

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க இவ்வையகத்தில் புகழோடு தோன்றி, தன்னலமற்ற சேவைகள் புரிந்து மக்கள் உள்ளங்களில் அழியாப் புகழுடன் இருப்பவர் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள். ஒரு சில ரிடம் ஒரு சில பண்புகள் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் பரந்த உள்ளம் படைத்தவராகவும், மக்கள் சேவையே மகேசன் சேவை எனக் கொண்டு தொண்டாற்றுபவராகவும் உள்ளோர் ஒரு சிலர் மட்டுமே. அவர்களுள் எமது அதிபர் திரு. பொ. கனகசபாபதியும் ஒருவராவர்.

கனடாவில் கலைவிழா என்றால் என்ன, எழுத்தாளர் இலக்கிய விழா என்றால் என்ன, நடன அரங்கேற்றம் என்றால் என்ன, புத்தக வெளியீட்டு விழா என்றால் என்ன அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் சிறப்புரை நிகழ்ச்சி இல்லாமல் விழா இல்லை. அவரின் பேச்சை ஆவலுடன் செவி மடுப்பவர் அனேகர்.

நான் ஆரம்பக் கல்வியை சேர். கனகசபை வித்தியாசாலையில் படித்துவிட்டு, 1958ஆம் ஆண்டு மகாஜனக் கல்லூரியில் எனது படிப்பைத் தொடரச் சேர்ந்தேன். எமது கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் முதன் முறையாக அருளம்பலம் இல்லம் சார்பில் எனக்கு பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தது. திரு. பொ. கனகசபாபதி அவர்கள்தான் எமது இல்லப் பொறுப்பாசிரியராவர். அவர் அன்று விளையாட்டில் வெற்றி பெறத் தந்த உற்சாகமும் ஊக்கமும் இன்றும் என் மனத்தில் நிலைத்து நிற்கின்றன. விளையாட்டுப் போட்டியன்று நான் ஓட்டப் பந்தயத்தில் முதற் பரிசைத் தட்டிக் கொண்டு வந்தபொழுது அவர் என்னை அணைத்துப் பராட்டியது என் மனத்திரையில் இப்பவும் ஓடிக் கொண்டிருக்கின்றது. இதுதான் எமது அதிபருடன் எனக்கு ஏற்பட்ட முதல் அனுவபம்.




மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா) - இராப்போசன விருந்தில் - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரிடம் நான் ஒரு மாணவனாக என்றும் கற்றதில்லை. காரணம் நான் ஒரு கணிதத்துறை மாணவன். எனக்கு அப்பெரும்வாய்ப்புக் கிட்டாவிடிலும் எனது மனைவி ஜெகா, அவரிடம் க. பொ. த உயர் தரத்தில் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக் கழகத்துக்குப் போக வேண்டுமென்ற அவா வினால் மேலதிக வகுப்புகளை காலை, மாலை நேரங்களிலும், சனி, ஞாயிறு நாட்களிலும் நடத்துவார். இதன் பலனாக பல மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் பெருமை அகில இலங்கை ரீதியில் மகாஜனாவுக்குக் கிடைத்தது. இதற்குக் காரணம் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களேதான்.

வருடங்கள் ஆகின்றன. கனடாவில் எமது சங்கம் மிக உயிர்ப்பு உள்ள இயக்கமாக இயங்கி வருகிறது. இதற்கு அதிபர் அவர்கட்கும் பழைய மாணவர்களுக்கும் உள்ள மிக நெருங்கிய தொடர்புதான் முக்கிய காரணமாயுள்ளது எனக் கூறுவேன். அதிபர் அவர்கள் சிந்தனை கனடாவில் பிறந்த நம் குழந்தைகள் மீதுதான். அதற்கென்று இங்கேயே, இந்தச் சூழலுக்கு ஏற்ப, எமது கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை எடுத்து அவர்களுக்குச் சொல்லும் வண்ணம் எமது நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும், மகாஜனாவின் பாரம்பரியம் வாழையடி வாழையாகத் தழைத்தோங்க வேண்டும் என்பது அவர் உள்ளத்தில் எழும் பேரவா! யூதர்கள் இஸ்ரேல் நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு வெளிநாடுகளில் உள்ள யூதர்கள்




**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுடன்.**

1989ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 8ஆம் நாள் கனடா வாழ் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்களுக்கு ஒரு பொன் நாளாகும். அன்றுதான் எமது அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் எமது முன்னாள் ஆசிரியர்களும், பழைய மாணவர்களுமான திரு. மு. கார்த்திகேசு, திரு. இ. சிவசோதி, திரு. க. துரைசிங்கம், திரு. ச. சுப்பிரமணியம், திரு. சி. முருகையா, திரு. ச. சிவநேசன், திரு. இ. ரவீந்திரன், திருமதி ஜீ. வை. வேலுப்பிள்ளை ஆகியோர் ஒன்றுகூடி எமது பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.

எமது சங்கம் ஸ்தாபித்து இன்று ஆறு

எப்படி பாலம் அமைத்தார்களோ அதுபோல் நாமும் எமது தமிழீழத்தைக் கட்டி எழுப்ப வெளிநாடுகளிலிருந்து பாடுபட வேண்டும்.

வேறு எவருமே துணியாத வண்ணம் நாம் எம் குழந்தைகளுக்காக வருடம் முழுவதுமே பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். சித்திரையில் புது வருடம் பிறந்தால் சிறுவர்களின் கைப்பணி பொருட் காட்சி, நம் குழந்தைகளின் கதை, கட்டுரை, கவிதை அடங்கிய மகாஜனன் மலர் வெளியிடுதல், அதனோடு இன்னிசை விருந்துடன் கூடிய இராப்போசன விருந்து!

வைகாசி மாதம் பிறந்ததும் றிச்மண்ட் ஹில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூங்கா ஒன்றுகூடலிற் பழைய மாணவர்களுடன்

பிள்ளையார் கோவிலில் திருவிழா ஆரம்பமாகிவிடும். அத் திருவிழாக் காலத்தில் நாம் பன்னிரண்டாம் திருவிழாவை நமது குழந்தைகள் பண்ணிசைபாடிப் பக்தி பரவசத்தில் மிதக்கும் வண்ணம் பெருவிழா எடுத்து வருகிறோம்!

ஆடி பிறந்ததும் ஒன்றுகூடல் நிகழ்ச்சி. அத்துடன் கூடிய சிறியோர், முதியோருக்கான விளையாட்டுப் போட்டிகள், ஆண்டு வருடாந்தக் கூட்டம் என்பவற்றை பூங்காவில் நிகழ்த்தி வருகின்றோம்!

ஆவணியில் எமது சிறார்களுக்கான சமய அறிவு, பேச்சு, எழுத்து, கவிதை, சிறுகதை போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகின்றன!

**- வே. நந்தீஸ்வரன் -**

ஐப்பசியில் நவராத்திரி காலத்தில் முத்தமிழ் விழாவைச் சிறப்பாக நடத்தி எமது சிறார்களின் கலைத்திறன்களுக்கும் படைப்புக்களுக்கும், ஆக்கங்க ளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எமது குழந்தைகளை எமது கலை, கலாச்சார, பண்பாட்டில் ஊறவைக்கிறோம்!

மார்கழியில் கிறிஸ்தவ சிறார்களுக்காக 'கரோல்' நிகழ்ச்சியில் பங்குபற்றுகிறோம்!

வருடந்தோறும் நிகழ்ந்து வரும் அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்புற நடத்துவதற்கு அதிபர் அவர்களின் அயராத முயற்சியும், அவர் எமக்குத் தரும் உற்சாகமும், ஊக்கமும் நம் எல்லோரையும் ஒன்றிணைத்து ஒரு குடும்பமாக இந்நிகழ்ச்சிகளை ஒழுங்காக நிகழ்த்த ஏதுவாக உள்ளன.

ஆலமர விருட்சம் போல் வளர்ந்துள்ள மகாஜனா அன்னையின் பழைய மாணவர் சங்கம் கனடாவில் மட்டுமன்றி, தனது கிளைகளை இலண்டன், பாரிஸ், கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் விழுதுகளாக வேரூன்றி அனைத்துப் பழைய மாணவர்களுக்கும் நிழல் கொடுத்து ஓங்கி நிற்கின்றது. இவ்வாறு ஓங்கி நிற்பதற்கு அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் ஒத்தாசையும், ஊக்கமும் ஒரு மூலகாரணமாக இருக்கின்றது.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க வாழ்ந்து காட்டும் எமது அதிபர் அவர்களின் மணிவிழா கொண்டாடப்படும் இவ்வேளையில் மகாஜனா பழைய மாணவர்களாகிய நாம் பெருமிதமடைகிறோம். எமது அதிபரின் சேவை எமது மாணவ மன்றங்களுக்கும், தமிழ் தாயின் புதல்வர்களுக்கும் எப்போதும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்க்கொரு கலங்கரை விளக்கம்

கற்றல் என்றால் என்ன? கற்பித்தல் என்றால் என்ன?

இந்த வினாக்களுக்கான விளக்கங்கள் பேராசான் அவர்களைச் சந்தித்த பின்னர்தான் எமக்கு முழுமையாகக் கிடைத்தன.

தாய் மண்ணைத் துறந்துவிட்டு வந்த எத்தனை பேர் தமது அடையாளங்களைச் சுலபமாக இழந்து போயிருக்கிறார்கள். ஆனால், இவரோ மூன்று தலை முறைகளைத் தாண்டிய பின்னரும், 30 வருடங்களுக்கு முன்னால், என் தாயாரின் ஆசிரியராக எப்படி வாழ்ந்தாரோ, அதைவிட இனிமையாக இன்று எம்மோடு வாழ்கின்றார். மிக ஆச்சரியமாக இருக்கின்றது. இவரால் எப்படி இது சாத்தியமாகின்றது? முற்றிலும் மாறுபட்ட கலாச்சார சூழல், இந்தக் கலாச்சார மாற்றத்திற்குட்பட்டு வரும் மாணவர் சமூகம், இவற்றுக்கிடையே தன்னைச் சிறிதேனும் மாற்றிக் கொள்ளாமல், இந்த மண்ணின் சூழ்நிலைகளை நன்கு புரிந்து கொண்டு, அவற்றிற்கேற்ப மாணவரை அணுகும் இவரது குணாம்சம் வியப்பதற் குரியதொன்று.



செல்வி. அருட்செல்வி அமிர்தானந்தர்

ஈழ மண்ணிலே, ஆசிரியர்கள் என்றால் கண்டிப்பானவர்கள், 'அடியாத மாடு படியாது' என்ற பழ மொழிகளை நினைவிற் கொண்டே கற்பிப்பவர்கள் என்றிருந்த எமக்கு, கண்டிப்பைக் கண்களில் கூடக் காட்டாமல், கனிவை மட்டுமே புலப்படுத்தி அறிவை அன்பாலும் தர முடியும் என்று தம்மை அடையாளம் காட்டியவர் இப்பெருந்தகையார்.

ஒரு தசாப்த காலத்திற்கு முன்னால், யாழ். மாவட்டத்திலே, விலங்கியல் பாடத்தில், அதைக் கற்பிக்கும் திறனில் புகழ் பூத்துத் திகழ்ந்தவர் என நாம் அறிந்திருக்கின்றோம். இதன் பின்னால், நைஜீரியா எனும் நாடு சென்று அங்கே தாவரங்களின் வரலாறு சொல்லும் விவசாய விற்பனராய், விரிவுரையாளராய்த் திகழ்ந்தார். ஆனால் இங்கே, எந்தக் காலத்திலும் கருகி அழிந்து போகாத நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும், இவற்றைத் தாங்கி உலகமெலாம் பரவும் வகை செய்யும் செழுந்தமிழையும் பாங்குற நமக்குப் பயிற்றுவித்தாரே, இந்தப் பல்துறை ஆற்றலைப் பலமுறை எண்ணி நான் வியந்திருக்கின்றேன்.

நமது கலாச்சாரம் இந்த மண்ணிலே வளர்ந்து கொண்டிருக்கின்றதா? இல்லை தேய்ந்து கொண்டிருக்கின்றதா? என்ற வாதப் பிரதிவாதங்களுக் கிடையே, எம்மைப் போன்ற மாணவ சமுதாயத்திற்கு மத்தியில், இவர் ஊட்டும் கலாச்சார பண்பாட்டு அறிவுரைகள் தம்பட்டமற்ற, தன்னடக்கமான இவரது கலாச்சார சேவைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

எந்த மண்ணில் எந்தப் பயிர் விளையும் என்றும், எந்தப் பயிருக்கு எந்த உரம் சிறந்தது என்றும் நல்லதொரு விவசாயி அறிந்திருப்பான். அதுபோல, எந்த மாணவன் எப்படிப்பட்டவன், எத்துறையில் சிறந்தவன் என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு மாணவரைக் கையாளும் வகையினைத் தெளிவுற அறிந்தவர் நமது ஆசிரியர் அவர்கள்.

'வெறும் கல்வியை மட்டுமே சொல்லிக் கொடுப்பதுதான் தொழில்' என வாழும் பல ஆசிரியர்கள் மத்தியில், கல்வியோடு கலையினையும், கலையோடு கலாச்சாரத்தினையும், கண்ணியமும் கட்டுப்பாடும் கொண்ட வாழ்வையும் ஒருங்கே கற்றுக் கொடுக்கும் **ஒப்பற்ற ஆசான் இவர்** என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இவரது பாடவேளையின் வருகைக்காய், திறந்திருக்கும் வாயிற் கதவுகளோடு, நாம் நம் இரு விழிகளையும், ஏன் இதயத்தையும்கூட திறந்து வைத்திருப்போம். இவர் தமிழை மட்டுமா எமக்குக் கற்றுத் தந்தார்? தேனினும் இனிய செந்தமிழோடு, பாசமும் அன்பும் கலந்து, நயமும் சுவையும் அதிற் குழைத்து, எமக்கு அவர் அமுதமாய் ஊட்டும் போதுதான்

''செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்''


என்ற வள்ளுவன் வாக்கின் உண்மையை நாங்கள் உணர்ந்து கொண்டோம். 'தமிழுக்கு அமுதென்று பேர்' என பாரதி தாசன் பாட்டாகப் பாடினார். அத்தமிழை அமுதாகவே எமக்கு ஈய்ந்தவர் இவ் ஆசிரியர் பெருந்தகை.

இந்தப் புகலிடம் பாலை வனத்தில், இலக்குகளைத் தொலைத்த எம் பயணத்தில், எமக்குக் விளக்காய் விளங்கும் பேராசான் அவர்களின் மணிவிழா மலரில் எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இந்நாளில்,

தொட்டனைத்தூறும் மணற் கேணியாம், அறிவைச் சுரந்து கொண்டிருக்கும் இவரை, எமக்கு வாழ்த்த வயதில்லை, எனினும், இக்குன்றிலிட்ட தீபத்தை பாதம் பணிந்து வணங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்வல்லுநர் குழு - 1977


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

- திருக்குறள்

# நண்பரும் தொண்டரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது இனிய நண்பன்

1956ஆம் ஆண்டு.
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, செலையூர் மண்டபம்.

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து இலங்கைத் தமிழ் மாணவர் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். உணர்ச்சிவசமான பேச்சாளர் இருவரைத் தொடர்ந்து மற்றொருவர் எழுந்தார். நெடுமாலைப் போல நிமிர்ந்தார். கடுமையாகத்தான் பேசப் போகின்றார் என்று எதிர் பார்த்தேன். கார்முகிலைக் கிழித்துவரும் மின்னலைப் போன்ற சிரிப்பு ஒன்றுடன் பேச்சை ஆரம்பித்தார். அமைதியாகவும் நிதானமாகவும் பேசினார். 'ஆகவே, எண்பது சிங்கங்களின் மத்தியில் இருபது மான்கள் நிம்மதியாக வாழ முடியாது' என்று முடித்தார்.

கனகசபாபதி அவர்களின் உணர்ச்சிவசமற்ற பேச்சு என்னை உணர்ச்சிவசப்படுத்தியது. அவரது கருத்தை வெட்டிப் பிளந்தேன். 'சிங்களவர் சிங்கங்கள் என்றால் தமிழர் மான்கள் அல்லர். அவர்களும் சிங்கங்களே' என்று கூறிக் கை தட்டல்களை வாங்கிக் கடகங்களிற் சுமந்துகொண்டு போய்விட்டேன்.

அவர் விடவில்லை. அவ்விதம் அன்று தன் ஆடையைக் களைந்தமைக்காகக் கனகாலம் காத்திருந்து கடந்த ஆண்டு எனக்குப் பொன்னாடை போர்த்தினார்.

இப்படியாக முரண்பாடு ஒன்றுடன் தொடங்கிய தொடர்பு இன்றும் வளர்ந்து கொண்டிருப்பது ஒரு சிறப்பு. இது என்றும் கண்டிராத ஒன்று: கசப்பு.

நட்புக்குக் காரணங்கள் கற்பிப்பார்கள். பிறந்த ஊர், படித்த கல்லூரி, தொழில், அரசியல், நாட்டம், உதவி போன்றவையோ பிறவோ ஏதாவது ஒன்று உறவை ஏற்படுத்தும் காரணியாக அமையும் என்பார்கள். நாம் ஓர் ஊரைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஒரு கல்லூரியில் படித்திருந்தாலும் அந்தக் கல்லூரியில் நாம் அடிக்கடி சந்தித்துப் பழகும் வாய்ப்பும் இருந்ததில்லை. அவர் இருந்த விடுதி வேறு. நான் இருந்த விடுதி வேறு. அவரது துறை விஞ்ஞானம், எனது துறை கலை.

அதனால் வகுப்புத் தோழராகவும் நாம் பழகியதில்லை. முதற் சந்திப்பே சிங்களம் மட்டும் எதிர்ப்புக் கூட்டந்தான். அதுவும் முரண்பாட்டில் முடிந்தது.

சினிமாப் படங்களில் ஓர் உத்தி அடிக்கடி கையாளப்படும். அந்த உத்திதான் எமது உறவுச் சித்திக்கும் காரணமாக இருக்கலாம் போலத் தெரிகின்றது. கதாநாயகன் - கதா நாயகி முதல் சந்திப்பு பெரும்பாலும் ஒரு கொளுவல் சூழ்நிலையில் நடைபெறும். அதாவது, ஒரு மோதலில் தொடங்கும். பின்னர் அந்த மோதல் மெல்ல மெல்லக் காதலாக மலரும். இதற்குத் திட்டவட்டமான காரணம் ஏதும் இருக்காது. எதிர்ப்பால் கவர்ச்சி என்றும் சொல்ல முடியாது. ஏனெனில், அவன் ஒருவனைத்தானா இவள் கண்டாள்? இவள் ஒருத்திரயத்தான் அவன் தன் வாழ் நாளில் கண்டானா? மேலும், இவள் பணக்காரியாக இருப்பாள், அவன் வறியவனாக இருப்பான். அவன் ஒரு சாதியாக இருப்பான், இவள் இன்னொன்றாக இருப்பாள். இவற்றையெல்லாம் தாண்டி இவர்களுக்குள் உறவு வளரும். முதற் சந்திப்பில் 'பொறுக்கி நாயே' என்றவள், அடுத்த சந்திப்பில் 'எனக்கு நீயே' என்பாள்.

காரணம் தெரியாததற்கு மற்றொரு பெயர் தெய்வீகம். இப்படியான ஒரு தெய்வீக உறவுதான் எமக்கிடையில் தோன்றி இன்றும் வளர்ந்து கொண்டிருக்கின்றது என்று சொல்லலாமா? என்ன, நான் கொஞ்சம் கனக்கக் கதைக்கிறேனா?

நான் கனக்கக் கதைத்தால் அவர் பொறுத்துக் கொள்வார். அவர் கனக்கக் கதைத்தால் - மன்னிக்கவும் அவர் கனக்கக் கதைப்பதே இல்லை. நேரில் கண்டால் என்ன, மேடையில் நின்றால் என்ன பேச வேண்டிய பொருளை அளந்து பேசுவார்; ஆழமாகப் பேசுவார். சாப்பாட்டில் உள்ள அறுசுவை பேச்சிலும் இருக்கும். அதாவது, அவரது பேச்சைக் கேட்பது நன்கு சமைக்கப் பெற்ற சாப்பாட்டைச் சாப்பிடுவது போல இருக்கும். நல்ல உணவில் அறுசுவை மட்டுமே இருக்கும். இவரது சமையலில் அறுசுவையுடன் மேலும் ஒரு சுவை கூடுதலாக இருக்கும்.

அதற்கு நகைச் சுவை என்று பெயர்.

இவருக்கு மனைவியர் இருவர். ஒருவர் கண்ணகி. மற்றையவர் மாதவி. என்றாலும் இவர் கோவலனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற குற்றங்களைச் செய்தவர் அல்லர். ஒரு சம்பிரதாயத்துக்காகவே கண்ணகியை முதலிற் குறிப்பிட்டேன். உண்மையில் இவர் முதலில் மணந்து கொண்டது மாதவியைத்தான்.

மாதவி மகாஜனக் கல்லூரி.

அண்ணனும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என்பது என்னவோ உண்மை தான். ஆனாலும், அவள் அழகிலே மயங்கி அவர் தவம் கிடக்கவில்லை. அவள்தான் இவரிலே மயங்கி மாலையைச் சூட்டிவிட்டாள். பிறகு என்ன? குடித்தனம் தொடர்ந்தது. பழகப் பழக அவளின் குணநலங்கள் இவரை ஆட்கொண்டன. விலையுயர்ந்த நகைநட்டுகள் எல்லாம் வாங்கிப்போட்டு அவளை அழகுபடுத்தினார். சில தடவைகள் என்னையும் அழைத்து எப்படி இவளின் அழகுபார் என்று காட்டி மகிழ்ந்தும் இருக்கிறார்.

உடலும் நீயே உள்ளமும் நீயே என்று இவர் மாதவியைப் பற்றி உரக்கப் பாடிக்கொண்டு திரிந்தார். அந்தப் பாடலைக் கேட்டு மயங்கிக் கண்ணகி வந்தாள். அமிர்தகௌரி சொன்னார் 'நான் வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்கிறேன் நீங்கள் மாதவியைக் மகிழ்வியுங்கள்' என்று.

'இப்படி ஒரு மனைவியா?'

இவரது வாய்மட்டுமன்றி மூக்குமுழி எல்லாம் சிரித்தன. சொன்னபடி தன்னுடைய வீட்டு வேலையைக் கண்ணகி கவனித்தாள். இவர் மாதவியின் வீட்டு வேலையைக் கவனித்தார். காலப் போக்கில் அவளின்றி இவரில்லை, இவரின்றி அவளில்லை என்னும் அளவுக்கு விடயம் முற்றிப் போய்விட்டது.

முற்றிய கனியில் பூச்சி விழுந்தது!

கனகசபாபதி மாஸ்டர் கற்புக்கரசியுடன் பாண்டிநாடு சென்றார். பின்னர் பாண்டிநாட்டிலிருந்து சேரநாட்டில், அதாவது கனடாவில் குடியேறினார்.

கனடாவில் அமிர்தகௌரி காலமானார். கனகசபையில் நடராசர் ஆடலை நிறுத்தலானார். ஆடலை நிறுத்த உலக இயக்கமும் நின்றது. அந்தர மனிதரும் இந்திர உலகமும் மந்திர முனிவரும் நடராசப் பெருமானை நோக்கித் தவம் இருந்தனர். ஆடல் மீண்டும் தொடர்ந்தது.

பிள்ளைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உணரப்பட்டது. நளமகாராசனுடன் கனகரும் போட்டியிடத் தொடங்கினார். நளன் நீரும் நெருப்புமின்றிச் சமைப்பதில் வல்லவன். இவர் உப்பும் புளியுமின்றிச் சமைப்பதில் வல்லவர். பிள்ளைகளுக்கு - மணிவண்ணன், மணிமாறன், மணிமொழி, மணிவிழி ஆகியோருக்கு - இவரே உப்பு; இவரே புளி. இவரே சகல சுவைகளும்.

தமிழீழத்தில் மலர நேரம் கிடைக்காத இவரது கலை ஒன்று கனடாவில் மலர்ந்திருப்பது குறித்து எனக்கு உள்ளார்ந்த மகிழ்ச்சி. மலர வைத்த 'தமிழர் தகவல்' ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் வாழ்க! பிற பத்திரிகைகளிலும் களவாக எழுதி வந்திருக்கின்றார். 'கௌரி' என்பவர் இவர்தான் என்று கண்டுபிடிக்க எனக்குப் பல நாட்களாயின. இழுத்துக் கொண்டுபோய் எழுத்தாளர் இணையத்தில் சேர்ப்பதற்குள் மூச்சுவாங்கத் தொடங்கி விட்டது. விளம்பரத்தை இவர் விலை கொடுத்து வாங்குவதில்லை.

எனக்கும் இவருக்கும் ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளே அதிகம். உதாரணமாக, இவர் உயர்ந்தவர், நான் தாழ்ந்தவன் - உயரத்தைச் சொல்லுகின்றேன். இவருக்கு மயிரெல்லாம் எப்பொழுதோ நரைத்துவிட்டன, எனக்கு இப்பொழுது தான் நரைக்கத் தொடங்கியுள்ளன - அறிவு முதிர்ச்சியைச் சொல்லுகின்றேன். இவர் நிதர்சனம், நான் கற்பனை - செயல் திறனைச் சொல்லுகின்றேன். இவர் ஒரே தோணி, நான் பல தோணி - கலைத் துறையைச் சொல்லுகின்றேன்.

அங்கும் சரி, இங்கும் சரி கனகசபாபதி மாஸ்டர் கால் ஊன்றி நிற்குந்துறை கல்வித்துறை என்பது ஈழத்துத் தமிழ் உலகம் நன்கு அறிந்ததொன்று. ஈழத் தமிழர் கல்வி வளர்ச்சி வரலாற்றில் இவருக்குத் தனி அத்தியாயம் ஒன்று உண்டு. மகாஜனக் கல்லூரி வரலாற்றில் பிள்ளை பாதி புராணம் பாதி என்பது போல் இவரது கதையே மிக நீளமாக இருக்கும்.

இத்தகைய ஒரு வரலாற்று மகன் எனக்கு நண்பனாக வாய்த்தது நான் செய்த தவம். மனைவி, பிள்ளைகளைப் போல நண்பர்களும் தவத்தால் வருபவர்களே.

எமது நட்பு ஒரு தொடர்கதை. எழுமையும் ஏமாப்பு உடைய கதை.

வாழ்க என் இனிய நண்பரும் அவரது பிள்ளைகளும்!

**- வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# "கனக்ஸ் எங்கிருந்தாலுமென்?"

திரு. பொ. கனகசபாபதி அவர்களுக்கு அறுபது ஆண்டுகள் பூர்த்தி. அதை முன்னிட்டு மணிவிழா. மேலும் அதைச் சிறப்பிக்க மணிவிழா மலர். இவை யெல்லாம் எனது கன வொன்று நினைவாகின்றது என்று நினைக்கும்பொழுது ஏற்படும் அளவில்லா மகிழ்ச்சியை எனது ஆற்றலுக்கேற்ற சில வார்த்தை களில் எழுதிக் கொள்வதற்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத் துதவிய மணிவிழாக் குழுவினருக்கு எனது நன்றி.

கனக்ஸ் தனது 22வது வயதில் சென்னை கிறீஸ்தவக் கல்லூரியிலிருந்து விலங்கியல் சிறப்புப் பட்டதாரியாகத் தங்கப் பதக்கம் பெற்றுச் சித்தியடைந்தார். தனது லட்சியமாகக் கொண்ட ஆசிரியர் தொழிலை ஓரேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் அனுசரனையுடன் மகாஜனக் கல்லூரியில் ஆரம்பித்தார். இந்தியப் பட்டதாரிகளில் தனக்கு நம்பிக்கையில்லை யெனக் கருதிய அதிபர் ஜெயரத்தினமவர்கள் கனகசபாபதி மகாஜனக் கல்லூரியை விட்டுப் போய்விடுவாரோ என்று பயப்பட ஆரம்பித்துவிட்டார். கனக்ஸின் ஆற்றலையும் திறமையையும் கண்ட ஜெயரத்தினமவர்கள் மட்டுமல்ல சூழ்ந்திருந்த எல்லோருமே அவரைப் பாராட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

அவர் சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியவர்களோடு பழகும் முறை, அவர்களை நடத்தும் முறை எல்லாமே பலரைக் கவரத் தொடங்கியது. இதன் பயனாக அவர் அதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்டு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். புத்தூர் விவசாயப் பரம்பரையைக் கொண்ட ஓர் அமைதியான கிராமம். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் பிரச்சினை குறைந்த ஒரு பாடசாலை. குறைந்த வயதிலேயே சிறந்த திறனைப் பெற்றிருந்த கனகசபாபதியின் ஆரம்ப கால அதிபர் தொழிலுக்கு உற்சாகத்தையும் தொழில் நம்பிக்கையையும் கொடுக்கக்கூடியதாக அமைந்தது அது.

அதிபரானதும் கற்பித்தலுக்கு முற்றுப் புள்ளி இடுவது அதிபர்களின் இயல்பு. ஆனால் கற்பித்தலையே கனவும் நினைவுமாகக் கொண்ட கனக்ஸ் அலுவலகப் பொறுப்பின் மத்தியிலும் கற்பித்தலை ஒரு பொழுதும் உதாசீனம் செய்ததில்லை. அவர் அங்கு காட்டிய நிர்வாகச் சிறப்பும் கற்பித்தலின் முன் மாதிரியும் ஐந்து வருட காலத்தில் கல்லூரியின் மாணவர் தொகை ஏறத்தாழ 800 இலிருந்து சுமார் 1600 ஆக அதிகரிக்கச் செய்தது. எண்ணிக்கையில் மட்டுமன்றித் தரத்திலும் பாடசாலை அதி வேகத்தில் முன்னேறிக் கொண்டு சென்றது. இவரின் முயற்சியால் மாணவர்கள் முதன் முறையாக மருத்துவக் கல்லூரிக்கும் தெரிவு செய்யப் பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## T. புத்திரசிங்கம்

புத்தூர் அமைதியான கிராமம் என்றாலும் சாதி உணர்வு மிகுந்த ஒரு கிராமம். அங்கு தாழ்த்தப்பட்ட பிள்ளைகளைப் பாடசாலைகளில் அனுமதிப்பது பல காலப் பிரச்சினையாக நிலவிவந்தது. அப் பிரச்சினையை கனக்ஸ் மிகவும் சிறந்த முறையில் அதிக முரண்பாடின்றித் தீர்த்து வைத்தார். இது அவர் சமூக ரீதியில் சவால் செய்து சமாதானம் கண்ட முதல் வெற்றியாகும். கனகசபாபதி ஒரு சிறந்த அதிபர் என்ற கருத்து எல்லோரிடமுமே வளர்ந்து கொண்டு சென்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஆசிரியராக ஆரம்பித்த மகாஜனக் கல்லூரிக்கே முதலாம் தர அதிபராக உயர்த்தப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டார். சோமஸ்கந்தாவை விட்டுப் போக விரும்பாதிருந்த போதிலும் அவர் மகாஜனக் கல்லூரிக்குப் போவதை விரும்பினார். எனவே புத்தூர் மக்கள் அவரின் விருப்பத்திற்கிணங்கி வாழ்த்தி அனுப்பினார்கள். மகாஜனக் கல்லூரியின் முன் னேற்றத்திற்காக இடைவிடாது பாடுபட்டுப் பாடசாலையின் எல்லாத் துறைகளிலும் வெற்றி கண்டார். கனக்ஸ் ஒரு சிறந்த அதிபர் என்ற கருத்து ஆசிரிய மாணவ உலகத்தில் பொதுவாக அடிபட்டபடியே இருக்கும்.

1979ஆம் ஆண்டு இறுதியில் நான் நைஜீரியாவுக்கு ஆசிரியராக ஒப்பந்தம் செய்து கொண்டு சென்றுவிட்டேன். அதிஷ்டவசமாக சொக்கொட்டோ என்ற ஸ்ரேட்டில் பிரபலமான ஒரு கல்லூரியில் விரிவுரையாளராக நியமனம் கிடைத்தது. 1981ஆம் ஆண்டு யூலை மாதம் விடுமுறை காலத்தில் நான் யாழ்ப்பாணம் வந்திருந்தேன். என்னைப் பார்ப்பதற்கெனக் கனகசபாபதி வீட்டுக்கு வந்திருந்தார். அப்பொழுதுதான் அவரும் நைஜீரியாவுக்கு, அதுவும் சொக்கொட்டோவுக்கு ஆசிரியராக வருகின்றார் என்பது தெரிய வந்தது. இதை என்னால் நம்ப முடியவில்லை. தகுதி குறைந்தவர்களுக்குப் பதவியுயர்வுகளும் தகுதி உள்ளவர்களுக்குப் பதவி மறுத்தலும் பல ஆசிரியர்களுக்கிடையே தொழில் திருப்திக் குறைவை ஏற்படுத்தி வேலையிலிருந்து விலக உந்தித்தது. பணக் கஷ்டமும் இன்னுமோர் காரணம். ஆனால், கனகசபாபதிக்கு இவ்விரண்டும் இல்லை. அவர் தகுதிக்கேற்ற வெகுமதி இளம் வயதிலேயே கிடைத்தது. அவரின் கற்பிக்கும் ஆற்றல் எந்நேரமும் அவருக்குப் போதிய பணத்தைக் கொடுக்கக் கூடியது. எனவே அவர் எதற்காகத் தனது பதவியை எறிந்துவிட்டு சொக்கட்டோவுக்குப் போக வேண்டும் என்று மிகவும் கரிசனையோடு வினவினேன். நைஜீரியாவின், முக்கியமாகச் சொக்கொட்டோவின் பாடசாலைகளின் நிலை, பிள்ளைகளின் படிப்பதற் குள்ள மனப்பாங்கு, தண்ணீர், மின்சாரம் போன்ற அத்தியாவசிய வசதிகளின் தட்டுப்பாடு போன்ற வையுமே எனது வினாவுக்குக் காரணமாக இருந்தன.

அவரின் பதிலின்படி தொழில்துறையில் சில அதிருப்தி அம்சங்கள் இருந்திருப்பதாகத் தெரிந்த போதிலும் தனது இரண்டு வயது மகளின் சத்திர சிகிச்சையே முக்கியமாக வெளிநாட்டுக்குப் போவதற்குக் காரணம் என்பது தெளிவானது. மனைவி மக்களை ஆயத்தம் செய்யச் சொல்லி விட்டுத் தான் தனியாகவே சொக்கொட்டோ வந்தார். இவருடன் வேறும் பலர் வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்த பின்புதான் ஒவ்வொருவரையும் எந்த எந்தப் பாடசாலைக்கு அனுப்புவதென்று முடிவு செய்வார்கள். சொக்கொட்டோ ஸ்ரேட் இலங்கையின் முக்காற் பங்கு பரப்பளவுக்கும் அதிகமானதெனக் கூறலாம். பாடசாலைகள் எங்கும் பரவலாக உண்டு. புதிதாக வந்தவர்கள் எந்தப் பாடசாலைக்கும் அனுப்பப்படலாம். கனக்ஸ் சொக்கொட்டோவுக்கு வந்தது எனது முதலாவது அதிஷ்டம். மேலும், எனது கல்லூரியில் இருந்து 12 கி. மீ. தூரத்திலுள்ள பாடசாலை யொன்றிற்கு அவர் நியமனம் பெற்றது என் இரண்டாவது அதிஷ்டமாகும். அவருக்குரிய வதி விடத்தை அழகு படுத்துவதில் கல்வி இலாகா தாமதம் காட்டியது. நெய்குடம் உடைந்தது நரிக்கு வேட்டை என்பதற் கிணங்க தனது வீடு அழகுபடுத்தப்படும் வரை கனக்ஸ் என்னுடன் தங்குவதாகச் சம்மதித்துவிட்டார். தனியாக இருந்த எனக்கு இது பெரிய வரப் பிரசாதமாய் இருந்தது.

எனது வீட்டிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு மாலை 3.30 அல்லது 4 மணியளவில் வீடு வந்து சேருவார். தனது புதிய அனுபவங்களை என்னுடன் பரிமாறிக் கொள்ளுவார். ஆரம்பத்தில் அவர் மனத்தில் ஒருவித மனச் சோர்வு தெரிந்தது. அந்நியரினால் பல காலம் சுரண்டப்பட்டதாலும், உள்நாட்டவரின் நேர்மை யற்ற லஞ்ச ஊழல்களாலும் நாட்டின் அபிவிருத்தி, முக்கியமாகக் கல்வித்துறை மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது. நைஜீரிய அரசாங்கம் கல்வி விருத்திக்குப் பெரும் பணம் செலவு செய்வதில் ஆர்வம் காட்டியது. ஆனால், அதைப் பயன் அளிக்கக்கூடிய வகையில் நிர்வகிக்கத் தவறி விட்டார்கள். ஆனால், கனக்ஸ் எங்கிருந்தாலென்ன தனது கடமையே முதலாகக் கொள்பவர். தனது முழுத் திறைமையையும் பாடசாலைப் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்த முயன்றார். ஒரு சர்வகலாசாலை விரிவுரையாளராகக் கடமையாற்ற வல்ல அறிவையுடையவர் தனது பிள்ளைகளுக்கு ஆரம்ப விஞ்ஞானமும் எண்கணிதமும் மிகவும் ஆர்வத்தோடு கற்பிப்பதைப் பார்க்கும் பொழுது அவரின் கடமை யுணர்ச்சியையும் கற்பித்தலில் இருக்கும் அளவில்லாப் பிரியத்தையும் எடுத்துக் காட்டியது. பெரிய கட்டிடங்கள், தளபாடங்கள், பெரும் தொகையான பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இவையெல்லாம் இருந்தும் பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய சூழலோ அல்லது ஒரு தகுந்த கல்வி முறையோ இல்லாதது அவருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது மிகவும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால், கற்பித்தலில் அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்வடையவில்லை. பாடசாலையின் முன்னேற்றத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். அதிஷ்டவசமாக நல்ல அதிபர் பாடசாலைக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் கனகசபாபதியின் நிர்வாக ஆற்றலையும் கண்டறிந்து விட்டார். விவசாயப் பாட நெறிக்குப் பொறுப்பாக இருந்த கனக்ஸ் வேறுபல நிர்வாகப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டார். பாடசாலையில் கனக்ஸின் முக்கியத்துவம் நாளாந்தம் வளர்ந்து கொண்டு சென்றது. அதிபருக்குக் கனகசபாபதியின் மேல் உள்ள நம்பிக்கையும் வளரத் தொடங்கியது. பாடசாலை நிர்வாகப் பொறுப்பையே அவரிடம் கொடுத்து விட்டு நம் நாட்டு அதிபர்களைப் போல் கல்வி இலாகாவுக்கும் வேறு வேலைகளாகவும் போய் விடுவார். அங்கும் கனகசபாபதி அதிபராகவே கடமையாற்றினார்.

அவருக்குரிய வதியிடம் இன்னமும் ஆயத்தமாக வில்லை. ஆனால் கனகசபாபதியின் மனைவியும் இரு பெண் குழந்தைகளும் சொக்கொட்டோவுக்கு வருவதற் குரிய ஒழுங்குகள் முற்றாகிவிட்டன. சில நாட்களுக் குள்ளேயே அவர்களும் எனது வீட்டுக்கே வந்து சேர்ந்து விட்டார்கள். எல்லோரையும் எனது வீட்டில் உபசரிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எனது வீட்டில் எவ்வளவு காலமும் தங்கலாம் என்று எனது விருப்பத்தைத் தெளிவாகக் கூறிவிட்டேன். கனகசபாபதியின் பாரியாரும் ஒரு விஞ்ஞான பட்டதாரி என்றபடியால் நாங்கள் பல விடயங்கள், பொதுவாகக் கல்வி, கற்பித்தல் போன்றவை கூடக் கலந்து பேசக்கூடியதாக இருந்தது. அவரின் பாரியார் சமயற் கலையிலும் மிகவும் கைதேர்ந்தவராகத் தெரிந்தது.

கனகசபாபதி எந்த விடயம் பற்றியும் மிகவும் ஆழமாகவும் அழகாகவும் கலந்துரையாடக் கூடியவர். கல்வி முதற்கொண்டு சமயம், சங்கீதம், அரசியல், விளையாட்டு ஆகிய எல்லாத்துறைகளிலும் ஆழ்ந்த அறிவுடையவர் மட்டுமல்லாமல் அவற்றைத் தகுந்த இடத்திலும் நேரத்திலும் நுண்ணிய நகைச் சுவையோடு எடுத்துரைப்பதிலும் திறமையுடையவர். இந்த அதிஷ்டமான சூழ்நிலை எனக்குக் கனகாலம் நீடிக்கவில்லை. அவரின் வீட்டுவேலைகள் முடிவடைந்ததும் அவர்கள் தங்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். இருந்தும் நான் அவர்களை அடிக்கடி சந்திக்கத் தவறுவதில்லை.

அவரின் பாரியாரும் அதே பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்றார். இருவரும் பாடசாலையின் முன்னேற்றத்தில் பெருமளவு அக்கறை காட்டி வந்தார்கள். பலவித வசதிக்குறைவின் மத்தியிலும் ஒரு நல்ல விஞ்ஞான ஆய்வுக்கூடம் அமைத்து அதில் அவர் பெரும் திருப்தி கண்டார். பெரும் நீர்த் தட்டுப்பாட்டு மத்தியிலும் அவர் வீட்டில் பல வகையான பூச்செடிகளை வளர்ப்பதில் அவர்கள் காணும் திருப்தி அளவற்றது. ஒவ்வொரு செடிக்கும் ஒரு சரித்திரம் இருப்பதுபோல் விளக்கம் கூறுவார். அது பெற்ற இடம், பெற்ற முறை அதன் உயிரியற் பெயர், முக்கியத்துவம் போன்ற பல குறிப்புக்களை மிக அக்கறையுடன் விளக்குவார். வீட்டில் உபயோகிக்கும் ஒவ்வொரு துளி நீரும் ஏதாவதொரு செடிக்குப் பயன் படாமல் விரையமாகமாட்டாது.

இவர், பாடசாலையில் விவசாயக் கல்விக்குப் பொறுப்பாக இருந்து, அதில் காட்டிய அக்கறையும் பிள்ளைகள் அடைந்த முன்னேற்றமும் கல்வி இலாகா ஆலோசகர்களின் கவனத்தைக் கவராதிருக்கவில்லை. கனகசபாபதி விவாசாயப் பரிசோதகராகப் பதவியுயர்த்தப்பட்டு சொக்கொட்டோ ரவுணுக்கு அதிக வசதிகள் கொண்ட மிகப் பெரிய வீடொன்றுக்கு மாற்றப்பட்டார். தொழில் விடயமும் கல்வி இலாகாக் கந்தோருக்கு மாறியது. பாரியாரும் வீட்டுக்கு அண்மையிலுள்ள பாடசாலைக்கு இடமாற்றப்பட்டார். இம்மாற்றம் நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் வசதியை மேலும் மேலும் கூட்டியது.

கனகசபாபதியின் திறமையை முற்றாகப் பயன் படுத்த விரும்பிய கல்வி இலாகா சொக்கொட்டோ பாடசாலைகளுக்கென ஒரு புதிய விவசாய பாடத் திட்டத்தைத் தயாரிக்கும் படி பணித்தது. இரவு பகலாக அதில் ஈடுபட்டு அப்பாடத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்து முடித்தார். இத்திட்டம் விவசாயக் கல்விக்குப் பெரும் பயனை அளித்ததுமல்லாமல் கனகசபாபதியின் சேவைக்கும் சொக்கொட்டோவில் ஒரு நிரந்த இடம் கிடைத்தது.

கனகசபாபதி தம்பதிகளின் விருந்தோம்பல் இயல்பினைக் கூறாமல் இருக்க முடியாது. மிகவும் தூரங்களிலிருந்து ரவுணுக்குக் குடும்பங்களாக வந்து தங்கித் தங்கள் இலாகா அலுவல்களைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பல ஆசிரியர்களுக்குண்டு. கனக்ஸ் வீடு நெருக்கடியாக இருந்தாலும் சொக்கொட்டோவுக்கு வரும் ஒவ்வொருவரும் அவர்களுடன் தான் தங்க வேண்டும் என்று விரும்புபவர்கள். எனவே அவர் வீட்டில் எப்பொழுதும் பெரும் கூட்டமாகவே இருக்கும். தங்குமிடம் தேடி வந்தோரை விருந்தினராக மதித்து மகிழ்ச்சியுடன் உபசரித்து அனுப்பும் சிறந்த இயல்பு இருவரிடமும் தாராளமாக இருந்தது.

எதற்கும் ஒரு முடிவு இருப்பதுபோல் எங்கள் நைஜீரியா வாழ்க்கையும் முடிவடையும் காலம் வெகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் இருக்கவில்லை. அந்நாட்டில் பொருளாதார நிலை சுருங்கிக் கொண்டு போக ஆரம்பித்து. நான் எனது ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்புவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தேன். பொதுவாக மற்றையவர்கள் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். 1986ஆம் ஆண்டு பிற்பகுதியில் நான் இங்கிலாந்து வந்தேன். அடுத்த வருட முடிவில் கனகசபாபதி குடும்பத்தினரும் வேறு பலரும் கனடா சென்றார்கள். பல மைல்களுக்கப்பால் பிரிக்கப்பட்டு நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் வசதி முற்றாக அற்றுப் போனது. இருந்தும் கடிதம்மூலம் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளோம். நான் எனது நாட்டுக்குப் போகக் கூடிய சூழ்நிலை இருக்காதபடியால் குடும்பமாக லண்டனில் தங்குவதாகத் தீர்மானித்துக் கொண்டேன்.

புதிய நாடு, புதிய சூழ்நிலை, ஆரம்பத்தில் பல சிக்கல்கள், இவையெல்லாம் சகசம்தானே. ஆனால், கனக்ஸ் எங்கிருந்தாலுமென்ன - அவரின் திறமையும் ஆற்றலும் எங்கும் எப்பொழுதும் பலருக்கும் தனக்கும் பயனளிப்பனவாக வாழ்வார் என்பது எனது நம்பிக்கை. ஆனால் சில நாட்களுக்குள்ளேயே அவர் எங்களுக்கு எழுதிய கடிதத்தில் தனது பாரியார் சுகயீனமுற்றுள்ளார் என்றும் அது கவலைக்குரியதாயிருக்கின்றது என்றும் குறிப்பிட்டது எங்களை மிகவும் கவலைக் குள்ளாக்கியது. வெகு சீக்கிரத்தில் எவரும் எதிர்பாராத வகையில் அவர் இறக்க நேரிட்டது. இந்த இழப்பை எப்படித்தான் கனக்சும் பிள்ளைகளும் தாங்கப் போகின்றார்களென ஏங்கினோம். கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் மட்டுமே எங்களால் தொடர்பு கொண்டு ஆறுதல் கூற முடிந்தது. அவருக்கருகில் இருந்த நண்பர்கள் பலர் அவருக்கும் பிள்ளைகளுக்கும் பெரும் ஆறுதலாக இருந்தார்கள். இந் நேரத்தில் அவர் காட்டிய மன உறுதியும் தற்காப்புத் திறனும் அவரின் மனோபக்குவத்தை எடுத்துக் காட்டியது. அவர் ஒவ்வொரு சிறிய உதவிக்கும் தனது மனைவியில் தங்கியிருந்தவர். அவரின் இழப்பால் என்ன செய்வாரோ என்று பயந்த எங்களுக்கு அவர் தன்னையும் தனது பிள்ளைகளையும் சிறந்த முறையில் வழிநடத்திப் பெருமளவு திருப்தி கண்டு வருகின்றார்.

மனைவியின் இழப்பால் அவருக்கு ஏற்பட்ட பல தடங்கல்கள் இப்பொழுது அவற்றிற்கெல்லாம் ஈடு செய்யும் வகையில் நடந்து கொண்டு வருவதைப் பார்க்க மிகவும் திருப்தியைக் கொடுக்கின்றது.

கனக்ஸ் ஆழ்ந்த சமயப்பற்றும் தமிழ்மொழிப் பற்றும் உடையவர். தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் தமிழரின் உயர்ந்த கலாச்சார வளர்ச்சிக்குக் காரணமானவை என்பதில் அவருக்குப் பூரண நம்பிக்கையுண்டு. தமிழருக்கு எப்பொழுதும் சிறந்த சிந்தனைக்குரிய குறிக்கோள்களை அளிக்கக்கூடிய உரிமையும் தமிழ்மொழியும் அவர்களுக்கு மறுக்கப்படும் ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருவதை அவர் உணர்ந்து கவலைப்படுவார். இந்நிலையைப் பெருமளவிற்கு நிவர்த்தி செய்யும் வகையில் அவர் முயன்று வருவது எல்லோரும் அறிந்ததே.

கனடாவில் தான் வாழும் பகுதியில் அதன் கல்வி முன்னேற்றத்தில் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றார் என்பது அவர் எனக்கெழுதும் கடிதங்களிலிருந்தும் பத்திரிகைகளுக்கு எழுதும் கட்டுரைகளிலிருந்தும் அறியக் கூடியதாயிருக்கின்றது. தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் படிப்பதற்குரிய ஒரு தகுந்த பாடத்திட்டத்தை உருவாக்கிக் கொடுப்பதில் முக்கிய பங்கெடுத்ததாக அறிவேன். மேலும் அவர் கனடா சென்ற காலம் தொடக்கம் பல்கலாச்சார சேவையில் ஈடுபட்டுள்ளார். இப்பொழுது அவர் பல்கலாச்சார ஆலோசகராக நியமிக்கப்பட்டு எமது பிள்ளைகளின் கல்வி, கலாச்சார விருத்திக்கு மேலும் மேலும் உதவக்கூடியவராக இருப்பது பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

அவர் பல்லாண்டு வாழ்ந்து கல்வி கலாச்சாரத்துறைகளிலும் சமூகத்துறையிலும் பல பணிகளைச் செய்வதுடன் தனது சிறந்த பிள்ளைகளின் முன்னேற்றங்களையும் கண்டுகளிப்பாரென்பதில் எனக்கு எந்தவித ஐயமுமில்லை.


**'கனக்ஸ் எங்கிருந்தாலுமென்? சென்றவிட மெல்லாம் சிறப்புத்தானே!'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலங் கருதா நண்பன்

எனக்கும் திரு. பொ. கனகசபாபதிக்கும் ஏறக் குறைய ஒரே வயது. இருவரும் யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு கல்லூரிகளில் கல்வி கற்றதனால் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பு அக்காலத்தில் ஏற்பட வில்லை. இருவருமே சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள் என்பது எங்களுக்குள் உள்ள ஒற்றுமை. ஆனால் அவர் அக்கல்லூரியிலிருந்து வெளியேறிய தருணத்தில் நான் நுழைந்தேன். தன் பட்டமளிப்பு விழாவிற்கு அங்கு அவர் வந்த சமயத்தில் அவரை நான் முதன் முதலில் சந்தித்தேன். அவரின் கம்பீரமான தோற்றம், முகமலர்ச்சி, பணிவான பேச்சு என்னைப் பெரிதும் கவர்ந்தன. பேசிக் கொண்டே இருக்கலாம் என்ற உணர்வே ஏற்பட்டது. விலங்கியல் சிறப்புப் பட்டதாரியான அவர் இறுதிப் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்று பல்கலைக் கழகத்தில் அவ் வருடத்திற்குரிய தங்கப்பதக்கத்தைப் பெற்றதனால் எல்லோருடைய கவனமும் அவர் பால் ஈர்க்கப்பட்டிருந்ததில் வியப்பில்லை.



**அ. பூரணச்சந்திரன்**

மகாஜனக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்களுக்கு விலங்கியல் ஆசிரியராக முதலில் கடமையாற்றித் தனக்கும் கல்லூரிக்கும் பெரும் புகழ் ஈட்டினார். இவருடைய காலத்திலே மகாஜனா யாழ்ப்பாணத்திலுள்ள முதலாந்தரக் கல்லூரிகளில் ஒன்றாக மிளிரத் தொடங்கியது என்று சொன்னால் மிகையாகாது. விலங்கியலில் ஒரு வல்லுநர் என்ற பெயர் பெற்றிருந்ததனால் இவரின் சேவையைப் பெறவேண்டு மென்று யாழ்ப்பாண மாணவர் அனைவரும் விரும்பினர். யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இவர் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தினார்; புகழ் பெற்றார்; 'கனெக்ஸ்' என்ற செல்லப் பெயரில் பிரசித்தமானார்.

திரு. கனகசபாபதியும் நானும் சமகாலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறியை 1971ஆம் ஆண்டில் மேற்கொண்டோம். இங்கு ஒரு வருட காலம் ஒரே வதி விடத்தில் இருந்து ஒன்றாக வகுப்புக்களுக்குச் சென்று கல்வி கற்று வந்ததனால் அவருடன் நன்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் எப்போதும் உற்சாகமாகவும் எல்லாருடனும் கபடமில்லாமல் கலகலப்பாகவும் பேசும் ஆற்றல் கொண்டிருப்பதையும் என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தனது சொந்த விஷயங்களைக்கூட ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாகப் பேசுவார். பேச்சில் எப்போதும் நகைச்சுவை தொனிக்கும். இக் காலத்தில் அவர் அதிபர் தரம் 11 பதவி உயர்வு பெற்றிருந்தும் எல்லோருடனும் இயல்பாகவும் அன்பாகவும் பணிவாகவும் பேசும் பண்பினையே கொண்டிருந்தார். பயிற்சியிலும் மிக ஈடுபாடுள்ளவராகக் காணப்பட்டார். ஓய்வு நேரங்களில் நூல் நிலையத்தில் கல்வியுடன் தொடர்பான சகல நூல்களையும் வாசித்திருப்பார். அவருக்கு ஞாபக சக்தி மிக அதிகம். மாலை வேளை கலந்துரையாடல்களில் பல்வேறு கருத்துக்களைச் சான்றுகளுடன் அலசி ஆராய்வார். தெரிந்த விடயங்களைச் சமகாலத்தில் படிப்பவர்கட்கு வெளிப்படுத்துவதற்குப் பலர் விரும்புவ தில்லை. ஆனால் இவர் அதற்கு நேர்மாறாக இருந்தார். கற்பித்தல் உபகரணங்கள் பலரும் சாட்டுக்கு ஒன்று இரண்டே சமர்ப்பிப்பது வழக்கம். ஆனால் திரு. கனகசபாபதி சுமக்க முடியாதளவு பொதி உபகரணங்ளை எடுத்து வந்து சமர்ப்பித்தார். இது அவர் எவ்வேலையையும் திருத்தமாகவம் மிக அக்கறையுடனும் செய்வார் என்பதை எடுத்துக் காட்டி நிற்கின்றது. ஒரு பொறுப்பு அவரிடம் ஒப்புவித்தால் மெய் வருத்தம் பாரார்; கண் துஞ்சார்; கருமமே கண்ணாக இருந்து நிறைவேற்றுவார். இது அவரின் தனித்துவ இயல்பு.

கல்வி டிப்புளோமா பயிற்சி முடிந்ததும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு அதிபராக அவர் நியமிக்கப் பட்டார். அங்கு அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் காலை 6 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டால் மாலை 6 மணிக்குப் பின்னர் வீடு திரும்புவார். கல்லூரி முன்னேற்றத்திற்கு முழு நேரமும் உழைத்தார். சீரற்ற நிலையிலிருந்த அக்கல்லூரி சகல துறைகளிலும் மிளிரத் தொடங்கியது. க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் நன்கு அமைக்கப்பட்டன. மாணவர் எண்ணிக்கை அதிகரித்தது மட்டுமல்லாமல் உயர்ந்த பெறுபேறுகளையும் பெற்றது. மாவட்டத்தில் நடாத்தப்படும் போட்டிகளிலும் எல்லாப் பிரவுகளுக்கும் மாணவர்களை அனுப்பி பங்கு கொள்ள வைப்பதில் அவர் அக்கறையாக இருந்தார். இதன் காரணமாக இவருடைய காலத்தில் அக்கல்லூரி கல்வி தவிர்ந்த துறைகளிலும் பிரகாசிக்கத் தொடங்கியது. ஒரு முறை நான் அக்கல்லூரிக்குச் சென்றபோது பல்வேறு வரைபுகளாலும், வரை படங்களாலும் அலங்கரிக்கப்பட்ட அவர் அலுவலகத்தை அவதானித்தேன். சகல துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களை அவை வெளிப்படுத்தின. கற்றவற்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தும் ஆற்றலும், துணிவும் அவருக்கிருந்ததை அவை எடுத்துக் காட்டின.

இவர் சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு ஆற்றிய தொண்டை நேரில் கண்ட, கேள்வியுற்ற யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகளும், அமைச்சு அதிகாரிகளும் அவர் முன்னர் மகாஜனக் கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளையும் மனதிற்கொண்டு அக்கல்லூரிக்குப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்தார்கள். சோமஸ்கந்தாக் கல்லூரிக்கும், புத்தூர் மக்களுக்கும் இது பெரும் இழப்பை ஏற்படுத்தினாலும் திரு. கனகசபாபதி அவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும், மகாஜனக் கல்லூரிக்கும் பெருவாய்ப்பினை அளித்தது.

திரு. கனகசாபதியின் தனியியல்பு எதுவெனில் அதிபராக இருந்த இரு கல்லூரிகளிலும் தனது கற்பித்தல் தொழிலைக் கைவிடாததுதான். விலங்கியல் பாடத்தை க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஏனைய ஆசிரியர்களுக்கும் அதிபர்கட்கும் அவர் முன்மாதியாக விளங்கினார். இவ்வரிசையில் யாழ் குடாநாட்டில் சென்ற 50 வருடங்களில் திரு. கனகசபாபதி யாழ் இந்து முன்னைநாள் அதிபர், வி. எம். ஆசைப்பிள்ளை, கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் போன்ற ஒரு சிலர் தவிர்ந்த ஏனைய அதிபர்கள் கற்பித்தலில் அக்கறை கொள்ள வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக அதிபர்கள் கல்லூரி நிர்வாகக் கடமைகளாற்றுவதுடன் நின்றுவிடுவது வழக்கம். மகாஜனக் கல்லூரி நிரந்தரமான தலைமைத்துவம் இல்லாமல் சற்றுத் தழும்பிய நிலையில் இருந்த காலத்திலேயே திரு. கனகசபாபதி அதன் அதிபராகப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் நிலவிய அரசியல் நிலைமைகள் கல்விச் சமூகத்திலும் ஊடுருவி இருந்தன. இந்தக் கஷ்டமான காலத்தில் காலடி வைத்த திரு. கனகசபாபதி தனது விடா முயற்சியினாலும், ஆளுமையாலும் கல்லூரியின் சரிவுக்கு மிண்டு கொடுத்து ஓரளவு நிமிர்த்தி ஒழுங்கான முறையில் இயங்கச் செய்தது அவரின் நிர்வாகத் திறமைக்கு எடுத்துக் காட்டாகும். இக் காலத்தில் கல்லூரி மீண்டும் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் கண்டது. இக்காலத்தில் கல்லூரியின் சிற்பி எனக் கருதப்படும் ரி. ரி. ஜெயரட்னம் ஞாபகமாகக் கட்டிடம் அமைத்து அவரைக் கௌரவித்தார்.

பெயருடனும் புகழுடனும் இருந்த திரு. கனகசபாபதி எதிர்பாராமல் ஏற்பட்ட சொந்தக் காரணங்களினால் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்காட்பட்டார். இவர் நைஜீரியாவில் சொக்கட்டோ மாநிலத்தில் தொழில் செய்யும காலத்தில் நானும் அங்கிருந்ததனால் அவருடன் இன்னமும் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு ஆரம்பத்தில் அவர் ஒரு சாதாரண ஆசிரியராக, அதுவும் தனக்குரிய விலங்கியல் உயிரியல் பாடமல்லாது விவசாய பாடம் போதிப்பதற்கு நியமிக்கப்பட்டார். எனினும் முன்பிருந்த அதே பணிவையும், கொடுக்கப்பட்ட வேலையில் எடுக்கும் ஊக்கத்தையம், ஈடுபாட்டையும் இங்கும் அவர் புலப்படுதினார். ஆசிரியர் வேலையுடன் மட்டும் நின்றுவிடாது கல்லூரியின் பரந்த பிரதேசத்தில் நிழல் மரங்கள் நாட்டும் பணியினையும் அவர் மேற்கொண்டார். கல்லூரி தொடங்கிய நாட்களில் ஆரம்பித்து விடுமுறை காலத்தில் மாணவர் இல்லாத நிலையில் தானே நாளாந்தம் நீர் ஊற்றி வளர்த்ததை நான் நேரில் கண்டேன். இது மட்டுமல்லாமல் பல்லின வகையின் பூச்செடிகள் கொண்ட பூந்தோட்டத்தை வீட்டில் நிர்மாணித்தார். குடிப்பதற்கும், குளிப்பதற்கும் நீர் இல்லாத இடத்தில் கழிவு நீரைப் பாய்ச்சி இப்பூந்தோட்டத்தில் பயிர்களையும், காய்கறிச் செடிகளையும், சட்டிகளிலும் பேணிகளிலும் வளர்த்து வந்தார் என்றால் அவரின் ஆர்வத்தை யாராலும் அளவிடமுடியாது. அவருடைய ஆர்வம், ஈடுபாடு, பணிவு ஆகியவற்றைப் பாடசாலைக்கு வருகை தந்த கல்வி அதிகாரிகள் தற்செயலாக அவதானித்து அவர்களின் பரிந்துரையின்படி விவசாயக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்த்தப்பட்டார். பதவி உயர்வு பெறும் நோக்கமாகவே அவர் இவ்விடயங்களில் ஈடுபட வில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இவை எல்லாவற்றையும்விட விருந்தோம்பல் என்றால் அவருக்கு நிகராக எவரையும் ஒப்பிட முடியாது. இவ்விடயத்தில் இவருக்கு வாய்த்த அருமை மனைவியும் இவருக்கு சளைத்தவரல்லர். இருவரும் சேர்ந்து வரவேற்பார்கள்; விருந்து வைப்பார்கள்; மீண்டும் மீண்டும் வந்து போகலாம் என்று சொல்வது மட்டுமல்லாமல் மனத்தாலும், செய்கையினாலும், மீண்டும் வரலாம், வர வேண்டுமென்ற நிலையைத் தோற்றுவிப்பார்கள். சொக்கட்டோவில் அவருடைய இல்லம் ‘அன்னை சத்திரம்’ என்று சொல்லுமளவிற்குப் பிரசித்தி பெற்றிருந்தது. விருந்தினரை வரவேற்பதில் முகமலர்ச்சியும் விருந்தினர் நேரத்திற்கு வராவிட்டால் பல மணித்தியாலங்கள் என்றாலும் தாங்களும் சாப்பிடாமல் காத்திருத்தலும் அவர்களின் இயற்கையான பண்பு. வீட்டு வாசலில் வைத்து வழியனுப்பாமல் படலைவரை சென்று, அதற்கப்பாலும் சென்று வாழ்த்தி வழியனுப்பும் பண்பு அவரின் சிறப்பு.

நிறைவுகளை மட்டும் எழுதி அவரது குறைபாடுகளையும் குறிப்பிடாமல் இருப்பது நன்றல்ல. சுருக்கமாகச் சொன்னால் எதிலும் தேவைக்கதிகமான கடின உழைப்பு மேற்கொள்ளல் அவருக்குரிய குறைபாடு என்று நான் கருதுகிறேன். தொழிலில் மிகையான ஈடுபாடு காரணமாக குடும்பத்தில் சில கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலைமைகள் ஏற்பட்டன. விருந்தோம்பல் காரணமாக அதிக பணவிரயம் உண்டாகியதையும் குறிப்பிடலாம்.


திரு. கனகசாபதி தற்போது புதிய துறையில் ஈடுபட்டிருப்பதாக அறிகின்றேன். அவர் எந்தத் துறையிலும், தனது விடா முயற்சியாலும் ஆர்வத்தினாலும் தனது ஆற்றலை வெளிப்படுத்திப் பலரும் பயன்படும் முறையில் அதை மாற்றியமைப்பார் என்பது திண்ணம். அவரின் சேவை மேலும் பல்லாண்டு பெறக்கூடியதாக அவர் நீண்ட ஆயுளைப் பெறவேண்டுமென்று இறைவனை வேண்டி இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதா விலாசத்திற்கு நண்பன் கனகசபாபதி ஓர் எடுத்துக்காட்டு

சிந்தனா சக்தி படைத்த ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் உயர்ந்து நிற்கிறான். மெய்யியலாளர் சாக்கிறட்டீஸ்சின் தத்துவப்படி எவன் உண்மைக்காக உழைக்கின்றானோ அல்லது எவன் உண்மையைக் கண்டு கொள்ள முயலகின்றானோ அவனே ஆத்ம ஞானம் பொருந்திய மானிடனாக மனிதர்களில் வகைப்படுத்தப்படுகின்றான். இத் தத்துவார்த்த எல்லையை மெய்ப்பித்துக் காட்டிய பெருமை நண்பன் பொ. கனகசபாபதி அவர்களைச் சாரும். இதனால் நண்பனின் மேதாவிலாச எண்ண அலைகளை வெளிக் கொணர வைப்பதில் நான் பெருமை அடைகின்றேன்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஊர் சண்டிலிப்பாய். வயல்கள் நடுவே வாய்க்கால் வழியே ஓடும் நீர்; கரையோரமாக அமைந்திருக்கும் புகழ் மிகு பிள்ளையார் கோவில்; கிராமத்தின் மத்தியில் உள்ள பழமை வாய்ந்த ஆலமரம், மக்கள் அனைவரையும் குடைக் கீழ் குளிர்ச்சியாக வைத்திருக்கும் குறிச்சி ஆலங்குழாய். அதே வீதியில், எதிரெதிரே வாழ்ந்த குடும்பங்களில் ஒரே பெயர் வழி ''பொன்னு''. மயிலு பொன்னுவின் மகன் நான். தம்பு பொன்னுவின் மகன் நண்பன் கனகசபாபதி.



**செல்லையா சந்திரசேகரி**

இருவரும் பிறந்தது ஆலங்குழாய் மண்ணில்; ஒரு வருட வித்தியாசம். சென்ற வருடம் எனது மணிவிழாவில் நண்பன் கனகசபாபதி கலந்து கொண்டார். இவ்வருடம் அவரது மணிவிழாக் கோலம் நான் கண்டு மகிழ்வதில் பெருமையடைகின்றேன். அறுபது ஆண்டுகள் முடிந்தன. நான் அவரோடு அறுபது ஆண்டுகளில் இணைந்து ஆற்றிய செயல், சேர்ந்து பகிர்ந்த சம்பவங்கள் அத்தனையும் மணி மணிகளாக எடுத்துக் காட்ட முடியுமா? இல்லை. அவற்றுள் சில பகுதிகளை மட்டுமே நான் எடுத்து விளக்குகின்றேன்.

இருவரும் தவழ்ந்தது ஒரே மண்ணில். ஓடி, ஆடி, விளையாடி நீந்தியது ஒரே குறிச்சியில். ஆரம்பக் கல்வி, உயர் கல்வி, பல்கலைக்கழகப் படிப்பு பயின்றதும் ஒரே கல்வி நிலையங்கள். சிறிது காலம் இருவரும் விலங்கியல் ஆசிரியர்களாகத் தொழில் பார்த்ததும் மகாஜனக் கல்லூரியில். ஏன்? நைஜீரியாவிலும் இருவரும் உயிரியல் ஆசிரியர்களாக ஒரே மாவட்டத்தில் தொழில் புரிந்தோம். அது மட்டுமல்ல, இப்போது கனடாவிலும் ஒரே மாகாணத்தில் இருவரும் வாழ்ந்து வருகின்றோம். இவையெல்லாம் இருவரும் அறுபது ஆண்டுகள் அன்பின் இருப்பிடமாக, பண்பின் பிறப்பிடமாக வாழ்வில் இணை பிரியா சகோதரர் போல பிணைந்திருக்கின்றோம் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

நினைவில் வரும் சில நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுவது இவ்விடத்தில் பொருத்தமாகத் தென்படுகிறது. 1940ல் நடந்த ஒரு சம்பவம் அது. அப்போது நாம் துள்ளித் திரிந்த குழந்தைப் பருவம். இருவரும் விளையாட்டு வேகத்தில் மோதுவதுண்டு. நான் ஒரு நாள் அடித்துவிட்டேன். அப்போது நண்பன் அழுத வண்ணம் தனது தாயாரிடம் முறையிட, அவரது தாயார் எனது தாயாரிடம் முறையிட, எனது தாயார் எனக்குத் தண்டனை வழங்கியது இப்போதும் ஞாபகத்திற்கு வருகின்றது. என்றாலும் என் மீது கருணையும் பாசமும் நண்பருக்குத் தொடர்ந்து இருக்கத்தான் செய்தன. 1951ல் எமது சி. பா. த. (S.S.C.) பெறுபேறுகள் வெளியாயின. நண்பன் கனகசபாபதி முதல் முறையில் தேறிவிட்டார். எனது பெறுபேறுகள் முதல்தடவை சற்றுச் சறுக்கிவிட்டன. எனது துன்ப நிலைமையை உணர்ந்து வீடு வந்து ஆறுதல் கூறி மனத்தைத் தேற்றுவித்த சம்பவம் இத்தனை வருடத்திற்குப் பின்பும் என் நெஞ்சில் நிலைத்திருக்கின்றது. 1961ல் நான் பாணந்துறையில் விலங்கியல் ஆசிரியராகத் தொழில் புரிந்தபோது நண்பன் கனகசபாபதி மகாஜனக் கல்லூரியில் விலங்கியல் ஆசிரியராகத் தொழில் ஆற்றிய வேளை, அவர் எதிர்பாராத வகையில் வாகன விபத்துக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட செய்தி கிட்டியது. மறுநாளே நான் அவர் அருகே நின்ற காட்சி இப்போதும் கண்முன் நிற்கிறது. அடுத்து அவரது திருமண நிச்சயம், திருமண நாள் ஆகியவற்றில் நாமிருவரும் ஒருங்கு சேர்ந்து ஈடுகொண்ட நாட்கள் நினைவில் இருக்கின்றன. அதேபோல பலப் பல சந்தர்ப்பங்களில் நண்பன் வாழ்வில் நான் உறு துணையாக இருந்தேன்.

இளமை நினைவுகள் இன்னும் உள்ளத்தில் பசுமையாக நிற்கின்றன. நண்பன் இளமையில் மிக மிக அமைதியானவர். விளையாட்டுக்களில் ஈடுபாடு குறைந்தவர். ஆனால் புத்தகங்கள், சஞ்சிகைகள் வாசிப்பதில் முன் நிற்பவர். நானோ எதிலும் மிகத் துணிச்சலானவன். முன்னின்று எதனையும் சாதிப்பவன். நண்பன் எந்த வேளையிலும் என்னோடு உறுதுணையாக நிற்பவர். எமது கிராமத்தில் இருவரும் பல சேவைகளில் ஈடுபாடு கொண்டிருந்தோம். இந்து வாலிபர் சங்கம், சனசமூக சேவா சங்கம், விளையாட்டுக் கழகம், கலை கலாச்சார மன்றம் ஆகியவற்றை அமைத்துத் திறம்பட நடத்தி வந்தோம்.

மாணவனாக நண்பனைப் பார்க்கும்போது, அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் திறமை காட்டியவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் திறமைச் சித்தி பெற்று தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டவர். அவர் புகழ் சென்னையிலும் பரவியது. ஆசிரியராக நண்பனைப் பார்க்கும்போது, அவர் தனது பட்டப் படிப்பை முடித்து ஆசிரியர் தொழிலை ஏற்க நாடு திரும்பிய வேளை, பல கல்லூரிகள் அவரை ஏற்க முன்னின்றன. மகாஜனக் கல்லூரி செய்த பாக்கியம் மகாஜனக் கல்லூரியின் சிற்பி ஜெயரத்தினத்தின் உறு துணைவனாக விலங்கியல் பீடத்தின் சிறந்த ஆசிரியராக நண்பன் நியமிக்கப்பட்டார். இளமையில் அமைதியானவர், ஆசிரியராக அமர்ந்த நாட்கள் முதல், துணிச்சல் வீரனாக நல்லாசிரியராக, மகாஜனக் கல்லூரி வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டுழைத்தார்.

நண்பனின் நிர்வாகத் திறமை பற்றி, செயல்திறன் அணுகுமுறை பற்றிச் சற்றுக் குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன். நிர்வாகம் என்பது ஸ்திரமான ஓர் அளவுகோல் கொண்டு நெறிப்படுத்தும் ஓர் அணுகு முறையாகும். இவ்வணுகுமுறை நிர்வாகப் பொறுப்புடைய ஒவ்வொருவருக்கும் பொதுவானதாயினும், இவற்றில் வெற்றி பெறுவோர் மிகச் சிலரென்றே சொல்ல வேண்டும்.

இனம்கண்டு வேறுபடுத்தாமல் எல்லா ஆசிரியர்களையும் ஒரே குடையின் கீழ் இருத்தி, தமது அறிவுத் திறமையால் ஒரு செயல்திட்டத்தை வெற்றியாக்கக்கூடிய ஆளுமை இவரிடம் குடி கொண்டிருந்தது. அப்போது மகாஜனக் கல்லூரியில் சுமார் 1000க்கு மேற்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் கல்வி கற்றனர். ஆசிரியர் தொகை 75 ஆகும். 75 ஆசிரியர்களைத் தமது எண்ணக் கருத்து நிறைவேற அணைத்துக் கொள்வதென்பது சாதாரண விடயமல்ல. ஆசிரியர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டுச் செயல்திட்டங்கள் வெற்றியாக்க வகை செய்தமை, மாணவ மன்றங்களுக்கு உற்சாகம் கொடுத்து வட மாநிலத்திலே தனக்கென்று ஒரு முத்திரையை பதிய வைக்கும் அளவிற்குக் கலைத்துறையில் ஓங்கி நிற்கச் செய்தமை. விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள் போன்றவை காலத்திற்குக் காலம் நெறிப்படுத்தப்பட்டு மகத்தான சாதனைகளைப் படைக்க வழி செய்தமை ஆகியன இவரது ஆளுமைக்குச் சிறந்த உதாரணங்களாகும். இவற்றிக்கு மேலாக கல்வித் துறையில் இதுவரையும் கண்டிராத அளவிற்கு மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவானார்கள். இவரது கால எல்லையில் சுமார் 150 மாணவர்களுக்கு மேல் டாக்டராக, பொறியியலாளராக சுமார் 300 மாணவர்கள், பல் மருத்துவம் சுமார் 80 பேர், கலைத்துறை 200 பேர், விஞ்ஞானத் துறை 345 பேர் தெரிவாகினர்.

அதிபராக நண்பனைப் பார்க்கும்போது, ஏழாலை மகா வித்தியாலயம், சோமஸ்கந்தா கல்லூரி ஆகியவற்றின் வளர்ச்சிகளில் துணிச்சலாக முன்னின்று பல சாதனைகள் ஆற்றியிருக்கின்றார். அப்பகுதி மாணவர், பெற்றோர் அனைவரதும் நன்மதிப்பினைப் பெற்றிருக்கின்றார். மகாஜனக் கல்லூரியின் தளர்ச்சிக் காலம் அதிபர் ஒருவரைத் தெரிய வேண்டிய நிலையேற்பட்டது. தெரிவுக் குழுவில் நானும் இடம் பெற்றிருந்தேன். நான் நண்பன் பெயரை முழு மூச்சுடன் முன் வைத்தேன். எங்கள் இருவரதும் பிணைப்பை நன்கு உணர்ந்த ஒரு நண்பன் என் முன் கேள்வியொன்றினை எழுப்பினார். கல்லூரிக்குக் கனகசபாபதியை அதிபராகக் கொண்டு வரும் பட்சத்தில் நீர் அவரின் கீழ் கடமை புரிய முடியுமா என்பதுதான் அக்கேள்வி. அச்சந்தர்ப்பத்தில், நான் கொடுத்த பதிலை விளக்க இங்கு இடம் போதாது. எங்களுக்கு தகுதியான ஒரு அதிபரைப் பெறுவதுதான் அவசியமாகின்றது. அப்போது குழுவினர் முழுமையாக எனது கருத்தை ஏற்றனர். பின்பு நண்பர் கனகசபாபதி அதிபராக நியமிக்கப்பட்டார். மகாஜனா வளர்ச்சி அனைத்திலும் அவர் முழுமையான பங்கினை வகித்து வந்தார். பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் பணியில் அதிபருடன் நானும் முழுமையாக நின்று உழைத்தேன். அவரது ஆழ்ந்த சிந்தனையாலும் அயராத உழைப்பினாலும் 'ஜெயரத்தினம் மண்டபம்' அவரது கால எல்லையில் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதை ஒருவரும் மறக்க முடியாது.

போட்டிகள், பொறாமைகள் சிறிது தலைதூக்கிய வேளை, நண்பர் இடமாற்றமாக்கப்பட்டார் என்ற செய்தி எட்டியதும், பொங்கி எழுந்த கூட்டத்தில் நானுமொருவர். மறுநாளே நானும் நண்பர் சிலரும் கொழும்பு சென்று பாராளுமன்றத்தில் கல்வி மந்திரியோடு தொடர்பு கொண்டு அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்தோம். மகாஜனக் கல்லூரி மலர்வுற மகானின் பணி தொடர அவ்விடத்தில் வழி கிடைத்தது, மகாஜனா மண் செய்த பாக்கியம் என நான் கருதுகின்றேன்.

நண்பனின் பணி கடல் கடந்த நாடுகளிலும் ஓயவில்லை. கனடா வாழ் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் பணியில் அயராது முயன்று வருவதை நான் உணர்கின்றேன். தமிழும் சைவமும் அந்நிய நாட்டில் வாழும் நமது குழந்தைகளின் உள்ளங்களில் இருந்து அழிந்துவிடா வண்ணம் பல பணிகளையும் ஆக்கங்களையும் செய்து வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற முதுமொழிக்கேற்ப கற்றவர்களும், புத்திஜீவிகளும் நண்பனின் ஆற்றலையும் ஆளுமையையும் எப்போதும் வரவேற்று நிற்பர்.

மணிவிழாக் கொண்டாடும் நண்பன் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் அறிஞர் மத்தியில் ஒரு மேதா விலாசமாக அல்லது ஓர் எடுத்துக் காட்டாக ஓங்கி நிற்பது அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஒரு பெருமை தரும் விடயமாகும். நண்பனின் இனிய குடும்பம் என்றும் மேலோங்கி நிற்க மணிவிழாக் கொண்டாடும் இவ் வேளையில் நானும் எனது குடும்பத்தாரும் எமது மன நிறைவான ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தேமதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சந்திப்பு

## - சிவ. பஞ்சலிங்கம் -

யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கடந்த நூற்றாண்டு தொடக்கம் இன்றுவரை தீபமேற்றி வைத்த 'தியாகச் சுடர்கள்' பலர் இருந்தும் ஒருசிலர் மட்டுமே இன்றும் வரலாற்றில் இடம்பெற்று மக்கள் மனத்தில் வாழ்ந்து கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான கல்லூரிகளின் சரித்திரங்களில் பல ஆசிரியர்கள், அதிபர்கள் பதவிகளை வகித்துத் தங்கள் கடமைகளை ஆற்றியபோதிலும் ஒரு சில ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமே இன்றும் அக் கல்லூரிகளின் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளனர்.

இத்தகைய ஆசிரியர்கள், அதிபர்கள் சம்பளத்திற்காகத் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொண்டிராமல் தங்கள் பதவியினூடாக, ஒரு உயர்ந்த பண்பட்ட மாணவ சமூகத்தினை உருவாக்க வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர்கள், வெற்றிகளைக் கண்டவர்கள். அவர்களில் ஒருவரே ''கனக்ஸ்'' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. பொன்னையா கனகசபாபதி அவர்கள்.

யாழ்ப்பாணத்தில் இருபெரும் கல்லூரிகளின் வரலாற்றில், வளர்ச்சியில், மறக்க முடியாதவர், கனடாவுக்கு இடம்பெயர்ந்து வந்தும் தனது கல்விப் பணியினை, சமூகப் பணியாக நினைத்துச் செய்துவரும் பொ. கனகசபாபதி அவர்களை (16-09-93 இரவு நேரம்) அவரது இல்லத்தில் சந்தித்தோம். பல மணி நேரமாக தனது அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

பரஸ்பர சம்பிரதாயங்களுடன் வரவேற்கப்பட்டு, ஆரம்பமான எங்கள் உரையாடல் அவரது ஆரம்பகால வாழ்க்கையில் இருந்து இன்றைய நிகழ்கால வாழ்க்கை வரை தொடர்ந்தது.

தனது ஆரம்பகால வாழ்க்கைபற்றிச் சுவையாகக் குறிப்பிட்டார்:

யாழ்ப்பாணத்தில் உள்ள 'சண்டிலிப்பாய்' என்ற கிராமத்தில் உள்ள ஒரு விவசாயக் குடும்பத்தில் 1935ம் ஆண்டு செம்டம்பர் 4ம் திகதி பிறந்தேன். எனது ஆரம்பக் கல்வியினை எமதூரில் உள்ள ஆங்கிலப் பாடசாலையில் தொடங்கி, எட்டாம் வகுப்புக்கு வரும்போது சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சேர்ந்தேன்.

அப்போது அங்கு அதிபராக இருந்தவர் ஒறேற்றர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள். H.S.C. [பின்னாளில் G.C.E.(A/L)]வகுப்புக்கு நான் வந்தபோது விலங்கியலிலும், இரசாயனவியலிலும் மிகவும் திறமையான பெறுபேறுகளைப் பெற்ற போதிலும், 'பௌதிகவியல்' பாடம் எனக்கு மிகவும் சிரமமாகவே இருந்தது.

அன்று எனக்கு அங்கிருந்த பௌதிகவியல் ஆசிரியரும் என்னுடைய இந்தக் குறைபாட்டினைப் பார்த்து மேலும் மட்டம் தட்டுபவராக இருந்தாரே தவிர அதில் வளர்வதற்கு உற்சாகம் தருபவராக இருக்கவில்லை.

அது அந்த நேரம் கல்வியில் எனக்குப் பெரும் தாக்கத்தினைக் கொடுத்தது. இந்த நேரத்தில் இந்தியா சென்று படிப்பதற்கு மனுச் செய்தேன். திருச்சி சென் - ஜோசப் கல்லூரியில் அனுமதி கிடைத்தது. அந்தக் காலத்லேயே ஆசிரியத் தொழில் செய்ய வேண்டும் என்பதே எனது உயர்ந்த இலட்சியமாக இருந்தது. திருச்சியில் மிகவும் அதிக புள்ளிகள் வாங்கிய ஒருசில மாணவர்களில்... அன்றைய காலங்களில் நானும் ஒருவன்.

பின்னர் சென்னை Christian Collegeஇல் 'விலங்கியல்' துறையில் சிறப்புப் பட்டப் படிப்பினைத் தொடர்வதற்காகச் சேர்ந்தேன்.

சாதாரணமாக, பல்கலைக்கழகப் புதுமுகத் தேர்வில், அதுவும் தங்களைப்போல் மிகவும் சிறப்பாகத் தேர்ச்சியடையும் மாணவர்கள் மருத்துவத் துறையினைத் தெரிவு செய்வது வழமை! ஏன் தங்களுக்கு அந்த விருப்பம் வரவில்லை....? என்று கேட்டு வைத்தேன். அதற்கு அவர் -

எனக்கு என்னவோ ஆசிரியத் தொழில் செய்ய வேண்டும் என்ற ஒரு இலட்சியம் இருந்ததே தவிர மருத்துவத் துறையில் படிக்க வேண்டும். தொழில் புரிய வேண்டும் என்னும் விருப்பம் இருக்கவில்லை. பின்னர் பட்டப்படிப்பிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தங்கப் பதக்கங்கள் பெற்று மாணவர்கள் மத்தியில் பிரபல்யமானேன்.

பட்டப்படிப்பினை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பிய நான் ஆசிரியத் தொழிலில் சேர்வதற்கு முயற்சி செய்தேன். அப்போது ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்த எனது அண்ணர் முருகேசம்பிள்ளை ஆசிரியர் அவர்கள் அன்று அங்கு அதிபராக இருந்த திரு. ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களை எனது தொழில் தொடர்பாக அணுகியபோது, அங்கு இடம் இல்லாத காரணத்தினால், மகாஜனாக் கல்லூரியின் அதிபராக இருந்த திரு. ஜெயரத்தினம் அவர்களை என்னை அவரது கல்லூரியில் சேர்க்குமாறு கேட்டிருந்தார்.

நான் இந்திய பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருந்தமையால் திரு. ஜெயரத்தினம் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அங்கு ஆசிரியராகச் சேர்ப்பதற்கு விருப்பம் இருக்கவில்லை. ஏனெனில் அந்த இடத்திற்கு அவர் இலங்கை அல்லது இலண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரி ஆசிரியரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது காலம் மாத்திரம் மகாஜனக் கல்லூரியில் வைத்திருக்கும்படியும், பின்னர் மீண்டும் தாம் தனது கல்லூரிக்கு எடுத்துக் கொள்வதாகவும் 'ஒறேற்றர்' அவர்கள் கேட்டிருந்த படியால்... ஒரு அரை விருப்பத்துடன் என்னை எடுத்திருந்தார்.

அப்போது எனக்கு 22 வயது. மிகவும் இளம் வயதில் நீண்ட காலமாக நான் விரும்பியிருந்த எனது ஆசிரியத் தொழிலை மகாஜனாக் கல்லூரியில் ஆரம்பித்தேன். எனது கடமையினை நான் சரியாகவும் திறமையாகவும் செய்தமையால், பின்னர் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் தனது கல்லூரியில் சேர்த்துக் கொள்ள என்னைக் கேட்டுக் கொண்டபோதிலும், திரு.ஜெயரத்தினம் அவர்கள் என்னைத் திருப்பி அனுப்ப மறுத்துவிட்டார். (கனடாவில் வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒன்றில் திரு. ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் இதுபற்றி முன்னர் குறிப்பிட்டது நினைவில் கொள்ளத் தக்கது.)

ஆசிரியர் தொழிலின் பின்னர் அதிபராகத் தங்கள் வாழ்க்கை மாற்றம்பற்றி...?

1957 - 1971ம் ஆண்டு காலம் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகப் பதவி வகித்த பின்னர் 1971ம் ஆண்டில் அதிபர் தரத்தற்கு உயர்த்தப்பட்டேன். ஏழாலை மகாவித்தியாலயத்தில் சுமார் மூன்று மாதகாலம் தற்காலிகமாகப் பணிபுரிந்துவிட்டு, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரிக்கு மாற்றலானேன். அங்குதான் எனது அதிபருக்கான பதவிக்காலம் ஆரம்பமானது என்று கூறலாம்.

கல்லூரி அதிபராக மிகவும் இளம் வயதிலேயே பதவியேற்ற காலத்தில் தங்களின் வழிகாட்டியாக, முன்னோடியாக எவரையாவது எடுத்துக் கொண்டீர்களா? அந்த வழிகாட்டிகளில் என்ன குணாதிசயங்களைக் கண்டீர்கள்?

ஆமாம்! என்றும் எனது பேரன்புக்கும் பெரும் மதிப்புக்குமுரிய திரு. ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் அவர்களின் 'மனிதாபிமானம்'. ஏனெனில், தன்னுடைய பகைவர்கள், தன்னை எதிர்த்தவர்கள், தீங்கு இழைக்க யோசிப்பவர்கள் எல்லோரையுமே மனிதாபிமானத்துடனேயே அணைத்துச் செல்லும் ஒரு பெருந்தகை மனிதர் அவர். (தனது அன்புக்குரிய ஆசான் 'ஒறேற்றர்' பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம்... அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதனை காணக்கூடியதாக இருந்தது.)

அடுத்த எனது வழிகாட்டி... நான் ஆசிரியராக இருந்தபோது அதிபராக இருந்த திரு. ஜெயரத்தினம் அவர்களின் 'அணுகுமுறை'. ஏனெனில், எந்தவொரு பிரச்சினையையும், அதிபராக இருந்து அவர் அணுகும் முறையினையும், தீர்க்கும் முறையினையும் பார்த்து இருந்த எனக்கு பின்னாளில் அதே முறையினை அதிபர் தொழிலில் என்னால் பின்பற்ற முடிந்தது.

அவர்கள் தவிர புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியின் முன்னாள் அதிபராக இருந்த திரு. குமாரசாமி அவர்களின் 'தியாகம்'. கல்லூரி வேலை என்றால், தனது குடும்ப வேலைகள் உட்பட சொந்தப் பிரச்சினைகள், வருத்தம் துன்பம் யாவற்றையும் தியாகம் செய்துவிட்டுத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் தியாகி அவர்.

சுருக்கமாகக் கூறப்போனால்...
திரு. ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் மனிதாபிமானம், திரு. து. ஜெயரத்தினத்தின் அணுகுமுறை, திரு. குமாரசாமி அவர்களின் தியாகம் என்பன என்னை ஈர்த்தன.

இவர்கள் மூவருமே எனது அதிபர் தொழிலின் வழிகாட்டிகள் - தொழில் ஆசான்கள்.

மிகவும் இளம் வயதில் அதிபராகப் பதவியேற்று உங்கள் தொழிலை ஆரம்பித்தபோது, அதே கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியராகப் பணிபுரிந்த தங்களையும் விட வயதில் கூடியவர்கள் தங்கள் உத்தரவுக்கு ஒத்துழைத்துப் போனார்களா?

நான் செய்யாத ஒரு வேலையினைச் செய்யுமாறு எனக்குக் கீழ் உள்ள ஆசிரியர்களை ஒருபோதும் நான் கேட்பதுமில்லை, கேட்கப் போவதுமில்லை. கல்லூரிக்குத் தினமும் காலையில் வரும் முதல் மனிதனும் நானே. கல்லூரி வகுப்புகள் யாவும் முடிவடைந்து அந்த இடத்தினை விட்டுச் செல்லும் கடைசி மனிதனும் நானே. எனது அதிபர் வேலையுடன் நான் படிப்பிக்க வேண்டிய வேலைகளைச் சரிவரச் செய்து மாணவர்களைப் பரீட்சைக்குக் குறிப்பிட்ட நேரத்தில் தயார் செய்யும் வேலைகள் யாவற்றினையும் நானே சரிவரச் செய்யும் போது, எனது உத்தரவு இல்லாமலேயே அவர்களும் தங்கள் பணியினைச் செய்வார்கள்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி ஒரு சிறு கிராமப் பகுதியில் அமைந்திருந்தது. நீங்கள் இளம் வயதில் அதிபராக 1971ல் அங்கு சென்றபோது அவ்வூர் மக்களின் வரவேற்பு எப்படியிருந்தது?

அந்தக் கல்லூரி அதிபர் வேலையும், புத்தூர் கிராம மக்களின் உதவிகளும் என்றும் என்னால் மறக்க முடியாதவை ஒன்று. முதல்நாள் கல்லூரி அதிபர் பதவியினை எடுத்துக் கொண்ட நான்.... பாடசாலைக்கு மறுபுறத்தில் உள்ள ஒரு பாபர் சலூனில் வகுப்பு நேரம் சில மாணவர்கள் இருந்து அரட்டை அடிப்பது வழமையானது என அறிந்து, ஒரு சிறு பிரம்புடன் சென்றேன்.

வீதியில் வைத்து அவ்வளவு பேருக்கும் இரண்டு அடி போட்டு வகுப்புகளுக்குத் துரத்தினேன். இதனை வீதியில் நின்ற கிராம மக்கள் பலர் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர். அதன் பின்னர் வகுப்பு நேரங்களில் மாணவர்கள் அந்தப் பக்கமே போவதில்லை. அன்றைய தினம் இதனை அறிந்த அந்தக் கல்லூரி முன்னாள் அதிபர்கள் திரு. வீரசிங்கம் (கிளிநொச்சி பா.உ.ஆக இருந்த ஆனந்தசங்கரி அவர்களின் தந்தை), எனது வழிகாட்டிகளில் ஒருவர் எனக் கருதிய திரு. குமாரசாமி இருவரும், புதிதாக வந்த அதிபர் 'கடுமையான கட்டுப்பாடு உடையவர்' என அறிந்து நேரே கல்லூரிக்கு எனது அலுவலகத்திற்கு வந்தார்கள். அவர்கள் இருவரைப் பற்றியும் நான் கேள்விப் பட்டிருந்தேனே தவிர அன்றுதான் முதன்முதலில் பார்த்தேன். தங்களை அறிமுகப் படுத்தியவுடன் ஒரு கணம் அதிர்ச்சியால் நான் கதிரையில் இருந்தே எழுந்து விட்டேன். திறமையான, கட்டுப்பாடான முறையில் கல்லூரியினை நடாத்துவதற்கு எனக்கு ஆசியும், வாழ்த்தும் தெரிவித்துவிட்டுச் சென்றிருந்தார்கள்.

தாங்கள் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் அதிபராக இருந்தபோது அந்தப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களை கல்லூரியில் சேர்ப்பது தொடர்பாக முயற்சி செய்யவில்லையா?

முதலில் அந்தப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் யாவரையும் அழைத்து உங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள் என வற்புறுத்திய போதும், அப்போது இருந்த சமூக அடக்குமுறையினால் அந்த மக்களுக்குத் துணிவு வரவில்லை. கடைசியாக அந்தச் சமூகத்தினைச் சேர்ந்த ஓர் ஆசிரியரை வேறு ஊரில் இருந்து எடுத்து இந்தக் கல்லூரியில் நியமனம் வழங்கினேன். ஆனால், சமூக பாரம்பரியத்தில் ஊறிய மக்கள் மத்தியில் இதற்குப் பயங்கரமான எதிர்ப்புக் கிளம்பியது. அந்த ஆசிரியரை அடித்து விரட்டத் திட்டமிட்டார்கள். அவர்களின் திட்டத்தினை அறிந்ததும் அதே கிராம மக்கள் மத்தியில் நானே சென்று அடிதடி பிரச்சினை என்று ஏதாவது அந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தனைச் சேர்ந்த ஆசிரியருக்கு நடந்தால் அடுத்த நிமிடமே இந்தக் கல்லூரி, கிராமம் ஆகியவற்றிற்கும் எனக்கும் கடைசி நாளாக இருக்கும் என்பதைத் திடமாக எடுத்துக் கூறியதோடு பல போதனைகளும் செய்தேன். இதன் காரணமாக அவர்கள்... அந்த முரட்டுத்தனமான முடிவினை கைவிட்டு விட்டார்கள். பின்னர் பல தாழ்த்தப் பட்ட மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்தார்கள். அவர்களிற் பலர் படித்து இன்று பிரகாசமான வழியில் தங்கள் வழிகளைப் பார்த்துக் கொள்கின்றார்கள். என்னுடைய இந்தச் சிறு சமூகப் புரட்சிக்கு அப்போதைய கோப்பாய் எம். பி. கதிரவேற்பிள்ளை மிகுந்த ஒத்துழைப்பு வழங்கினார். இதே காலகட்டத்தில் பௌத்த பாடசாலைகள் புத்தூரில் ஆரம்பிக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஊடுருவல் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன.

விவசாயத்தினையே தொழிலாகக் கொண்ட புத்தூர் மக்கள் தங்கள் கிராமத்தின் கல்லூரியின் வளர்ச்சிக்கு நான் எடுக்கும் முன்னேற்றமான சகல முயற்சிகளுக்கும் தந்த மகிழ்ச்சியான ஒத்துழைப்புப் போல் வேறு இடங்களில் கிடைத்திருக்கும் என நான் நினைக்கவில்லை.

கல்லூரி முடிந்து மாலை நேரங்களில் கல்லூரிக் கட்டிட வேலைக்காக எனது தலைமையில் ஓர் ஆசிரியர் குழு கிராம மக்களிடம் பணம் சேகரிப்பதற்காகச் செல்லும். செய்தி அறிந்த மக்கள் எங்களை வரவேற்க நிற்கும் காட்சி இன்றும் மனத்தினை நெகிழ வைக்கும். பலாப்பழம், பாலைப்பழங்கள், மாம்பழம் உட்படப் பல்வேறு வகையான கிராமத்துப் பணியாரங்கள் எங்களுக்குப் பரிமாறும்போது அவர்களின் உணர்வு பூர்வமான 'விருந்தோம்பல்' எப்படியென்று வர்ணிக்க முடியாதிருக்கும். ஏழை விவசாயிகள்கூடத் தங்கள் வேளாண்மை அறுவடை காலத்தில் அறுவடையில் ஒரு பகுதியான வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவற்றினைக் கல்லூரியில் உள்ள களஞ்சிய அறையில் கொண்டுவந்து காணிக்கையாக நிரப்பிவிடுவார்கள். பின்னர் அதனை நாம் விற்று கல்லூரிக்கு வேண்டிய பணத்தினைப் பெற்றுக் கொள்வோம்.

1971ஆம் ஆண்டில் நான் அக்கல்லூரிக்குச் சென்ற போது 800 பேராக இருந்த மாணவர்கள் தொகை 1976ல் நான் அங்கிருந்து விலகும்போது சுமார் 1600 பேராக அதிகரித்தது. அதாவது இரு மடங்காக மாணவர்கள் தொகை அதிகரித்தது. நான் அங்கு அதிபராகப் பதவியேற்ற பின்னரே முதன் முதலில் மருத்துவத் துறைக்கு அக் கல்லூரியில் இருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியினைவிட்டு எந்த ஆண்டில் நீங்கள் பின்னர் விலக வேண்டி வந்தது? ஏன் தாங்கள் விலகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டீர்கள்?

அங்கு நான் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது எனக்கு யாழ். இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி போன்ற பிரபல கல்லூரிக்கெல்லாம் மாற்றம் செய்யக் கேட்டபோது நான் மறுத்துவிட்டேன். இதே காலத்தில் கொழும்பில் சோமஸ்கந்தா கல்லூரி பழைய மாணவர்கள் நடத்திய விருந்துபசாரத்தில் எனது இடமாற்றம்பற்றிக் கேட்கப்பட்டது. அப்படிப் போனால் மகாஜனக் கல்லூரி, இல்லையெனில் நான் புத்தூரிலேயே இருப்பேன். ஆனால் நானாகக் கேட்டுப் போகமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட்டேன். என்ன ஆச்சரியம்? நான் யாழ்ப்பாணம் திரும்பி வந்தபோது எனக்கு மகாஜனக் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்திருந்தது. ஆனால், அன்றைய புத்தூர் சோமஸ்கந்தா பழைய மாணவர்கள் எனது இடமாற்றம் தெரிந்திருந்தும் நான் தங்களுக்குக் கூறவில்லை என்ற ஒரு தப்பெண்ணம் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அவர்கள் பார்வையில் ஒரு குற்றவாளியாக்கியது. ஆனால், உண்மையில் அவர்கள் இதுபற்றி வினாவியபோது எனக்கு ஒன்றும் தெரியாது. அவ்வாறு நான் விலகிய காலம் 1976ம் ஆண்டு.

மகாஜனக் கல்லூரிக்குத் தாங்கள் அதிபராக வருவதற்கு வழி வகுத்தவர்கள் யார்?

மகாஜனாவின் பழைய மாணவனும் அப்போது கல்வி அமைச்சின் செயலாளராகவும் இருந்த திரு. பாஸ்கரலிங்கம். மகாஜனக் கல்லூரி வீழ்ச்சி யடைவதனைத் தடுக்க அவர் இப்படியொரு முடிவினை எடுத்திருக்கலாம். மேலும், மகாஜனக் கல்லூரியில் நான் ஆசிரியராக இருந்தபோது படித்து வெளியேறிய மாணவர்கள், பல மாணவர்களின் பெற்றோர்கள் நான் அங்கு அதிபராக வரவேண்டும் என ஆவலுடன் முயற்சி செய்தார்கள்.

மகாஜனக் கல்லூரிக்குத் தாங்கள் அதிபராக நியமனம் பெற்று இருந்தபோது, ஏற்கனவே அங்கு உப அதிபராகப் பணியாற்றிய திரு. இராமசாமி அவர்களை அதிபராக நியமிக்க வேண்டும் என்பதில் ஒரு கோஷ்டித் தகராறு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறதே....! அதுபற்றிக் கூற முடியுமா?

திரு. இராமசாமி அவர்கள் அப்போது அங்கிருந்து ஏற்கனவே இடம்மாறி வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து கொண்டிருந்தார். காங்கேசன்துறைத் தொகுதியின் அரச கட்சியின் அமைப்பாளர் ஒருவர் கொண்டு வந்த ஒரு மாணவனின் அனுமதி ஒன்றில் நான் அவருக்குச் சாதகமாக இணங்கி வரவில்லை என்பதற்காக அவர் எனக்கு எதிரான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அப்போது 1977ஆம் ஆண்டு இனக்கலவரம் நடந்து, அகதிகளாக வந்தவர்களுக்குப் புனர் வாழ்வு வேலைகளில் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவன் டாக்டர் சுப்பிரமணியம் தலைமையில் ஈடுபட்டிருந்தபோது கல்லூரி சார்பாகப் பணம் சேர்த்து வழங்கியிருந்தேன். பணம் வழங்கும்போது அன்று காங்கேசன்துறை எம்.பி. யாகவிருந்த திரு. அமிர்தலிங்கம், புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபட்டிருந்தமையால் அவரையும் சேர்த்துப் பணம் வழங்கப்பட்டது.

ஆனால் இந்த அரச கட்சியின் அமைப்பாளர் நான் கல்லூரி மாணவர்களிடமிருந்து திரு. அமிர்தலிங்கத்தின் அரசியல் வேலைகளுக்குப் பணம் சேர்த்துக் கொடுத்ததாகக் குற்றம் சாட்டி, மக்கள் என்னை விரும்பவில்லை என்று கூறி, அங்கிருந்து என்னை இடமாற்றம் செய்யும் தீவிர வேலைகளைச் செய்தார். அப்போது அன்றைய யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தில் இருந்த உயர் அதிகாரியும் இதற்கு ஆரம்பத்தில் உடந்தையாகவிருந்து பின் தன்னை மாற்றிக் கொண்டார். அவர்கள் யாவரும் சேர்ந்து வசாவிளான் மத்திய மாகவித்தியாலயத்தில் இருந்த திரு. இராமசாமி அவர்களை என்னுடைய இடத்திற்கு மாற்றம் செய்து கொண்டு வந்து என்னை மகாஜனக் கல்லூரியில் இருந்து இடமாற்றம் செய்ய முயற்சித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மகாஜனக் கல்லூரியின் அதிபர் பதவியினை திரு. இராமசாமிக்கு நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு வரவில்லையா?

இந்த இடத்தில் அவர்கள் யாவரும் நடந்து கொண்டது சரியாக இருக்கவில்லை. திரு. இராமசாமி அவர்கள் என்னைவிட வயதில் மூத்தவர். மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியில் அவருக்கு என்னைவிட நிறைய பங்கு உள்ளது. இதே இடத்தில் என்னை நேரே கேட்டு அந்த மாற்றத்தினைத் தருவதனை விட்டுவிட்டு, இங்கு வருவதற்குத் தயங்கிக் கொண்டிருந்த திரு. இராமசாமி அவர்களைப் பயன்படுத்தி என்னைப் பழிவாங்க முற்பட்டதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என உறுதியாகக் கூறிவிட்டேன்.

பின்னர் இந்தப் பிரச்சினை எப்படி உங்களுக்குச் சாதகமாக அமைந்தது?

திரு. இராமசாமி அங்கு வந்தபோது மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். திரு பாஸ்கரலிங்கம் அவர்களின் மறைமுகமான ஆதரவு எனக்கிருந்தது. காங்கேசன்துறை எம்.பி.யாக இருந்த திரு. அமிர்தலிங்கம் அவர்கள் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரிடம் (Director) எனது இடமாற்றத்தினைச் செய்ய வேண்டாம் என மக்கள் சார்பில் கேட்டுக் கொண்டிருந்தார். இவை எல்லாம் எனக்குச் சாதகமாக அமைந்தன.

தங்களுக்கெதிரான இந்தப் பழிவாங்கலில் தாங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அடுத்து என்ன உத்தேசம் உங்களுக்கிருந்தது?

பதவியினை ராஜினாமாச் செய்துவிட்டு விலங்கியல் பாடத்தில் இன்னும் அதிகமாக ரியூசன் கொடுத்து வாழ்வது என்பதே! இதில் ஏற்பட்ட தாக்கமே இறுதியில் நான் மகாஜனக் கல்லூரியினை விட்டுவிலகி வெளிநாடு செல்வதற்கும் காரணமாக இருந்தது. ஏனெனில் அதிபர் வேலையில் முடிசூடா மன்னனாக இருக்கிறேன் என்ற எண்ணத்தில் இருந்த எனக்கு இது பெரும் வேதனையாகப் போய்விட்டது.

பின்னர் மகாஜனாக் கல்லூரியில் எவ்வளவு காலம் அதிபராகப் பதவி வகித்தீர்கள்? அதில் நீங்கள் ஏற்படுத்திய வளர்ச்சி என்ன?

1976-1981 வரை பதவி வகித்தேன். இலங்கையின் பிரபல ஆசிரியர்களான செல்வி பொன்னுத்துரை (தாவரவியல்), செல்வி இராஜதுரை (விலங்கியல்), திரு. ஆனந்த மகேந்திரன் (கணிதம்), போன்றோரைக் கல்லூரிக்கு நியமனம் செய்தேன். க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகள், விளையாட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை ஆகியவற்றில் முன்னரைவிடத் திறமையான பெறுபேறுகள் கிடைத்தன. ஜெயரத்தினம் ஞாபகார்த்த மண்டபம் கட்டினோம். இப்படிப் பல.

திரு. இராமசாமியின் நிலை பின்னர் எப்படி இருந்தது?

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு மீண்டும் நியமிக்கப்பட்டார். அதன் வளர்ச்சியில் அவர் உறுதுணையாகவிருந்து யாழ்ப்பாணத்தின் பிரபல அதிபர் என்ற பெயருடன் அந்த பாடசாலையின் வரலாற்றில் தனக்கென ஒரு பெயரைப் பதித்தார்.

எப்போது மகாஜனக் கல்லூரியினைவிட்டு விலகியிருந்தீர்கள்? எதற்காக விலக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது?

1981யில் விலகியிருந்தேன். எனது 'இடமாற்றம்' என்ற பழிவாங்கல், அதனால் ஏற்பட்ட சில தாக்கங்கள், மற்றது... அப்போது எங்கள் குழந்தைக்கு மேற்கொள்ள விருந்த ஒருசிறு சத்திரசிகிச்சை காரணமாக நாட்டினை விட்டு வெளியேறியிருந்தேன். பின்னர் எனது ஆசிரியத் தொழிலை நைஜீரியாவில் சில காலம் தொடர்ந்தேன்.

நைஜீரியாவில் தங்களின் கல்விச் சேவை எப்படி இருந்தது?

எனக்கு அங்கு விவசாய விஞ்ஞானம் போதிப்பதற்கே சந்தர்ப்பம் கிடைத்தது. விவசாயத்தில் பல புதிய ஆய்வுக்கூடங்களை உருவாக்கினேன். இறுதியில் அங்கு குறிப்பிட்ட ஒரு பகுதியில் உள்ள பல பாடசாலைக்கு விவசாய விஞ்ஞான கல்விப் பரிசோதகராகப் பதவி உயர்வு கிடைத்தது. 1981-1986 காலம் எனது நைஜீரிய வாழ்க்கை காலமாகும். பின்னர் 1986ல் கனடா வந்து சேர்ந்தேன்.

கனடாவில் தங்கள் கல்வித்துறை சேவைகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

இப்போது நான் North York Board கல்விச்சபையில் பணிபுரிகின்றேன். அதாவது புதிதாக வரும் மாணவர்களின் தாய்மொழி ஆற்றல், மற்றும் பாடங்களில் பயிற்சி செய்தல்....

'Supply Teacher'ஆக அதாவது, எவராவது வராத ஆசிரியரின் இடத்திற்கு விஞ்ஞானம் படிப்பிக்கிறேன். சனிக்கிழமைகளில் தமிழ் மாணவர்களுக்கு தமிழ்ப் பாடம் படிப்பித்து வருகின்றேன்.

1990ஆம் ஆண்டில் இருந்து கனடாவில் உள்ள சில பாடசாலைகளில் தமிழ்மொழி ஒரு தராதர பாடமாகப் போதிக்கப்பட்டு வருவதற்குரிய ஒழுங்குகள் செய்துள்ளோம். முக்கியமாக ஸ்காபரோ, எரொபிகொக், நோர்த்யோர்க் கல்விச் சபைகளில் இவை நடைமுறைப் படுத்தப்படுகின்றன. திருமதி கணபதிப்பிள்ளை (முன்னாள் வேம்படி ஆசிரியை)யும் நானும் பாடத் திட்டங்களை உருவாக்கினோம். முன்னாள் விஞ்ஞான கல்விப் பரிசோதகர் திரு. இலங்கையர் செல்வரத்தினம் இதில் ஒரு தமிழ் ஆசிரியராகவுள்ளார்.

மற்றும் இங்குள்ள நூலகங்களில் தமிழ் புத்தகங்களை எடுப்பித்து அதற்குரிய ஒரு பிரிவினையும் ஏற்படுத்தியுள்ளோம்.

கடந்த காலங்களைவிட இப்போது தமிழ் படிக்கும் மாணவர்களின் உற்சாகம் நன்றாகவேயுள்ளது.

இலங்கை, நைஜீரியா, கனடா ஆகிய மூன்று நாடுகளிலும் கல்வித் திட்டங்களில் என்ன மாதிரியான வித்தியாசங்களைக் காண்கின்றீர்கள்?

நைஜீரியாவில் இலங்கை மாதிரியான கல்வித் திட்டமே ஏறத்தாள உண்டு. ஆனால் கனடாவில் கல்வியில் கூடிய சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களில் 40%த்தினர் குறிப்பிட்ட தரத்தில் படிப்பினை முடிக்கவில்லை. 25% படிப்பினை இடையிலேயே கைவிட்டுவிடுகின்றனர். ஏனெனில் இங்குள்ள சிரேஷ்ட பாடசாலைகள் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களை முறையாகத் தயார் செய்வதில்லை. பாடத்திட்டம் தயாரிப்பவர்கள், படிப்பிப்பவர்கள், விடைத்தாள் திருத்தபவர்கள் யாவரும் ஒருவரே....!

ஆனால் இலங்கையில் பல்கலைக்கழகம் போகுமுன் நாம் கா.பொ.த வகுப்புகளில் நன்கு வடிகட்டி எடுத்தே பல்கலைக்கழகம் அனுப்புகிறோம். அனேகமானோர் பல்கலைக்கழகப் படிப்பினை இங்குபோல் இடையில் விடுவதில்லை.

கனடாவில் உள்ள தமிழ் மாணவர்கள், பெற்றோர்களுக்கு ''தமிழருவி'' மூலமாக ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?

''பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது'' என்று பெருமையாகக் கூறுவதனைத் தவிர்த்துவிட்டு அவர்களுக்குத் தமிழ் மொழியினைக் கற்பியுங்கள். தமிழ் கலாசாரத்தினை, பண்பாட்டினை வளர்த்துக் கொள்ளுங்கள்.

மாணவர்களே....!

உங்கள் பாடங்களுடன் தாய் மொழியினைப் படித்துக் கொள்ளுங்கள். தாய்மொழி படிப்பதனை, அதில் தேர்ச்சி பெறுவதனை ஒரு தியாகமாகவே எடுத்துக் கொள்ளுங்கள்.

இறுதியாக....

நீண்டமணி நேரமாக... அதாவது நடுநிசி வரை தொடர்ந்த எங்கள் சந்திப்பு.. எங்களை மறந்த உரையாடல் மூலம் பெரும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட களிப்பில் அன்புடன் விடைபெற்றுக் கொண்டேன்.

**நன்றி: தமிழருவி, அக்டோபர் 93**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"A man cannot speak but he judges and reveals himself. With his will or against his will, he draws his portrait to the eye of others by every word."

- Ralph Waldo Emerson

## ஆற்றலும் அறிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசத்தின் நிறைகுடம்

அறுபது வயதாகிவிட்ட ஒருவர் பற்றி ஆறு வருடங்கள் மட்டுமே அவருடன் பழகிய ஒருவரால் பூரணமான ஒரு கட்டுரையை எழுத முடியாது. ஆனாலும், அந்த ஆறு வருடங்களானது ஒருவரது ஆளுமையை ஓரளவுக்காவது தெரிந்து கொள்ளப் போதிய சந்தர்ப்பம் அளித்திருக்குமானால் அதுவே போதுமானது என்ற அடிப்படையில் இந்தக் கட்டுரை அமைகின்றது.

'கனக்ஸ்' என்று நண்பர்களாலும், அதிபர் என்று சக அன்பர்களாலும் அழைக்கப்படுபவர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள். ஏறத்தாழ முப்பத்தைந்து வருடங்களாக ஆசிரியப் பணியை அலுக்காமல் சலிக்காமல் பார்த்து வருபவர். மாணவர்களுக்குள் ஏற்றத்தாழ்வினை விதைக்காதவர். அதேசமயம் மிகவும் கண்டிப்பு மிகுந்தவர். எடுத்த காரியத்தைச் சளைக்காமல் செய்து முடிப்பார். எவருக்கும் அஞ்சாதவர். மனத்தில் பட்டதைப் பளிச்செனச் சொல்பவர். இவைகள் அனேகமாக அனைவருக்கும் தெரிந்த விடயங்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் 'செல்வந்தப்' பாடசாலைகளும், புகழ்பெற்ற கல்லூரிகளும் யாழ் நகரிலும், அதனையண்டிய பகுதிகளிலுமே இருந்த காலம் அது. வடமாராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளின் மிகச் சிறந்த மாணவர்கள், நகரத்துப் பாடசாலைகளுக்கே படையெடுப்பது வழக்கம். இந்தப் பழக்கத்தை மாற்றி மகாஜனாவின் தரத்தினை முன்னிலைக் கல்லூரிக்கு நிகராக்கிய பெருமை திரு. கனகசபாபதி அவர்களுக்குண்டு. அதனால், மகாஜனாவின் வரலாற்றில் வைரக் கற்களால் பதித்திடும் ஓர் பெயராக கனகசபாபதி என்னும் நாமம் அமைந்துள்ளது. இதுவும்கூட அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம்.



1995ஆம் ஆண்டு 'தமிழர் தகவல்' விழாவில் ரொறன்ரோ நகர முதல்வர் பாபரா ஹோல், தலைவர் திரு. நா. சிவலிங்கம், 'தமிழர் தகவல்' ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், அப்பொழுது குடியுரிமை அமைச்சராகவிருந்த எலெயின் ஸியம்பா ஆகியோருடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசமும் பெயர் பெற்றுத் துலங்கும் தமிழர்களான டாக்டர்களின் உருவாக்கத்தில் இவருக்கும் பெரும் பங்குண்டு. இதற்காகவே தமது பாடசாலை நேரத்தை மட்டுமன்றி மாலை நேரங்கள், வார விடுமுறைகள், ஓய்வு வேளைகள் அனைத்தையும் செலவிட்ட ஆசான் இவர். தமது மாணவச் செல்வங்கள் ஈழத்தில் மட்டுமன்றி

கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகவும் முன்னணியில் நிற்கும் பிரதான ஒரு கட்டுரையாளராக அதிபர் அவர்களை நாம் தரிசித்து வருக்கிறோம். இங்கிருந்து வெளிவரும் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பல்வேறு விடயங்களில் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். 'தமிழர் தகவல்' மாதாந்த சஞ்சிகையில் 1992ம் ஆண்டிலிருந்து மாதம் தவறாது,




திரு. சுபாஷ் சந்திரனின் 'என் மனசு பாடுது' என்னும் மெல்லிசை இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக.

மேற்குலகெங்கும் உயிர் காக்கும் சேவையில் ஈடுபட்டிருப்பது கண்டு இவர் புளகாங்கிதமடையாதிருக்க முடியாது. தமிழர் கல்வி வரலாற்றில் தமக்கெனத் தனியான ஒரு ஸ்தானத்தை உருவாக்கி வைத்துள்ள பெருந்தகை இவர்.

திரு. கனகசபாபதி அவர்களை ஒரு நல்லாசிரியராகவும், சிறந்த நிர்வாகியாகவும், ஒப்பற்ற அதிபராகவும், நல்லதொரு குடும்பத் தலைவராகவும் மட்டுமே பார்த்தவர்கள், கனடாவில் அவரிடம் மறைந்திருந்த வேறுபல விடயங்களையும் கண்டு கொள்ள முடிந்துள்ளது. அவரது எழுத்து வண்ணம், பேச்சுக்கலை ஆகிய இரண்டையுமே இங்கு பிரதானமாகக் குறிப்பிடுகின்றேன்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இவர் எழுதிவரும் கட்டுரைகள் வாசகர் மத்தியில் மதிப்பு மிகுந்த வரவேற்பினைப் பெற்று வருகின்றன. புலம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி முறை, அவர்களது பழக்க, ஒழுக்கம், பிள்ளை வளர்ப்பு முறை, மாணவர் - ஆசிரியர் தொடர்பு முறை, பெற்றார் - பிள்ளைகள் உறவு முறை என்று எமது எதிர்காலச் சந்ததியின் தேவைகளை நன்குணர்ந்த வகையில் இந்தக் கட்டுரைகளை அவர் ஆக்கித் தருகின்றார்.

இந்தக் கட்டுரைகளின் பல்வேறு ஆதாரங்களைத் தமது குடும்பத்திலிருந்தே அவர் எடுத்துத் தருவதை அவைகளை வாசிப்பவர்களால் புரிந்து கொள்ள முடியும். பருவமடைந்த நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகவும் தந்தையாகவுமிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இவரால், அவர்களது விருப்பு வெறுப்புகளை நன்கு தெரிந்து கொள்ள முடிகின்றது. பிள்ளைகளின் வீட்டு வாழ்க்கையிலிருந்து பாடசாலை பல்கலைக் கழகச் சூழல்வரை நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது. அவலப்படும் அகதிகளான பல தமிழ்க் குழந்தைகளையும் பெற்றாரையும் தினசரி சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டுத் தீர்வினை நிறைவாக வழங்கி வருகின்றார். இந்த வகையில் அவர் பெற்று வரும் அனுபவங்கள் பெறுமதியானவை. அந்த வித்தியாசமான அனுபவங்களைச் சமூகத்தின் தேவையென உணர்ந்து செயற்பட்டு வருவதால். அவரது கட்டுரைகள் வாசிப்பவர் மத்தியில் ஒரு தாக்கத்தினையும், அதேசமயம் பிரச்சனைகளின் தோற்றுவாயைப் புரிய வைப்பவைகளாக அமை வதையும் அவதானிக்க முடிகின்றது.

போதித்தலுடன் சம்பந்தப்பட்டவராதலால் அவரால் அது தொடர்பான கட்டுரைகளை மட்டுமே எழுத முடியுமென்று எவராவது நினைப்பார்களானால், அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே அளிக்கும். அரசியல், விளையாட்டு, நடனம், நாடகம், இலக்கியம், சினிமா என்று இன்னோரன்ன விடயங்களிலும். அவரது கை மேலோங்கி வருவதைக் காணலாம். மிக அண்மைக் காலங்களில் எழுதப்பட்ட பல நடன விழாக்களின் விமர்சனங்கள் வழமையான விமர்சன கட்டமைப்பிலிருந்து வித்தியாசப்பட்டதாக அமைந் துள்ளது. அதேபோன்று அரசியல் கட்டுரைகளும் தர்க்க ரீதியானவையாகவும், எடுத்துச் சொல்ல வேண்டிய விடயங்களைப் போதிய ஆதாரங்களுடன் விளக்குபவையாகவும் அமைந் துள்ளன. திரு. கனகசபாபதி அவர்கள் சிறந்த ஒரு வாசகராக இருந்துவருவதே அவரது கட்டுரை கள் நிரம்பிய விடயங்களைக் கொண்ட வையாக அமைவதற்குக் காரணமென நான் நினைக்கின்றேன்.

'கண்டதும் கற்கப் பண்டிதனாவான்' என்று ஒரு முதுமொழி உண்டு. இது திரு. கனகசபாபதி அவர்களுக்குச் சாலப்பொருத்தமானது. கம்பரா மாயணத்தி லிருந்து பொம்மை, பேசும் படம் வரை, இலங்கைத் தினசரியிலிருந்து கனடியப் பத்திரிகைள் வரை எல்லாவற்றையுமே இவர் படித்து வருகின்றார்.

எழுத்துலகில், வள்ளுவரிலிருந்து வைரமுத்து வரை அனைவரது படைப்புகளையும் வரிக்குவரி வாசிக்கின்றார். யாழ்ப்பாண உதைபந்தாட்டத்திலிருந்து கனேடிய Base Ball வரை, தவறாது பார்த்து வருகின்றார். ஊமைப் படங்களிலிருந்து நவீன காலத்துச் சினிமா வரை அனைத்தையுமே நுணுக்கமாகப் புரிந்தும் தெரிந்தும் வைத்துள்ளார். எப்போதும் எந்த இடத்திலும் புத்தகமும் கையுமாக இவரைக் காணலாம். வாசிக்க வாசிக்க ஒருவன் பூரண மனிதனாகின்றான் என்பதை இவரது வாழ்வு நிரூபிக்கின்றது. விஞ்ஞானப் பட்டதா ரியான ஒருவர், வீட்டுத் தோட்டம், பூந்தோட்டம் ஆகியவைகளை ஒழுங்கு பூர்வமாகச் செயற்படுத்துவது வேறு. ஆனால், கலை, இலக்கியங்களுடன் விளையாட்டு, சினிமா என்று சகல துறைகளிலும் ஈடுபாடு கொண்டு, முன்னோங்கிச் செல்வது, சற்றே வித்தியாசமானது. அந்த வித்தியாசத்தின் நிறைகுடமாக இவர் மிளிர்கின்றார்.

இவரிடமுள்ள தனித்துவச் சிறப்புகளில் மேலானதாக விளங்குவது பேச்சு நடை, உரையாடும் நடை, எழுதும் நடை ஆகிய மூன்றிலும் ஒரே தன்மையைக் கடைப்பிடிப்பதாகும். அதிலும் இவரது எழுத்துக்களை வாசிக்கும்போது அவை அவர் மேடையில் பேசுவது போன்று, அல்லது ஒருவருடன் உரையாடுவது போன்று அமைந்திருக்கும். அதேபோன்று, அவரது உரையாடலும், மேடைப் பேச்சும் அவரது எழுத்துக்களைப் படிப்பது போன்று அமைந்திருக்கும். ஈழத்தில், கலைச்செல்வி ஆசிரியராகவிருந்த திரு. சிவசரவணபவன் (சிற்பி), பிரபல நாடக ஆசிரியராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்த திரு. இ. மகாதேவா (தேவன் - யாழ்ப்பாணம்) ஆகிய இருவரிடம் மட்டுமே இந்தச் சிறப்பினை என்னால் காணக்கூடியதாகவிருந்தது. இந்த வரிசையில் திரு. கனகசபாபதி அவர்களும் சேர்ந்துள்ளார் என்றால் அது மிகையன்று.

இவருடன் நெருக்கமாய் பழகுபவர்கள் மற்றொரு பிரதான அம்சத்தினைக் கவனிக்கத் தவற முடியாது. நேரம் தவறாமையும், நேரக் கட்டுப்பாட்டினைக் கடைப் பிடிப்பதுமே இவை. மகாஜனா பழைய மாணவர் சங்கத்தின் தலைமைத்துவப் பதவியை வகிக்கும் திரு. கனகசபாபதி அவர்கள், தாங்கள் நடத்தும் சகல வைபவங்களையும் குறித்த நேரத்திற்கு ஆரம்பித்து, நேரக் கட்டுப்பாட்டைச் சீராக அனுசரித்துக் கொண்டு செல்கின்றார். அதேபோன்று தாம் உரையாற்றச் செல்லும் வெவ்வேறு கூட்டங்களிலும் நேர ஒழுங்கினை முறையாகக் கடைப்பிடித்து வருகின்றார். நேரமும், காலமும், இடமும் அறிந்து பேச்சுக்கான பொருளினைத் தெரிந்து எடுத்து, அதனைக் குறிப்பிட்ட நேரத்திற்கு நிறைவு செய்வதற்கு முன்னுதாரணமாகத் திகழும் ஒரு சிலரில் இவரும் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு முக்கிய சிறப்பு - எந்தவொரு வைபவத்திற்குப் பார்வையாளராகச் சென்றாலும் இடைநடுவில் எழுந்து செல்லாது முடிவடையும்வரை பொறுமையாக அமர்ந்திருப்பது. விழா அமைப்பாளர்கள், அழைப்பாளர்கள், நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள், பேச்சாளர்கள் ஆகியோருக்கு வழங்கும் ஒரு கௌரவமாக இதனை அவர் கருதி வருகின்றார். அத்துடன் நின்றுவிடாது, வீடு சென்ற பின்னர், பேச்சாளர்கள், விழா அமைப்பாளர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சிறப்பான வைகளைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டி, அவர்கள் மேன்மேலும் சிறப்புற வழியேற்படுத்திக் கொடுக்கின்றார். இந்த நற்பண்பு பலரிடமும் காணப்படுவதில்லை. ஆசிரியராகவும், அதிபராகவும், நல்ல நிர்வாகியாகவும், பல வெற்றி விழாக்களின் தளபதியாகவும் இருந்து வருவதினாற் போலும் திரு. கனகசபாபதி அவர்களிடம் இவைகளை வெகுவாகக் காண முடிகின்றது.

யாழ்ப்பாணத்து மாணவர்கள் மத்தியில் ஒரு காலத்தில் பயங்கரமான ஆசிரியராகத் திகழ்ந்தவர் இவர். கற்பித்தலையும் அடித்தலையும் ஒன்றுடன் ஒன்றாகப் பிணைத்து, தமிழ் மாணவ சமுதாயத்தை ஒழுக்க வரம்பினில் நடத்திச் சென்றவர். பெற்றோருக்கு அஞ்சாது மாணவர் மீது கரம் பதித்த புகழ்பூத்த அதிபர்களில் ஒருவர். ஆனால், கனடாவந்த பின்னர் இந்த நாட்டுச் சட்ட திட்டங்களுக்கு ஏற்பத் தமது உணர்வுகளையும், கற்பித்தல் தன்மையையும் எவ்வாறு அவரால் மாற்ற முடிந்தது என்பது பெருங் கேள்வியாகும். தமிழர் தகவலில் எழுதப்பட்ட ஒரு கட்டுரையில் அவரே அதற்குச் சுருக்கமான பதில் தருகின்றார்.

''இங்குள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்குச் செல்லும்போது பாடசாலையின் படிக்கட்டுகளில் ஏறுகையில் என்னை நானே எச்சரிப்பேன். 'கனகசபாபதி! உனது கைகளை காற்சட்டைப் பொக்கட்டுகளுக்குள் வை. பின்னேரம் பாடசாலை முடிவடைந்து வெளியே வரும்வரை கைகளை மறந்தும் வெளியே எடுக்காதே!' என்பதே அந்த எச்சரிக்கை. இதனால் நான் காப்பாற்றப்பட்டு இருக்கிறேன்'' என்னும் இவரது வரிகள், என்னால் ஒரு போதும் மறக்க முடியாதவை. எங்கள் பிறந்த நாட்டுக் கல்வி கற்பித்தல் முறையையும் புகுந்த நாட்டு முறையையும் பிரித்து விளக்குவதற்கு இதனைத் தவிர வேறு வரிகள் தேவையில்லை.

திரு. கனகசபாபதி அவர்களின் ஆளுமைகள் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். நாட்கணக்கில் பேசிக் கொண்டே இருக்கலாம். அவரது எழுத்தும் பேச்சும் எதிர்கால சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அணிகளாகப் பயன்படுத்தப்பட வேண்டியவைகள். அவைகள் அனைத்தும் மிக்க கவனமாகப் பேணிப் பாதுகாத்து வைக்கப்பட வேண்டியவை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பொது வைபவமொன்றில் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் திரு. கனகசபாபதி அவர்கள் பற்றி எடுத்துக் கூறிய வார்த்தைகள் இன்னமும் காதுகளில் கேட்கின்றன. ''கனடாவில் ஆட்பலம் கூடிய ஒரு தமிழர் இருக்கிறார் என்றால் அவர் கனகசபாபதி மட்டும் தான்'' என்று அவர் சொன்னபோது அதன் அர்த்தம் உடனடியாகப் புரியவில்லை. சில மாதங்களின் பின்னரே புரிய முடிந்தது.

'தனிமரம் தோப்பாகாது' என்று ஒரு பழமொழி உண்டு. அதனைப் பொய்ப்பித்த ஒருவர் உளர் என்றால், அவர் எங்கள் மணிவிழா நாயகர், அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களே. அவரது எழுத்துப் பணியும், பேச்சுப் பணியும் நீண்டு வளர்ந்தோங்க வேண்டுமென்பதே அனைவரதும் விருப்பமாகும்.

**- திரு எஸ். திருச்செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மையுறும் மேடைகள்

அட்டகாசமான உயரம்.

அது அவரின் வளர்த்தியின் அடையாளம் எனின் அதில் ஒரு கம்பீரம்.

அது அவரின் வளர்ச்சியின் அடையாளம் எனின் அதில் ஒரு பெருமிதம்.

பெயரால் அவர் கனகசபாபதி.

ஆற்றலால் அவர் கனக்க சபாக்களில் பதி.

இலங்கையில் இருக்கும் பொழுது அவருக்கு மேடைப் பேச்சுகளுக்கு அவகாசமிருக்கவில்லை.

ஆனால் இங்கோ அவரை விட்டு வைக்க மேடைகளுக்கு அவகாசமிருப்பதில்லை.

புளகாங்கிதத்துடன் அவர் மேடையேறுவார். குதூகலத்துடன் தமிழ் அங்கிருந்து இறங்கி வரும்.

கலகலப்பால் கவையூட்டுவது அவரது மேடைப்பாணி. சமயோசிதத்தால் களையூட்டுவது அவரது மேடையுத்தி. கேட்போரின் சோர்வு தீர்க்கும் ஆற்றல் அவரது மேடைக் கவர்ச்சி.

அவர் பார்த்தவை - படித்தவை - பட்டவை அவரது புலன்களுக்குக் குரல் கொடுக்கின்றன.

அவரது நேர்த்தியான ரஸனை இனிமையுடன் இதமான சொற்களை அவரது நாவிற்குச் சொல்லிக் கொடுக்கின்றது.

அவையே அவர் உரையாற்றுவதற்கு உரம் கொடுப்பதனால் சபையே வரம் பெறுகிறது.

உஷ்ணப்படாமல் வார்த்தைகளை உச்சரிப்பார். உருவங்கள் தம்மை மறந்து உறைந்து போகும்.

சொற்களைப் புண்படுத்தமாட்டார்.
சொற்களாலும் புண்படுத்தமாட்டார்.
அந்தப் புத்திசாலித்தனத்தால் கதிரைகள்கூட கை தட்டும்.

குறிப்புகளை கையில் வைத்து அவர் என்றும் பேசுவதில்லை. ஆனால் குறிப்பறிந்து பேசும் அவரால் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் என்றும் பேச முடியும்.

அவரது வாய் ஓய்வற்றது.
கேட்கும் காதுகள் களைப்பற்றவை!
நின்று.. நிதானித்துப் பேசுவார்.
சிரிக்க... சிந்திக்க... சந்தர்ப்பம் அளிப்பார்.
கரகோஷங்களாலும் கை தட்டல்களாலும் மகிழ சந்தர்ப்பம் ஏற்படுத்துவார்.

வரவேற்புரை - நன்றியுரை - அறிமுகவுரை - அறிவுரை - ஆய்வுரை - ஆசியுரை - வாழ்த்துரை - வெளியீட்டுரை - பாராட்டுரை - சிறப்புரை - தலைமையுரை - பிரதம உரை என மேடைக்கு மேடை அவரது சொற்பொழிவுகள் மாறிப் போனவையாக இருக்குமே தவிர என்றுமே அவை ஆறிப் போனவையாக இருப்பதில்லை.

அவர் மேடைப் பேச்சாளராகச் சிறந்து மிளிர வேண்டும் என அவரது இதயத்திற்குப் பரிந்துரை செய்தவர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களாக இருக்குமோ என நான் சந்தேகிப்பதும் உண்டு!
ஏனெனில் திருமதி கனகசபாதிக்கு நெருங்கிய உறவினரான குறமகள் அவர்கள், மேடைகளுடனும் பல காலமாக மிக நெருங்கிய உறவை வளர்த்துப் புகழைப் பூரிக்க வைத்திருப்பவரல்லவா?

லாண்ட்ஸ்டவுன் கூட்டமொன்றில்தான் திரு. கனகசபாபதி அவர்கள் இங்கு முதன் முதலாக உரையாற்றினார். அக்கூட்டமே அவருக்கு ஒரு ''லாண்ட் மாக்கைத்'' தந்தது.

''விடிந்தால் விழித்துக் கொள்வது இயற்கை. ஆனால் எமது சமூகம் விழித்தால்தான் விடியும்''

என அவர் ஆரம்பித்தபொழுதே - பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அடுத்து என்ன சொல்லப் போகின்றதோ என்று எதிர்பார்க்கும் ஆளும் கட்சி மாதிரி - பார்வையாளர்களின் கவனம் அவர்பால் செல்ல ஆரம்பித்தது.

இன்னுமொரு தடவை அரங்கமொன்றின் வாசலில் இருந்த சிறுவர்கள் வெற்றிலை என்ற பெயர் ஏன் வந்தது என்ற ஆய்விலிறங்கித் தீர்வின்றித் தவிப்பதை அவர் அவதானித்தார்.

**''சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்க வேண்டும் எனக் கொடுக்கப்படுவதால் அது வெற்றி இலை எனச் சிலர் அபிப்பிராயப்பட்டாலும், வெற்றிலைக்குப் பூ இல்லை, பிஞ்சு இல்லை, காய் இல்லை, பழம் இல்லை என்பதால் அதற்கு வெற்று இலை என்ற கருத்தும் உண்டு''.**

அவர் மேடையிலிருந்து அழகாகப் பதிலளித்தது அந்தச் சிறுவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே தாம்பூலம் கொடுத்திருக்கும்.

பிறிதொரு தரம் இன்னுமொரு கூட்டத்தில் ''ஏயர் கொண்டிஷனர்'' வேலை செய்ய மறுத்திருந்தது. மெல்லிய குளிரினால் சகலரும் கைகளைக் கட்டிய படியே அமர்ந்திருந்தனர்.

தலைமை தாங்கி அவர் பேசிய முதலாவது வசனம்

''இது ஒரு மரியாதையான கூட்டம். அதனால்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் கைகளைக் கட்டிக் கொண்டு இருக்கின்றோம்."

சிரிப்பு வெடிகள் மண்டபத்தைச் சூடாக்கின!

மேடைகள் அவரைத் தாலாட்டுகின்றன.
அதனால் அவரும் தூங்குவதில்லை. எவரும் தூங்குவதில்லை. மாறாக உணர்வுகள் விழித்துக் கொள்கின்றன.

சில சமயம் அவரது பேச்சால் மூளைக்குச் செல்லும் ரத்தம் சூடடைவதுமுண்டு!

பல சமயம் அவரது நகைச் சுவையால் மண்டபத்தின் சுவர்கள்கூட கொஞ்சம் ஆடி அசைந்து அடங்குவதும் உண்டு!!

புகழ் பூத்த பெரியவர், கவிநாயகர் கந்தவனம் அவர்களது மணிவிழா 20-11-1993ல் ரொறன்ரோவில் விமரிசையாக நடைபெற்றது. அந்த இனிய தமிழரின் மணிவிழாவே செய்தார் தெரியுமா?

சபையோர்க்கு வணக்கம் சொல்வதைத் தள்ளி வைத்துப் பேச ஆரம்பித்தார்.


அந்த ஆரம்பமே மேடையைக் கலகலப்பாக்கியது!

தொட்டுவிட வேண்டியவற்றை அவர் விட்டு விடுவாரா? அல்லது விட்டுவிட வேண்டியவற்றை அவர் தொட்டு விடுவாரா? என அறிவதற்கு

அவரது குரலை ஒரு தரம் கண்களால் பார்ப்போம்!

அந்த மேடையில் அவர் ஆற்றிய உரையை முழுமையாக ஒரு தரம் காகிதத்தால் காதுக்குள் ஒலிக்க வைத்துக் கேட்போம்!

வாருங்கள்!



கவிஞர் வி. கந்தவனம் மணிவிழாவில் பேராசிரியர் எஸ். முத்துலிங்கம், திரு. தி. மாணிக்கவாசகர், இலக்கியமணி க. தா. செல்வராஜக்கோபால், திரு. நா. சிவலிங்கம், விழாத் தலைவர் திரு. எஸ். திருச்செல்வம், மணிவிழா நாயகர் வி. கந்தவனம், திருமதி தவமணி கந்தவனம், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) திரு. ப. விக்கினேஸ்வரன் முதலியோருடன்.

கனடாவில் நடைபெற்ற முதலாவது மணிவிழாவாகவும் அதுவே முதன்மையான ஒரு விழாவாகவும் சரித்திரத்தில் சாதனை பதித்தது.

அவ்விழாவில் திரு. பொ. கனகசாபதி அவர்கள், திரு. வி. கந்தவனம் அவர்களை நண்பராகத் தரிசித்து உரையாற்றினார்.

உரையாற்றுபவர்களுக்கு நேரக் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக அமல்படுத்தப்பட்டிருந்தது.

அதனைத் தவிர்க்க திரு. கனகசபாபதி அவர்கள் என்ன

நேர அவகாசம் இருந்தால் கடைசியில் வணக்கத்தைச் சொல்கின்றேன்.

கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்போரை வாழும் பொழுதே கௌரவிக்கப் பழகுவோம் என்பது மிக அழகாக இருக்கு... ஆனால் என்னைப் போன்ற ஆசிரியர்களை இதில் விட்டுவிட்டார்கள். ஆசிரிய வர்க்கம் எப்பொழுதும் குட்டுப்படுகின்ற வர்க்கம் என்பதாலோ என்னவோ இதற்குள்ளும் தவறிவிட்டனர்.

தலைவர் அவர்கள்... பாரதியார் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். தீபாவளிக் குமுதத்திலே... மஹாகவியினுடைய கவிதையொன்று பிரசுரமாகி இருக்கின்றது. அவர் இறந்து இருபது வருடங்களின் பின்னர் மஹாகவியினுடைய குறும்பாவைப் பற்றி எழுத்தாளர் சுஜாதா அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால்... அங்கே கொடுமை என்னவென்றால், அவர் பிரபல கவிஞர் சேரனுடைய தந்தை என்று சொல்லப்பட்டுள்ளது. சேரன் ஒரு கவிஞனாக இருக்கலாம். ஆனால் சேரனுடைய தந்தை என்றுதானா மஹாகவிக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்? மஹாகவியை இப்பொழுதுதான் தமிழ்நாடு நினைத்துப் பார்க்கின்றது என்பது உண்மையிலே வருந்தத்தக்கது.

நான் மஹாகவியை இந்தக் குமுதத்திலே பார்த்த பொழுது... இது எமது மஹாகவிதானா அல்லது வேறு ஒரு புது மகாகவி தோன்றிவிட்டாரா என்றுகூட யோசித்தேன். ஏனெனில் இந்த மகாகவியிலே... ''கா''... போடப்பட்டுள்ளது. அவர்... ''ஹா''... போடுவார், மஹாகவி என்று. ஆனால் சுஜாதாவின் இந்த விளக்கத்தைப் பார்த்த பின்பு அவர் நம்மவர்தான் என முடிவு செய்ய முடிந்தது.

அப்படித்தான் எமது நிலைமை. பொதுவாக கவிஞர்கள் எழுத்தாளர்கள் அவர்களுடைய காலத்திலேயே கௌரவிக்கப்படுவதில்லை.

## - எஸ். ஜெகதீசன் -

இவ்விழா நல்லதொரு முயற்சி. இத்தகைய முயற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

ஈழத்துப் பூராடனார் இங்கு பேசும்பொழுது சொன்னார்... கவிஞர் கந்தவனம் அவர்கள் இளமையோடு இருக்கிறார்கள் என்று.

வாசித்தீர்களோ தெரியாது... தமிழர் தகவலில் கவிஞர் கந்தவனம் அவர்கள் எழுதியதை... அதில் ஓரிடத்தில் ஒரு வசனம்

...ஒரு பெட்டச்சியை ஒரு பெடியன் மொத்து மொத்தென்று மொத்திக் கொண்டிருக்கின்றான்... என்று.

மொத்தென்று கவிஞர் குறிப்பிடுவதை ''அடிச்ச''தென்டு நீங்கள் யோசிக்க வேண்டாம்.

அவர் ''வேறு'' கருத்தில்தான் சொல்லியிருக்கிறார்.

ஆகவே இந்தளவு இளமை இனிமையுடன் ஊஞ்சலாடுவதற்கு, அவருக்கு அப்படி ஒரு கற்பனை வருவதற்கு திருமதி கந்தவனமும் காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால் அவருடைய இத்தகைய எழுத்து அவரது வாசகர் வட்டத்தைக் கூட்டி விடுகின்றது என்றுதான் நினைக்கின்றேன்.

நான் வசிக்கின்ற கட்டிடத்தில் இருக்கின்ற ஒரு பெண்மணி அனேகமாக 'தமிழர் தகவல்' வந்த அடுத்த அடுத்த நாள் சொல்லுவா

''...உங்களுடைய கட்டுரை வாசித்தேன். நல்லாயிருக்கு'' என்று...

இம்முறை இரண்டாம் நாள் என்னைக் கண்டவுடன் சொன்னா

''...கந்தவனம் மாஸ்டருடையதை வாசித்தேன். மிக நன்றாயிருக்கு'' என்று.

நான் ஒரு முறை முறைச்சுப் பார்த்தேன்.

''...இல்லை. இல்லை. நீங்கள் எழுதினதும் வாசிச்சனான். என்ன எழுதினனீங்கள்?!...''

அப்ப எனக்குத் தெரியுது... என்னுடையதை கந்தவனம் அவர்கள் மறைத்துவிட்டார் என்று. அந்தளவிற்கு அவருக்கு இளைஞர் வட்டம் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

எழுத்தாளர் ஜெயகாந்தன் போன்றோர் இன்றைய கால கட்டத்திற்கு எழுத முடியாமல் ஒதுங்கிக் கொண்டனர். ஆனால் கந்தவனம் மாஸ்டரது வயதுக்காரரான சுஜாதா போன்றோர் இன்றைய இளைஞர்களுக்குத் தக்க மாதிரி எழுதக் கூடியவர்கள். காலத்துக்குத்தக்க மாதிரி எழுதக் கூடியதால்தான் இன்னமும் சிறந்த எழுத்தாளர்களாக இருக்கின்றார்கள்.

அதே போலத்தான் கவிஞர் கந்தவனம் அவர்களும் காலத்துக்குத்தக்க மாதிரி தனது எழுத்து நடையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து கவர்கின்றார்.

1956ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். இலங்கையில் மொழிக் கொள்கை அமலாக்கப்பட்டுப் பிரச்சினை எழுந்தது. மாணவர்கள் எல்லோருமே கண்டனக் கூட்டம் வைத்தோம்.

எனக்கு நீண்ட காலமாகவே ஒரு பேச்சாளனாக வேண்டும் என்ற ஆசை. இன்னும்தான் அது நிறைவேறவில்லை.

தி. மு. க. கூட்டங்களுக்குப் போவதால் அந்தச் சொல் அடுக்கு என்னைக் கவர்ந்தது. அதனால் நானும் ஏதோ சொல் அடுக்குக்காக சிங்கம் புலி கரடி என்றெல்லாம் பேசித் தள்ளிவிட்டேன்.

மிக அருமையாகப் பேசியதாக எனது நண்பன் நான் உட்கார்ந்த பொழுது தெரிவித்தான்.

ஆனால் இந்த மனுஷன் எனக்கு அடுத்ததாக வந்து, நான் சொன்ன ஒவ்வொன்றிலும் குற்றம் குறை கண்டு, என்னை ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

அன்றைக்கே நான் யோசித்தேன். இவருடன் சினேகிதம் வைத்திருப்பது அவ்வளவு நல்லாக இல்லை என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நாங்கள் இருவரும் கல்லூரிகளிலே ஆசிரியர்களாக, அதிபர்களாக இருக்கும் பொழுது இருவரும் ஒருவரை ஒருவர் சும்மா கண்டால் ''ஹலோ!'' அவ்வளவுடன் போய் விடுவோம்.

அப்படி இருக்கிற காலத்திலே 1977ம் ஆண்டு என நினைக்கிறேன். தேர்தல் முடிந்து நடேஸ்வராக் கல்லூரியிலே திரு. அமிர்தலிங்கத்திற்கும் திரு. திருநாவுக்கரசுவிற்கும் ஒரு விழா வைத்தார்கள். அப்பொழுது கவிஞர் கந்தவனம் அவர்களது கவிதை அங்கு இடம்பெற்றது. அந்தக் கவிதை என்னைக் கவர்ந்தது.

நான் அன்றைக்கே தீர்மானித்தேன். மீண்டும் கவிஞர் கந்தவனம் அவர்களுடன் நான் சினேகிதமாக வேண்டும் என்று. இவ்வளவு காலமும் அவருடைய தொடர்பை விட்டுவிட்டேனே என வருந்தினேன். அவரிடம் நெருங்க முடியுமா என ஏங்கினேன். காரணம் அவரது எழுத்தாளர் வட்டம் அவ்வளவிற்கு வியாபித்திருந்தது.

ஆனால் 1978ம் ஆண்டின் பிற்பகுதியில் மகாஜனாக் கல்லூரியில் நாடகப் பயிற்சி வகுப்பு வைத்தோம். நண்பர் கந்தவனம், தாஸிசியஸ் போன்றவர்கள் அங்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தென் ஆபிரிக்கா செல்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். நானும் நைஜீரியா போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் சொன்னார், ''நீங்கள் போவது நல்லாயில்லை. உங்கள் சேவை நாட்டுக்குத் தேவை'' என்று. அதற்கு நான் சொன்னேன், ஒரு அதிபர் பாடசாலையை விட்டு, நாட்டை விட்டுப் போவதால் நாட்டுக்கு இழப்பு வராது. ஆனால் உங்களைப் போன்ற ஆற்றல் மிக்க கவிஞர் இந்த நாட்டை விட்டுச் செல்வது உண்மையிலே இந்த நாட்டுக்குப் பெரிய இழப்பு என்று.

அந்த நாட்டுக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கும். நல்ல காலமாக கனபேர் இங்கு வந்து விட்டோம். ஆனபடியால் தமிழர்களுக்கு அவ்வளவாக இழப்பு ஏற்படவில்லை. கவிஞர் கந்தவனமும் இங்கு வந்துவிட்டார். பெரும் பகுதி தமிழர்களும்... அவரை ரசிக்கக்கூடிய தமிழர்களும் இங்கு வந்துவிட்டார்கள். ஆனபடியால் அந்த இழப்பு அவ்வளவு பெரிய இழப்பாகத் தோன்றவில்லை.

அவருடைய தொண்டு தொடர்ந்து கொண்டே போகின்றது.

கவிஞர் கந்தவனம் அவர்களுடன் எனக்குப் பின்னர் நல்ல தொடர்பு ஏற்பட்டது. நாங்கள் இங்கு வந்த பின்பாக என்னையும் ஒரு ''மெக்கானிக்'' மாதிரி சில புத்தகங்களை வாசித்து அதை இதைப் பார்த்து எழுதக் கூடிய ஒரு நிலைக்கு திரு. திருச்செல்வம் அவர்கள் கொண்டு வந்தார்.

அனேகமாக தமிழர் தகவல் வந்த மறுநாளே கவிஞர் கந்தவனம் அவர்கள் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொள்வார். ''உங்களுடைய கட்டுரை நல்லாய் இருந்தது'' என்று சொல்லுவார்.

அந்தளவிற்கு உற்சாகம் கொடுத்து நண்பர்களை ஊக்குவிக்கின்ற அந்தத் தன்மை அவருக்கே உரித்தானது. அது மிக நல்லதொரு பண்பு.

அவருடைய தொடர் கட்டுரையில் பார்த்திருப்பீர்கள், அவருக்கு உதவி செய்த சகல நண்பர்களையும் சந்தர்ப்பம் பார்த்துக் குறிப்பிடுவார். அவர்கள் செய்த சிறு உதவியைக்கூட பெரிதாக அன்போடு அவர் எடுத்துக் காட்டி வருவதைப் பார்க்கலாம்.

அத்தகைய ஒரு நல்ல நண்பர். அவர் ஒரு சிறந்த நண்பராக இருப்பதற்குக் காரணம் அவருடைய நிலைப்பாடு. நண்பர்களுக்கு உதவ வேண்டும். நண்பர்களது பெருந்தன்மையைப் பாராட்ட வேண்டும் என்ற அந்த நல்ல பண்பு திருவாளர் கந்தவனம் அவர்களிடம் இருந்த காரணத்தினால்தான் அவர் இன்று தமிழ் மக்களிடையே மிக அபிமானத்துக்குரியவராக இருக்கின்றார்.

அவரும் அவரது மனைவியாரும் அறுபதாவது திருமண ஆண்டு விழாவையும் காண வேண்டும் என்று வாழ்த்தி இவ்வளவு நேரமும் பொறுமையுடன் கேட்ட உங்கள் எல்லோருக்கும் தலைவருக்கும் விழா நாயகருக்கும் மேடையில் உள்ள எல்லோருக்கும் என் நன்றிகளைக் கூறி அமர்கின்றேன். வணக்கம்!

இதுவரை மேடையில் உன்னதமாய்... உற்சாகமாய்... ஒலித்தது அவரது குரல்!

அதுவரை காகிதத்தால் பிரமிப்பாய்... பிரமையாய்க் கேட்டதும் அவரது குரல்!!

அவையடக்கமும் அவருக்குத் தெரியும்.
அவையை அடக்கவும் அவருக்குத் தெரியும்.

சுவடுகள் பதிக்கின்றன அவரது உதடுகள்.

ரகஸிய தேவதை அவர் மீது பூமாரி பொழிகின்றாள்.

ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் அபிமான மாணவர் அவர்.

ஒறேற்றர் கனகசபாபதியாக அமோகமாக மலரும் நாட்கள் அதிக தூரத்திலில்லை.


இனிக்க இனிக்க இதயத்தால் பேசும் அவருக்கு என் இதயம் இனிக்கும் வாழ்த்துக்கள்!

தம்மை அலங்கரிக்க, வரும் அவரை வரவேற்க என்றுமே மேடைகள் 'அவர் உயர' மாலைகளுடன் காத்திருக்கும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமான் கனகசபாபதி

பொருளாதார ஸ்திரத்திலும் பரப்பளவிலும் சிறிதாக இருந்தாலும் கல்வியறிவைப் பொறுத்தளவில் வளம் பொருந்திய நாடுகளுடன் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் ஒப்பிடும்போது அறிவறிந் தோரைக் கூடுதலாகப் பெற்றிருக்கின்ற பெருமைக்குரியது ஈழமணித் திருநாடு. அதற்குள்ளும் தமிழர்களின் நிலையை நோக்கும்போது தொண்ணூற்றொன்பது வீதமானோர் எழுத்து விசாரணையுடையோரே. இத்தகைய பெருமிதத்தைத் தமிழினம் அடைவதற்குரிய காரண கர்த்தாக்களாக கடந்த இருநூறு ஆண்டுகளில் பலர் இருந்து வந்திருக்கிறார்கள். திண்ணைப் பள்ளிக் கூடங்கள் நடத்தி தீந்தமிழும் திவ்விய சைவமும் செழிக்கச் செய்திட்ட செந்தமிழ் அறிஞர்களும் கிராமம் கிராமமாகச் சென்று கல்வி மணம் பரப்பிய கிரீஸ்தவ பாதிரிமார்களும் தொடக்கி வைத்த அறிவுப் பணி தமிழ் மண்ணில் ஆண்டாண்டு காலமாகச் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது.



- எஸ். கே. மகேந்திரன் -

இங்ஙனமாக, தொய்வின்றித் தொடரும் கல்விப் புகை வண்டியை யாழ்ப்பாணக் குடா நாட்டில் சாரதித்துவம் செய்த சாதனையாளர்களில் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் முக்கியமானவர். முப்பத்துமூன்று வயதில் அதிபராகக் கடமையேற்றுக் கல்வியுலகில் சாதனை புரிந்த இவர் இன்று மணிவிழாக் காணுகின்றதும் கனடிய மண்ணில் கல்விச் சேவை ஆலோசகராகக் கடமையாற்றுகிறார் என்பதை நோக்கும்போதும் கல்வியும் இவரும் இரண்டறக் கலந்துள்ள தன்மை புலப்படுகின்றது. இனிய வாய்ப்பு எவருக்கும் எளிதில் வரக்கூடிய ஒன்று அல்ல. அந்த அரிதான சரித்திரத்தின் உடைமையாளராக அவர் விளங்குவது பெருமைக்குரியது.

இவரது சிறப்புடைமையின் சிகரமென்ன வென்றால் யாழ்ப்பாணத்தின் இருபெரும் சரித்திரப் பாரம் பரியம் மிக்க கல்லூரிகளின் அதிபராகக் கடமையாற்றிச் சரித்திரம் படைத்தமையே. புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி சைவ மரபைக் கட்டிக் காக்கவென உழைத்த மழவராயர் தோற்றுவித்த கல்விக்கூடம். இக் கல்லூரியில் இவர் கடமையாற்றிய காலை ஒரு சமூகப் பிரக்ஞையுள்ள கல்விமான் என்பதை நிரூபித்தார். அப்பாடசாலையின் படிக்கட்டே ஏறியிராத ஹரிஜனக் குழந்தைகளுக்கு அனுமதி அளித்து அறிவூட்ட அவர் செய்த ஏற்பாடுகள் காலந்தோறும் போற்றப்பட வேண்டியவை. எழுபதுகளில் ஸ்ரீமாவோ அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் புத்தூர், அச்செழு போன்ற கிராமங்களில் ஹரிஜனக் குழந்தைகள் சிலர் பௌத்தர்களாக மாற்றப்பட்டு, புதிதாக உருவாக்கப்பட்ட பௌத்த பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அதற்குரிய மாற்றுத் தாக்குதலை நடத்தி, அன்றைய கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையோடு இணைந்து ஹரிஜனக் குழந்தைகளைத் தன்பால் கவர்ந்த பெருமைக்குரியவர் திரு. கனகசபாபதி. ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைச் சில வேளாளர்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் அப் பாடசாலையின் ஆசிரியராகவும் ஆக்கிச் சாதனை புரிந்தவர் திரு கனகசபாபதி. கல்வியறிவிற் சிறந்திருந்தாலும் போதிப்பதில் தேர்ச்சி பெற்றிருப்பதும் மாத்திரம் ஒரு கல்விமானுக்குரிய குணாம்சங்களல்ல. மனித நேயத்தோடு, சமூகப் பற்றோடும் போதனை வேண்டி நிற்கின்ற சமூகத்தின் வேதனையுணர்வுகளைக் களைபவன்தான் உண்மையான கல்விமான் என்பதற்கு இலக்கணமாக விளங்கியவர் திரு. கனகசபாபதி.

தெல்லிப்பழையில் கல்விப் பணி கண்ட துரையப்பாபிள்ளை அவர்கள் தோற்றுவித்த மகாஜனக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்ற ஆரம்பித்து அக் கல்லூரியின் அதிபராகவுயர்ந்து இன்று கனடாவிலும் அக் கல்லூரியின் சிறப்பை மனதில் நினைந்து மகத்தான பணியாற்றி வருகின்ற இவரது செயற்பாடு ஆசிரிய சமூகத்துக்கே ஒரு முன்னுதாரணமாகும். கல்லூரியை நிர்வகிப்பவர் மாணவர்களின் நலனை மட்டும் கவனிக்க வேண்டியவரல்ல, ஆசிரியர்களின் தேவைப்பாடுகளுக்கும் அவரே ஜவாப்பதாரி என்பதை உணர்ந்து செயற்பட்டு, ஆசிரியர்களின் அலுவல்களுக்காகக் கல்விக் கந்தோரை அணுகிக் காரியமாற்றிய காரியவாதி திரு. கனகசபாபதி அவர்கள். இவரின் இந்த புத்திசாலித்தானமான அணுகு முறையினால் ஆசிரியர்களின் முழு நேரமும் வகுப்பறைகளிலே கழிந்தமையால் 1978ஆம் ஆண்டு மகாஜனக் கல்லூரி மருத்துவத்துறையில் இலங்கையிலே முதல் தரமான பெறுபேறுகளைப் பெற்றுப் பெருமை படைத்தது.

மாணவர்களைச் சாடுகின்ற ஆசிரியர்களைப் பிடிக்காது அவர்களோடு முரண்டு பிடித்து, ஏன் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் தாக்கவும் முற்படுகின்ற பெற்றோர்களைப் பார்தது ''இப்படிச் சண்டித் தனம் செய்ய முற்பட்டால் நானே பாடசாலையை விட்டுப் போய் விடுவேன்'' எனத் தான் பெற்றோரிடம் பெற்றிருந்த அபரிதமான கணிப்பையும் அன்பையும் பணயம் வைத்து ஆசிரியர்களைப் பேணிய பெரும் அதிபர் திரு. கனகசபாபதி. அது மாத்திரமல்ல அதிபராக நிர்வாகம் நடத்திய அதே நேரத்தில் வல்லமை மிக்க விலங்கியல் போதனாசிரியராகவும் செயற்பட்டதன் மூலம் ஆசிரியர்களின் மதிப்புக்கும் மாணவர்களின் அபிமானத்துக்கும் உரியவராக விளங்கிய பேரறிஞர் இவர்.

இன்று கனடாவில் வாழ்கின்ற மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தமது சங்கத்துக்கு இவரையே தொடர்ந்து தலைவராகத் தெரிவு செய்து வருவதும் இவரது சேவையின் விழுமியத்தை விளக்குகின்றது. இன்றும் இவர் மகாஜனா வட்டத்துக்குள்ளேயே நிற்பது இவர் மகாஜனாவின் மீது கொண்டுள்ள நேயத்தை நிதர்சிக்கிறது.

நல்ல மனைவியைக் காலனிடம் பறிகொடுத்து விட்ட நிலையில் நல்லதொரு தகப்பனாகவும் வல்லமை பொருந்திய பொதுநலவாதியாகவும், ஆளுமை மிக்க கல்வி சமூக ஆலோசகராகவும் துலங்குகின்ற இவரது தொடர்பும் உறவும் எனக்கு ஏற்பட்டமையைப் பெறற்கரிய ஒன்றாகவே நான் கருதுவதுண்டு. அரசியல், இலக்கிய, சமயத்துறைகளிலும் போதிய அறிவும் பொறுப்பான சிந்தனையும் கொண்டு இவர் விளங்குகின்றபோதும் கல்வித்துறையைச் சுற்றியே அவரின் கனவுகள் மலர்ந்து கொண்டிருப்பது அவரை ஒரு கண்ணியம் மிக்கக் கல்விமானாக அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றது.

அரசியலை அவதானித்து அவர் மொழியும் கருத்துக்கள் அவரது அரசியல் அறிவைப் பறைசாற்றுகின்றன. இலக்கிய நயங்களை அவர் எடுத்துக் காட்டிப் பேசும்போது அவரது இலக்கிய அறிவு சுடர் விடுகிறது. சமயம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற என் போன்றோரின் கருத்தை அவர் ஏற்கும்போது அவரது சமய அறிவுடைமையின் ஆழம் புலப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போன்று மனிதப் பிரக்ஞை உள்ள கல்விப் பணியை அவர் நாற்பது ஆண்டுகளாக ஆற்றி வருவதால் அவர் சிரஞ்சீவித் தன்மை மிக்க கல்விமானாகிறார்.

இங்ஙனமாக சமூகத்தில் சிறப்பான இடம் வகிக்கின்ற திரு. கனகசபாபதி அவர்கள் இம்மாநிலத்தில் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து சமூகத்துக்கும் தன் குழந்தைகளுக்கும் மேன்மேலும் பயன்படவும் கீர்த்தி பெறவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

# உயர்ந்த மனிதர்

கனடாவிலிருந்து வெளி வரும் வார இதழான 'சூரியன்' பத்திரிகையில் தொடராக எழுதப் பெற்ற 'பிறந்த பதியினும் சிறந்த தொன்றில்லை' எனும் கட்டுரைத் தொடரில் 'காங்கேசன்துறையூர்' சிறப்புப் பற்றிக் குறிப்பிடும்போது '....பல்கலை இரசிகரும், ஆசிரியத் தொழில் மூலம் சிறந்த பணியாற்றியவருமான ஆசிரியர் பொ. கனகசபாபதி இல்லறம் கண்டு சிறந்ததும் எம்மூரே....!' என்று குறிப்பிட்டிருந்தேன். ஆசிரியர் அவர்கட்குப் புகுந்த வழியாலும் எனக்குத் தாய் வழியாலும் காங்கேசன் பதி சொந்தமாயிற்று. சொந்த ஊரில் வாழுங்காலத்தில் ஆசிரியர் அவர்களை எவ்வளவுக்கு அறிந்து வைத்திருந்தேனோ அவ்வளவுக்கு அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதில்லை.

அவருடைய உறவினர்களான என் வயதொத்தவர்கள் எனக்கு நண்பர்கள். நண்பர்களும் சரி அவரிடம் கல்வி பயிலும் மாணாக்கர்களும் சரி ஆசிரியர் பற்றிக் குறிப்பிடும் போது 'கனக்ஸ்' அவர்கள் மிகவும் கண்டிப்பானவர்; சில சமயம் நன்றாக (பிரம்பால்) வெளுத்து வாங்கிவிடுவார் என்று சொல்வார்கள். அவர் கண்டிப்பானவர் என்று அவருடைய தோற்றமே எமக்கு உணர்த்தும். ஊரில் உள்ள உயர்ந்த மனிதர்கள் வெகு சிலரே! நான் இங்கு குறிப்பிடும் உயரம் அல்லது உயர்வு இரு பொருள்படும். தோற்றத்தில் உயரமும், நற்குணங்கள் கொண்டு வாழ்ந்தவர்களுள் உயர்ந்த வருமாகிய ஆசிரியர் கனகசபாபதி அவர்களுடைய சேவை கனடிய தமிழ் சமுதாயத்தால் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

கனகசபாபதி ஆசிரியர் அவர்கள் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் போஷகர்களுள் ஒருவராகவும், இங்கு வாழுங் காலத்தில் பல்வேறு பொதுக் காரியங்களில் ஈடுபட்டுப் பணிபுரியும் சேவையாளராகவும், மகாஜனக் கல்லூரியின் மாண்பு மிகு ஆசானாக விளங்கிக் கல்லூரிப் பழைய மாணவர், ஆசிரியர், பெற்றோர்களுக்கிடையே பாசமிகு உறவை ஊட்டி வளர்த்துக் கடல் கடந்த கல்விப் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிபவராகவும் காட்சியளிக்கும் இப்பெரியாரைப் பற்றி சில குறிப்புகள் எழுதுவது எனக்குக் கிடைத்த பேறு என்று கருதுகிறேன்.

''அறுபது வயதை அடைந்தவர்கள்; அண்மிக்கப் போகிறவர்கள் இங்கு ஏராளமாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் இது போன்று விழா எடுப்பீர்களா? அல்லது நீங்கள் விரும்புபவர்களுக்கு மாத்திரம் விழா நடத்துவீர்களா....?'' என்று ஒரு அன்பர் என்னிடம் வினா தொடுத்தார்.

திருக்குறளிற் சொல்லப்பட்ட ஒரு கருத்தை அவருக்குக் கூறினேன். ஒருவருடைய வாழ்வியலின் பெறுபேறுகளை 'பல்லக்கில் அமர்ந்திருப்பவனையும், அப் பல்லக்கைச் சுமந்து செல்பவர்களையும் ஒப்பீடு செய்து ஆராய்ந்தால் அவரவர்க்குக் கிடைக்க வேண்டிய பாராட்டோ, நன்மையோ உயர்வோ கிடைத்தே தீரும் என்று தெரியவரும். தகுதி யில்லாத ஒருவரைத் தனி யொருவன் தன் விருப்பப்படி பாராட்டலாம்; தூஷிக்கலாம். இது அவனுடைய சொந்த அறிவின் விளைவு.

ஆனால் ''ஊர் கூடித் தேர் இழுப்பதை'' யாரும் தவறென்று மொழியமாட்டார்கள் என்று அவருக்குப் பதிலுரைத்தேன்.



**கே. ரி. சண்முகராஜா**
**தலைவர்**
**கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்**

எம்மூரில் இல்லறம் கண்டு சிறந்தவர் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா! இது வெறும் வார்த்தை யல்ல. இல்லத் தலைவனும், இல்லத் தலைவியும் எவ் விதம் இல்லறம் சிறக்க வாழ்வது நன்று என்று வள்ளுவப் பெருந்தகை வாய்மொழிந்தாரோ அவ்விதம் வாழ்ந்து இல் வாழ்வின் பயன்கண்டு பெருமை படைத்தவர் எனக்குத் தெரிந்த ஆசிரியர் கனக்ஸ் அவர்கள்.

அப்படியொரு அன்னியோன்னியம்; அப்படியொரு புரிந்துணர்வு, 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை'யென இறுமாப்புடன் வாழ்ந்து மற்றவர்களைப் பொறாமை கொள்ள வைத்தவர். வாழ்ந்தால் இவரைப் போலல்லவா நாமும் வாழ வேண்டுமென உதாரண புருஷராக வாழ்ந்தவர். உயரத்தில் மாத்திரமல்ல வாழ்க்கை நெறியிலும் உயர்ந்தவர்.

கலாரசனை மிகப் பெற்றுக் கலைப் படைப்புக்களைத் தந்த கல்கத்தா உயர் மனிதன் சத்தியஜித்ரே போன்று (கல்கத்தாவில் உயரமானவர் யார் என்றால் அமரர். சத்தியஜித்ரேயைத் தான் சொல்வார்கள்) வெறும் உயிரியல் - விலங்கியல் விளக்கவுரை ஆசிரியனாக மாத்திரம் பொழுதைப் போக்காது பல்கலை ரசிகனாக காங்கேசன்துறையூர் வாழ்ந்த உயர்ந்த மனிதன் ஆசிரியர் கனகசபாபதி ஒருவரேதான்!

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தோற்றுவாய்க்கும், செயற்பாடுகளுக்கும் ஆரம்பதிலிருந்து மிக விருப்புடன், அக்கறையுடன் ஆலோசனைகள் வழங்கி ஆதரவு நல்கி வரும் மிகச் சிறந்த 'எழுத்தாளர்' கனக்ஸ் அவர்கள் தன்னை ஒரு எழுத்தாளர் என்று நாங்கள் சொல்வதை அவர் மறுக்கலாம். ஆனால் ஏதாவது இதழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் அவரது சிந்தனை வெளிப்பாடுகள், ஆய்வுகள், விமரிசனங்கள் ஆசிரியர் அவர்களைத் தரமான ஒரு 'எழுத்தாளனாகவே' எமக்கு அறிமுகம் செய்கின்றது.

ஆழ்ந்த வாசிப்பும், இலக்கிய ரசனையும், கலாபூர்வமான கற்பனைத் திறனும் மிகக் கொண்டவர் என்பதை அவ்வப்போது அவருடன் உரையாடும் வாய்ப்புக் கிட்டியபோது நன்குணர்ந்தவன் என்பதால் என்னுள்ளத்தில் அவர் உயர்ந்து நிற்கின்றார்.

சங்க கால இலக்கியம் முதல் இந்நாள் வரை வெளிவந்து கொண்டிருக்கின்ற அல்லது எழுதி வருகின்ற நவீன எழுத்தாளர்கள், படைப்பாளிகள், கவிஞர்கள் உட்பட யாவரைப் பற்றியும் அவருடன் சம்பாஷிக்கலாம்.

தமிழ் சினிமாவின் சகல பரிமாணங்களையும் விமர்சிக்கக்கூடிய ஆற்றல் மிகப் பெற்ற கலைத் திறன் படைத்தவரை இங்குள்ள பத்திரிகைகள் அடையாளம் காணத் தவறியதேனோ! பல பெரியார்களுடன் பழகியிருக்கிறார்; பல கலைஞர்களைத் தெரிந்து வைத்துள்ளார்; பல அரசியல் பிரமுகர்களுடன் (தமிழகம் உட்பட) பழகி வாழ்ந்தவர்; பொதுவுடைமைக் கொள்கைகளால் கவரப்பட்டவர்; பள்ளி ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் வாழும் கனடியத் தமிழர்களுக்குள்ளே தொடர்ந்தும் பொதுப் பணி ஆற்றியும் - அறிவுரை வழங்கியும் - எழுத்துப் பணியில் இயங்கியும் - நாட்டு விடுதலையில் அக்கறை கொண்டும் - பல்வேறு நாடுகளில் வாழும் 'மகாஜனங்களை' ஒன்றிணைத்து இயக்கியும் மீண்டும் ஒரு ஆசிரியப் பெருந்தகையாக வலம் வந்து வாழும் எங்கள் ஆசிரியர் உயர்ந்த மனிதர் என்று வாயரா வாழ்த்துகிறேன்.

***வாழ்க பல்லாண்டு!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் தமிழ்க் கல்வியும் கனகசபாபதியும்

**- இ. வே. செல்வரத்னம் -**

தாயகத்தில், ஐம்பதுகளில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆசிரியராக நான் கடமையாற்றிய காலந்தொட்டு, வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத்தின் தொண்டமன்னார் ஏரிபற்றிய நீர் உயிரியல் ஆய்வு, பாடசாலை மாணவர்களுக்கான வெளிக்கள செயற்பாடுகள், விஞ்ஞான பாடங்களுக்கான பொதுப் பரீட்சைகள் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டதன் காரணமாக திரு. பொ. கனகசபாபதி அவர்களை ஒரு விஞ்ஞான ஆசிரியராகவும், குறிப்பாக உயிரியல் விஞ்ஞான ஆசிரியராகவும் பின்னர் எழுபதுகளின் பிற்பகுதியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, அதைத் தொடர்ந்து மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும் அறிந்த எனக்கு, இங்கே கனடாவில் ஒன்ராறியோ ஆசிரியத்தகைமைச் சான்றிதழைப் பெறுவதற்காகப் பாட நெறியிற் சேர்ந்து படிக்கவும் அதைத் தொடர்ந்து தமிழ் மொழிக் கல்வியைக் குறிப்பாக தமிழ் மொழியில் திறமைச்சித்திப் பாடநெறி வகுப்புக்களை ரொறன்ரோ பெரும் பாகத்திலுள்ள கல்விச்சபைகள் ஆரம்பிக்கவும், பொதுவாக தமிழ்மொழிக் கல்வியை எமது மாணவர்களிடையேயும் சமூகத்திடையேயும் பரப்பவும் ஊக்குவிக்கவும் எடுத்த முயற்சிகளில் இவருடன் சேர்ந்து பாடுபடவும் கிடைத்த சந்தர்பங்களையிட்டு களிப்புறுகின்றேன், பெருமைப்படுகின்றேன்.

இவர் தாயகத்தில் ஆசிரியராகவும் அதிப ராகவும் இருந்து மாணவர்கள் பெற்றோர்கள் பற்றிப் பெற்றுக் கொண்ட பல்வித அறிவும் அனுபவமும், இங்கே அவருக்கேற்ற பிடித்தமான பல்கலாச்சாரக் கல்வி அலோசகர் பதவியையும், தமிழ்க்கல்விக்கான இணைப்பாளர் பதவியையும் பெற்றுக் கொடுத் திருக்கின்றனவென்றே கூற வேண்டும்.

இப்பதவிகளை ரொறன்ரோ பெரும் பாகத்திலுள்ள மிகப்பெரிய கல்விச்சபையாகிய நோத்யோக் கல்விச்சபையே வழங்கியுள்ளது. நோத்யோக் கல்விச்சபையின் இச்செயல், பொதுவில், பல்கலாச்சாரக் கல்வித் தேவைகளில் அதன் அக்கறையையும் அதன் ஈடுபாட்டையும் காட்டு வதாயுள்ளது. நோத்யோக் கல்விச்சபையின் எமது சமூகத்திற்கான பல் கலாச்சாரக் கல்வித் திட்டங்களைக் கருதுமிடத்து பல் கலாச்சாரக் கல்வி ஆலோசகர் என்ற ரீதியில் இவரின் அறிக்கைகளும் சிபார்சுகளும் முக்கியம் வாய்ந்தன. இவரின் எழுத்துக்களும் பேச்சுக்களும், எமது சமூகத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்குமான கல்வி, ஒழுக்கம் சம்பந்தமான அறிவுரைகளாகவே அமைகின்றன என்பதை நாம் அவதானிக்கக் கூடியதாயிருகின்றது. இவர் மாதாமாதம் ''தமிழர் தகவல்'' சஞ்சிகையில் எழுதும் கட்டுரைகளும், பாடசாலை, கல்லூரி தமிழ் மாணவர் மன்றங்களின் கூட்டங்களிலும் கலைவிழாக்களிலும் இவர் நிகழ்த்தும் பேச்சுரைகளும் இதற்கு சான்று பகர்ந்து நிற்கின்றன.

பல்கலாச்சார கல்விச் சேவையைப் பொறுத்த வரையில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் நோத்யோக் கல்விச் சபையே முன்னோடியாக இருக்கின்றது என்று கூறின் அது மிகையாகாது. அந்த வகையில் நோத்யோக் கல்விச் சபைதான் எண்பதுகளின் ஆரம்பத்தில், ஆரம்ப நிலைப் பள்ளிகளில் படித்த எமது மாணவர்கள் தங்கள் தாய்மொழியாம் தமிழைக் கற்பதுடன், அதன் பாரம்பரிய மொழிக் கல்வித் திட்டத்தின்கீழ், முதல்முதல் தமிழ் வகுப்பை ஆரம்பித்ததென அறியக் கிடக்கின்றது. இதைத் தொடர்ந்து, எண்பதுகளின் முடிவில் அகதி நிலை கோரி குடியேறிய எமது சமூகத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்போடு, ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள மற்றைய கல்விச் சபைகளும் இவ்வகுப்புக்களை ஆரம்பிக்கத் தொடங்கின.

1990இல் இவர் நோத்யோக் கல்விச் சபையினால் எமது மாணவர்களின் கலாச்சாரம் சம்பந்தமான கல்விப் பிரச்சனைகளையும் தேவைகளையும் மதிப்பீடு செய்து கல்விச் சபைக்கு அறிக்கைகளும் ஆலோசனைகளும் வழங்குவதற்கென,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி நேர பல் கலாச்சார கல்விச் சேவை ஆலோசராக நியமிக்கப்பட்டார். இவர் தாயகத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் சேவை செய்ததன் காரணமாக மாணவர்களின் பல்வேறுபட்ட பிரச்சனைகளை அறிந்து அவற்றை விடுவிப்பதில் ஏற்பட்ட அறிவும் அனுபவமுமே, அவருக்கு இந்நியமனத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை அளித்தன என்று கூறின் அது மிகையாகாது. நோத்யோக் கல்விச் சபையில் பல்கலாச்சாரக் கல்விச் சேவை ஆலோசகராக இவர் ஆற்றி வந்த சேவையை அறிந்த ரொறன்ரோ, கீழ் யோக் கல்விச் சபைகள் தங்கள் பல் கலாச்சாரக் கல்விக் கருத்தரங்குகளில் இவரை எமது சமூகத்தின் சார்பில் கருத்துரைகள் வழங்கப் பயன் படுத்தாமலில்லை.

நோத்யோக் கல்விச் சபையின் பல் கலாச்சாரக் கல்விச் சேவையில் ஈடுபட்டதன் காரணமாக, எமது மாணவர்கள் நோத்யோக் பாடசாலைகளில் கணிசமான எண்ணிக்கையிற் படிக்கின்றார்கள் என்பதையும் அவர்களின் தமிழ் மொழிக் கல்வியின் அவசியத்தையும் உணர்ந்து, அவற்றைக் கல்விச் சபையின் கவனத்திற்குத் தனது அறிக்கைகள் மூலம் கொண்டுவந்ததன் பலனாக, 1990இல் எமது ஆரம்பநிலைப் பள்ளி மாணவர்கள் தமிழ்மொழிக் கல்வியைப் பெறுவதற்கான பாடசாலை நிலையங்களின் எண்ணிக்கை ஆரம்பத்தில் ஒன்றாகவிருந்து இன்று எட்டாக அதிகரித்துள்ளது. இதைப் பின்பற்றி ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள மற்றைய கல்விச்சபைகளும் எமது சமூகப் பிள்ளைகள் தமிழ்மொழிக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகளையும் பாடசாலைகளையும் அதிகரித்துள்ளன. இன்று ரொறன்ரோ பெரும்பாகத்தில் மொத்தமாக 33 பாடசாலை நிலையங்களில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆரம்பநிலைப் பள்ளி மணவர்கள் 75 ஆசிரியர்களால் தமிழ்மொழி கற்பிக்கப் படுகின்றார்கள். இதற்கெல்லாம் முன்னோடியாக இருந்த நோத்யோக் கல்விச் சபையில் இவர் போன்ற கல்வியாளர் ஒருவர் பல்கலாச்சார கல்விச் சேவை ஆலோசகராயிருந்து மொழி சமூக பிரக்ஞையுடன் கடமையாற்றியதே முக்கிய காரணமென்று கூறின் அது மிகையாகாது. அவர் எமது சமூகத்து மாணவர்களின் மொழி பழக்க வழக்க நடத்தை ஆகியவற்றின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு சேவையாற்றியதை அவதானித்த கல்விச் சபை அவரது பகுதி நேர நியமனத்தை சென்ற வருடந் தொடக்கம் முழு நேர நியமனமாக்கி அவரின் சேவைளைப் பாராட்டியுள்ளது. இது எமது சமூகத்திற்குக் கிடைத்த அங்கீகாரமும் கௌரவமுமென்றே கூற வேண்டும்.

ஆரம்ப நிலைப் பள்ளி மாணவர்களுக்கான தமிழ் மொழிக் கல்வி வகுப்புக்கள் ரொறன்ரோ பெரும்பாகத்தில் பல கல்விச் சபைகளால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகையில், இவர் எமது இடை நிலைப் பள்ளி மாணவர்களின் தமிழ்மொழிக் கல்வி பற்றி சிந்திக்கலானார். அதன் விளைவாக இவரது வேண்டுகோளையேற்று, நோத்யோக் கல்விச் சபை தனது தொடர் கல்வித் திட்டத்தின் கீழ் 1991இல் இடை நிலைப் பள்ளி மாணவர்களுக்கான 10ஆந் தர வகுப்பு இவரை ஆசிரியராகக் கொண்டு விக்டோரியாப் பாக் இடை நிலைப் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டு சனிக்கிழமைகள் தோறும் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்தே பீல், எற்றோபிக்கோ, ரொறன்ரோ போன்ற கல்விச் சபைகள் தமிழ்மொழியை இடைநிலைப் பள்ளி மாணவர்கள் கற்பதற்கான திறமைச் சித்திப் பாடநெறி வகுப்புக்களை ஆரம்பித்தன. இக்கல்விச் சபைகளில் இவ்வகுக்புக்களை ஆரம்பிக்க முயற்சியெடுத்தவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்க ளாயிருந்தாலும், இப்பெருமுயற்சிக்கு அடிகோலியவர் மணிவிழாக்காணும் இப்பெரியவரே.

இவ்வருடம் ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள ஐந்து கல்விச் சபைகளால் எட்டுப் பாடசாலை நிலையங்களில் நடத்தப்பட்ட தமிழ்மொழிக்கான திறமைச் சித்திப் பாட நெறி வகுப்புக்களில் சுமார் 400 தமிழ் மாணவர்கள் சேர்ந்து படித்தார்களென்றும், தமிழைக் கற்றுக் கொடுக்க மொத்தமாக 15 ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்களென்றும் அறியக் கிடக்கின்றது. ஒன்ராறியோ மாகாண அரசாலும், ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள கல்விச்சகைகளாலும் எமது மொழிக்களிக்கப்பட்ட அங்கீகாரமும், அதை எமது மாணவர்கள் கற்பதற்கென அளிக்கப்பட்ட ஆக்கமும், ஊக்கமும் புலம்பெயர்ந்த எமக்கு உவகை அளிக்காமிலிருக்க முடியாது. அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வரலாற்றில், ஒன்ராறியோ மாகாண அரசினதும், ரொறன்ரோ பெரும்பாகக் கல்விச் சபைகளினதும் குறிப்பாக நோத்யோக் கல்விச் சபையினதும் தமிழ்ச் சமூகம் சம்பந்தமான பல்கலாச்சாரச் செயல் திட்டங்களுக்குக் காலாயிருந்த இவரது சேவை ஒரு அத்தியாயத்தை வகிக்குமென்பது திண்ணம்.

தாயகத்தில் உயிரியல் கற்பித்தவர், இங்கே தமிழ் மொழி கற்பிக்கின்றார். இச்சேவையை எமது சமூகத்திற்குக் குறிப்பாக எமது இளைய தலைமுறையினருக்குத் தொடர்ந்தும் ஆற்றும் பணியாக எல்லாப் பலமும் அவருக்குக் கிடைக்க வேண்டுமென்று மணிவிழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் வாழத்துகிறேன்.

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

- திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமே பொற்காலந்தான்

வசந்தா நடராஜா
ஆசிரியை, ஸ்கந்தா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பொன்னையா கனகசபாபதி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியைச் சண்டிலிப்பாய் வடக்குத் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பின்னர் சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலை (தற்போதய இந்து மகா வித்தியாலயம்)யிலும் கற்றார். தமது உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்றார். கல்வியிலும் பொது விடயங்களை நிர்வகிப்பதிலும் மிகவும் திறமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார்.

இளமையில் அவர் கல்வி கற்று வருகின்ற காலத்தில் தனது நண்பர்களோடு இணைந்து சண்டிலிப்பாய் இந்து வாலிப சங்கத்தை உருவாக்கியதுடன் அச்சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றினார். அக் காலத்தில் சண்டிலிப்பாய் இந்து வாலிப சங்கத்தினர் விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி முதலியவற்றை வருடம் தோறும் நடத்தியதுடன் அடிக்கடி கலை நிகழ்ச்சிகளும் நடத்தினர். அச்சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் இவரது பங்கு மிகவும் கூடுதலாக இருந்தது.

அக்காலத்திலேதான் சண்டிலிப்பாய் இந்து வாலிப சங்கத்தினர் சண்டிலிப்பாய் சன சமூக நியைம், சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு பொது நிர்வாகங்களுடன் இணைந்து சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்னால் இருந்த காணியை விலைக்கு வாங்கி மேற்கூறிய நிறுவனங்களின் செயற்பாட்டிற்காக நிரந்தரமான ஒரு கட்டிடத்தை கட்டினார்கள். இன்றும் அக்கட்டிடம் நன்கு பராமரிக்கப் பட்டு வருகின்றது.

1951இல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தனது கல்வியைப் பூர்த்தி செய்த பின்பு பட்டப் படிப்பிற்காக சென்னை கிறிஸ்தவக் கல்லூரிக்குச் சென்றார். அங்கு அவர் விஞ்ஞானக் கல்வி கற்று B. Sc (Hons) பட்டம் பெற்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பின் இவர் ஆசிரியராகப் பணி ஆற்றத் தொடங்கினார்.

இவரது திறமையை மெச்சிய அரசாங்கத்தினர் இவரை ஏழாலை இந்து மகா வித்தியாலயத்திற்கும் அதன் பின்னர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கும் அதிபராக நியமித்தனர். இக்கல்லூரிகளில் திறமையான அதிபராகச் செயற்பட்ட இவரை பின்னர் மகாஜனக் கல்லூரியின் அதிபராக நியமித்தனர். இவர் மகாஜனக் கல்லூரியில் சேவையாற்றிய காலம் மகாஜனக் கல்லூரியின் பொற் காலமாகும். அக்காலத்திலேதான் மகாஜனக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஓர் புகழ்பெற்ற கல்லூரியாக விளங்கியது. இக்கல்லூரியின் மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் திறமையுடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டுறவு இல்லத்தின் நூல்நிலைய அதிபர்

தமிழர் கூட்டுறவு இல்லம் 1988ஆம் ஆண்டு Bloor and Lansdowneஇல் இடம்பெயர்ந்து வந்த தமிழ் மக்கள் குடியிருப்பதற்காகத் தாபிக்கப்பட்டது. மேற்குத் தேசத்திலே இவ் இல்லம் தனித்துவம் பெற்றதென்றே கூறலாம்.

1988ஆம் ஆண்டு திரு. கனகசபாபதி அவர்களும் குடும்பத்துடன் இவ் இல்லத்தில் வசிப்பதற்குக் குடியேறினார். இவர் ஒரு சிறந்த கல்விமான். யாழ்ப்பாண மகாஜனக் கல்லூரி அதிபராகப் பல ஆண்டுகள் கடமையாற்றியவர்.

1989ம் ஆண்டிற்குரிய இயக்குநர் சபை ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்து, அதனை நடத்தும் பொறுப்பை அறிவும், ஆற்றலும், பொறுப்புணர்ச்சியும், புத்தகப் பூச்சியுமாகிய திரு. கனகசபாபதி அவர்களிடம் ஒப்படைத்தது. அவர் இப் பொறுப்பை மகிழ்ச்சியோடு கையேற்று 1994ஆம் ஆண்டு வரை நடத்தி வந்தார். இந்த 5 வருட காலத்தில் நூல் நிலைய வளர்ச்சியைக் கூட்டுறவு அங்கத்தவர்களும், மற்றும் பொது மக்களும் ஆழ்ந்த திருப்தியோடு அனுபவித்தார்கள்.

இக்காலத்தில் இவர் தமிழ் ஆங்கில மொழிகளில் சஞ்சிகை, பத்திரிகை முதலியவற்றை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வருவித்தார். இலக்கிய நூல்களையும், சமயம், வரலாறு சார்ந்த புத்தகங்களையும் வருவித்தார். இப்புத்தகங்களை வைத்து எடுக்கத் தளபாடம் அவசியம். இவரே பொறுப்பாக நின்று பொருத்தமான தளபாடங்களைக் குறுகிய காலத்தில் செய்வித்து முடித்தார். தனது நிர்வாக நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி ஒரு நிலையக் குழுவை அமைத்து வாரத்தில் இரண்டு நாட்கள் புத்தகங்களை எடுத்துச் செல்லும் வசதியையும் சந்தர்ப்பத்தையும் மக்களுக்குக் கொடுத்தார். கூட்டுறவு இல்ல மக்களுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் இந்த வசதியை கொடுக்க வேண்டுமென்று வாதாடி வெற்றி பெற்றார்.

இப்படிப் பல மணித்தியாலங்களை விரும்பித் தன்னிச்சையாக இந்நூல் நிலையத்துக்குச் செலவழித்த திரு. கனகசபாபதி அவர்கள் 1994ஆம் ஆண்டு தமிழர் கூட்டுறவு இல்லத்தைவிட்டுச் செல்ல வேண்டிய நாள் வந்தது. இந்த இழப்பைச் சொல்லித்தான் தெரிய வெண்டுமா? எங்கள் கட்டிடத்தில் முன்னாள் மகாஜன அதிபர் வசிக்கிறார் என்று பெருமையுடன் சொல்லி வந்தோம். ஒரு சிறந்த நூல் நிலையம் நடாத்துகிறார் என்றும் கூறி வந்தோம்.

இப்பெரியாரின் இடத்தை நிரப்பும் வழி என்ன என்று எங்கள் கவலையை அவரிடம் தெரிவித்த பொழுது, அவர் கொடுத்த விடை தான் இல்லத்தை விட்டு விலகுவதால் பெரும் இழப்பை அடைவதாகக் கூறினார். ஏனெனில், அவர் ஒரு தீவிர வாசிப்பாளர். நூல் நிலையத்தில் வேண்டிய புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் எடுத்து வாசிக்கும் சந்தர்ப்பம் இருந்தது. அத்தொகையான நூல்கள் எல்லாவற்றையும் தனக்கு விலைக்கு வாங்கி வாசிக்கும் வசதி இல்லை என்றார்.

திரு. கனகசபாபதியின் ஊக்கத்தினாலும் விடா முயற்சியினாலும் இன்று எமது நூல் நிலையம் விருத்தி பெற்றுக் காட்சியளிக்கின்றது. ''கடமையைச் செய். பலனை எதிர்பாராதே'' என்ற கூற்றின் அடிப்படையில் இவர் இயங்கி வந்தார். பணத்தைக் கூட்டுறவு இல்லம் செலவளித்தது. ஆனால் அதுவல்ல முக்கியம். இயக்குநருக்கு ஒரு கருவி வேண்டும். அதுதான் இந்தப் பெரியார் செய்த தொண்டாகும்.

தமிழர் கூட்டுறவு இல்ல மக்கள் திரு. கனகசபாபதி அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளார்கள்.

இப்படியான சேவை மனப்பான்மை கொண்ட ஒருவருக்கு தமிழ் மக்கள் ஒன்று கூடி மணி விழா எடுப்பதையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்.



**திருமதி மணி பத்மராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகசபாபதி அவர்களின் முற்போக்குச் சிந்தனைகள்

என் பெருமதிப்புக்குரிய அதிபர் கனகசபாபதி அவர்களுக்கு மணிவிழா!

அதிபர் பாராட்டுக்குரியவர்! நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவர்.

ஏனெனில்,

ஈழத்துக் கல்வியியல் வரலாற்றில் தனது தனித்துவத்தை நிலை நிறுத்தியது மட்டுமல்லாது, கல்வியின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் வித்திட்டு நின்ற ஒரு கல்விமான்.

நாளைய சந்ததியாகிய மாணவ சமுதாயம் கட்டுக்கோப்பான - சக்திமிக்க - தார்மீக நேர்மையுள்ள சமுதாயமாக வளர வேண்டும் என்பதற்காகக் கண்டிப்பும் கடமையுணர்வும் கொண்ட அதிபர் என்று பெயர் பெற்றவர் அவர்.

சிறந்த கொள்கைகள், முற்போக்குச் சிந்தனை கொண்ட கருத்துக்கள் என்று தான் நம்பிய அரசியல் கொள்கைகளை ஏற்று ஆரம்பம் முதல் இன்றுவரை அதனோடு ஐக்கியப்பட்டுக் கொண்ட ஒரு அரசியல்வாதி அவர்.

தமிழ்ச் சமூகத்தின் கேவலமான - நியாயப்படுத்த முடியாத - தமிழினத்தை வேரறுத்துக் கொண்டிருக்கும் உடன் பிறந்தே கொல்லும் வியாதியான - தீராத தொழுநோயாகி விட்ட சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த ஒரு முற்போக்குவாதியாக மட்டுமன்றி, அதற்காக முன்னின்று போராடிய சத்திய ஆவேசம் கொண்ட போராளியும் அவர்.

இன்னும் எத்தனையோ கருத்துக்களையும், ஆக்க பூர்வமான சிந்தனைகளையும் கொண்டு நடமாடும் பல்கலைக்கழகமாகக் காட்சி தரும் அதிபர் கனகசபாபதி அவர்களைப் பலர் பல கோணங்களில் தரிசித்திருக்கலாம்.

ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக அவரோடு பழகியவன் என்ற வகையில் அவருடைய எண்ணங்கள், சிந்தனைகள், நோக்குகள் என்பவற்றை முழுமையாக அறியாவிட்டாலும், நான் அறிந்த - அவரில் காணப்பட்ட சில முற்போக்குச் சிந்தனைகளைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

### முற்போக்கு எண்ணம் கொண்ட அரசியல்வாதி:

அரசியல் கருத்துக்களைப் பொறுத்தவரையில் அதிபர் அவர்கள் ஒரு முற்போக்குச் சிந்தனாவாதியாகவே காட்சி தருகிறார். ஆரம்ப கால கட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளனாகச் செயற்பட்டவர். அந்தக் கால கட்டத்தில் அவர் வாழ்ந்த பகுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம், தீவிர இடதுசாரிக் கருத்துக்களைக் கொண்ட இளம் புயலெனப் புறப்பட்ட தோழர் வி.பி. போன்றோர் இடதுசாரிக் கருத்துக்களையும், சமூக ஒடுக்கு முறைக்கு எதிரான செயற்பாடுகளையும் தீவிரப்படுத்தி மாணவ சமுதாயத்தின் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருந்த காலம். அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் இவரிடம் அடிக்கடி கூறுவாராம் 'தம்பி கனகசபாபதி நீர் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குள் போனால்தான் எமது கட்சி பலம் பெறும்' என்று. ஆனால் அதிபர் அவர்களுடைய எண்ணங்களோ வேறுவிதமான சிந்தனையில் இருந்தது. தமிழரசுக் கட்சி இன உரிமை பற்றி ஓங்கிப் பேசுகின்ற அளவுக்கு எமது இனத்தின் மத்தியில் உள்ள சமூகக் குறைபாடுகளைப் பற்றி - மனிதனை மனிதாக நினைப்பது பற்றிக் குரல் கொடுக்கிறது இல்லையே. இதற்கு முதலில் முடிவு கட்ட வேண்டும் என்ற சிந்தனையோடு தமிழரசுக் கட்சியில் இருந்து ஒதுங்கி எமது நாட்டில் தேசிய இனங்களான தமிழ் - சிங்கள மக்களிடையே ஐக்கிய பாலத்தை அமைப்பதற்கும், அதைப் பேணிக் காப்பதற்கும் தமது அறிவையும் ஆற்றலையும் அர்ப்பணித்து வந்த வட இலங்கை முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட தோழர்களான ஹன்டி பேரின்பநாயகம், ஒறேற்றர் சுப்பிரமணியம், தோழர் வி.பி. போன்றோரோடு நட்புறவு கொண்டு செயற்பட்டார்.

மனிதத்துவத்தை மதிப்பதும் மனித சமுதாயத்தை நேசிப்பதும் தனது எண்ணத்தாலும் செயலாலும் மாணவ சமுதாயத்தின் மத்தியில் இருந்து ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வரவெண்டும் என்று துடித்தார்.

### முற்போக்குச் சிந்தனை கொண்ட அதிபர்:

இவர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு அதிபராகப் பிரவேசித்த காலம், சாதித்திமிரும் அதிகார பலமும் கொண்டவர்கள் கையில் அக்கல்லூரி இருந்தது. ஒடுக்கப்பட்ட - பின்தள்ளப்பட்ட ஜாதி மாணவர்கள் அந்தக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்க முடியாதது மட்டுமல்ல, கல்லூரி வளவிற்குள்ளேயே காலடி வைக்க முடியாது என்று இருந்த வேளையிலேதான் நிமிர்ந்த நெஞ்சுடனும் நேர்மை கொண்ட பார்வையுடனும் தெளிந்த நற் சிந்தனைகளுடனும் தன் மனத்திலே உறங்கிக் கிடந்த எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார் அதிபர் அவர்கள்.

அதிபர் பொறுப்பேற்ற சில மாதங்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்ளைக் கல்லூரியில் சேர்த்தார். சேர்த்துக் கொண்டது மட்டுமன்றி உயர் ஜாதியின் பிள்ளைகள் என்று 'தடிப்போடு' இருந்தவர்களோடு சரிசமமாக வைத்துப் பாடங்களைப் போதிக்கும் நிலையையும் ஏற்படுத்தினார்.

திரண்டது உயர் ஜாதிச் சேனை. அதிபர் அவர்கள் கலங்க வில்லை. மாறாக 'அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற உன்னத கோட்பாட்டோடு நின்றார். அதேவேளை, கல்லூரியும் கல்வி வளர்ச்சியில் சாதனை படைக்கத் தொடங்கியது. அதிபரை அடி பணிய வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவ சமுதாயம் மீது தங்கள் வீரத்தைக் காட்டத் தொடங்கினார்கள். மாணவர்களைக் கல்லூரிக்குச் செல்லவிடாது அடவாடித் தனங்களில் இறங்கினார்கள். பயம் காரணமாக மாணவர் வரவு குறைந்தது. எக்காளமிட்டனர் சாதித்திமிர் பிடித்தோர். அவர்களது கொட்டம் அடக்க அதிபர் அவர்கள் அதிரடி நடவடிக்கையில் இறங்கினார். அதாவது தாழ்த்தப்பட்ட சமூகத்தில் உள்ள ஆசிரியர் ஒருவரைத் தனது கல்லூரிக்கு ஆசிரியராக நியமனம் செய்தார். ஆனால் அந்த ஆசிரியரோ தயங்கி நின்றார்.

ஆனால் அதிபர் அவர்கள் விடவில்லை. தனது காரிலே அவரது வீடு தேடிச் சென்று எற்றிக் கொண்டு வந்து படிப்பிக்க வைத்தார். இந்தச் சம்பவத்தை இன்றும் கூட அவர் அடக்கத்தோடு, ஆனால் பெருமையாகச் சொல்லுவார். 'புத்தூர் சோமஸ்கந்தாவில் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் படிக்க வைத்து ஒரு தாழ்த்தப்பட்ட ஆசிரியரை நியமித்து அந்தக் கல்லூரியில் இருந்து சமூக ஒடுக்குமுறையை விரட்டியது கனகசபாபதிதான்' என்பார்.

இதேபோன்று இன்னுமொரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் அதிபராக இருந்த நேரம் - உயர் வகுப்பு அனுமதிகளுக்குக் கல்வி இலாகாவில் இருந்து அனுமதிக் கடிதம் பெற்று வரவேண்டிய தேவை ஒன்று இருந்தது. கல்வி இலாகாவில் யாரையும் தெரியாத ஒரு மாணவர் நேரடியாக அதிபரிடம் வந்து தனக்குப் படிக்க அனுமதி தரும்படி கேட்கிறான். அதிபர் அவர்கள் கல்வி இலாகா அனுமதி வேண்டும். என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறுகிறார். மாணவன் விரக்தியின் எல்லையில் நின்று சொன்னானாம் 'சேர் எனக்கு யாரையும் தெரியாது. நான் படிக்க ஆசைப்படுகிறேன். நீங்கள் அனுமதி தராவிட்டால் நான் கிளிநொச்சிக்குப் போய் சீவல்தொழிலைச் செய்யப் போகிறேன்' என்று. உடனேயே அதிபர் அவர்கள் தனக்கேயுரித்தான குரலில் 'உனக்கு அட்மிஷன் தருகிறேன். எனக்கு தொழில் போனாலும் பரவாயில்லை. நீ படித்து உனது சமுதாயத்துக்குப் பங்காற்ற வேண்டும்' என்று கூறி அனுமதி கொடுத்தார். இங்கேதான் அவர் தன் இதயத்தில் ஏற்றி வைத்திருக்கின்ற இலட்சியத்திற்கு ஒளியூட்டி நின்றார்.

### மூட நம்பிக்கையை உடைத்தெறிபவர்:

அதிபர் அவர்கள் சென்னையில் படிக்கின்ற காலங்களில் தீவிர தி.மு.க. ஆதரவாளராகத் திகழ்ந்தவர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் மு.க. போன்றோரது பகுத்தறிவுக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர். வெறும் வாய்ச்சொல்லில் பகுத்தறிவும் மனத்தளவில் ஆண்டவனை மண்டியிடும் மனப்பாங்கும் அற்றவர் அவர்.

'ஆடவன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கை கொடுத்து வாழ்வதே' பாரதி கண்ட புதுமைப் பெண். அந்தப் புதுமைப் பெண்ணாக வாழ்ந்தவர் அதிபர் அவர்களுடைய துணைவியார். அவர் மரணத்தைத் தழுவிய பின் அவருடைய 'அஸ்தி'யை ஒரு பேழையில் போட்டு தன் குழந்தைகள் வணங்கும் தெய்வப் படங்களுக்குப் பக்கத்தில் வைத்து அதனை வழிபடுங்கள் என்று தன் பிள்ளைகளுக்குக் கூறியிருக்கிறார்.

பெற்ற தாய், தகப்பன்மார் அமரத்துவமடைந்து நீறாகி விட்டால் அந்த அஸ்தியை 31 நாட்கள் வீடுகளிலே கொண்டு வந்து வைக்கப் பயந்து 'கார் றங்'களிலும் தபாற் கந்தோரில் Box எடுத்து அதற்குள்ளும் வைத்து விட்டுப் பெயருக்காகவும் புகழுக்காகவும் பிரமாதமாகப் பத்திரிகைகளில் நினைவாஞ்சலி பிரசுரிக்கின்ற இந்த உலகில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை' என்ற எமது ஆன்றோர் செப்பிய வாக்கை எதிர்காலச் சந்ததியினராகிய தன்னுடைய குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டும். தாயைத் தெய்வமாகக் கண்ட பரம்பரையின் வம்சங்கள் நாங்கள் என்பதை உணர்த்தி நிற்பவர் அதிபர் அவர்கள்.

### சமயச் சடங்குகள் சீர்திருத்தம் பெற வேண்டும்:

எமது இந்து சமயச் சடங்குகள் குறிப்பாக திருமணச் சடங்குகள், பூப்புனித நீராட்டுச் சடங்குள் என்பன மாற்றம் காணப்பட வேண்டும் என்பதில் அதிபர் அவர்கள் அக்கறை கொண்டவர். எமது திருமணச் சடங்கின் போது அதிக நேரம் எடுத்து வேதியர் பிரசங்கம் வைப்பது, பண்டைத் தமிழன் திருமணத்தில் இல்லாததும் இன்று கட்டாயம் என்று கூறக் கூடியளவுக்கு வந்துவிட்ட கேக் வெட்டல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதிலும் சுப நேரம் பார்த்து காரியம் ஆக வேண்டும் என்று விட்டு வீடியோக்காரர், படப்பிடிப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்காகத் தாமதிப்பது போன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதிலும் உறுதியான நம்பிக்கை உள்ளவர்.

### இறை நம்பிக்கை அற்றவர் ஆலயத்தில் நிற்கலாமா?

கடவுள் மேல் பக்தியற்ற அதிபர் அவர்களை ஒரு நாள் ஆலயத்தில் கண்டேன். ஆம்! தமிழின விடுதலைக்காகக் கடந்த நாற்பது ஆண்டுகள் உழைத்ததற்காகத் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி விட்ட மாமனிதர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களுடைய சிரார்த்த தினம் அன்று. இறைவன் மேல் நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுமல்ல பட்டம், பதவிகளுக்காக அமுதரின் பின்னால் நின்றவர்கள் கூட ஆலயத்திற்கு வராமல் ஒதுங்கிக் கொண்ட நேரத்தல் நம்பிக்கையில்லாத இவர் பிரார்த்தனைக்கு வந்திருக்கிறாரே என்று நான் ஆச்சரியப்பட்டேன். என் ஆச்சரியத்தைக் கேட்டேன். அவர் சொன்னார் 'எனக்கு கடவுள் மேல் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ எங்கள் மண்ணில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து மண்ணின் விடுதலைக்காக, மக்களின் விடிவுக்காக 40 ஆண்டுகள் தன்னலம் கருதாது உழைத்த ஒரு தலைவனுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் போது அதில் நானும் கலந்து கொள்வதில் என்ன தவறு?' என்று கூறிய போது தத்துவங்களையும் சம்பிராதாயங்களையும் மீறி ஒரு மனிதனாக மனிதத்தை நேசிக்கும் மாண்புறு மகனாக நின்ற அவர் என் மனத்தில் மேலும் ஒரு படி உயர்ந்து நிற்கின்றார்.

### தமிழ்த் தேசியவாதக் கருத்துக் கொண்டவரா:

அதிபர் அவர்கள் சமதர்ம சித்தாந்தவாதியாக, இன ஒடுக்கல் கொள்கைகளை எதிர்க்கும் ஒருவராக விளங்கினாலும்கூட இன்றைக்குத் தமிழ்த் தேசியத்தின் குரல்வளை மீது சிங்களப் பேரினவாதம் தன்னுடைய கொடுங் கரங்களைப் பதித்திருப்பதை உணர்ந்து தமிழ்த் தேசியம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். அதற்காக தமிழ் வெறியராகவோ அல்லது இனத்துவேசம் நிறைந்த மனிதனாகவோ அவர் காட்சி கொடுப்பதில்லை. தமிழ்த் தேசியத்தின் ஒட்டு மொத்தச் சின்னமாக விளங்குகின்ற இன்றைய தலைவர் பிரபாகரன் மீது இவர் இனம்புரியாத நம்பிக்கை வைத்துள்ளார். அண்மையில் வெளியான இரா. சம்பந்தனின் 'வித்தும் நிலமும்' சிறுகதைத் தொகுதியில் அணிந்துரை வழங்குகின்ற போது ஒரு கட்டத்தில் 'இன்றைய எமது இனத்தின் காவலனை மையமாக எழுந்த நினைவலைகள், எதனையும் பகுத்துச் சிந்திக்கும் ஆற்றல், துணிவுடையான் வெற்றியடைவான் என்ற மனோ நிலை. எந்த முட்டுக்கட்டை வந்தாலும் அதனை உடைத்து இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற உணர்வு தான் அவரை (பிரபாகரனை) பெரியார் கி.ஆ.பெ. விசுவநாதன் 'புறநானூறு கண்ட வீரன்' என வியந்து கூற வைத்தது' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தடவை அவரோடு உரையாடுகின்ற போது சொன்னார் தமிழரசுக் கட்சியும் சரி, காங்கிரசும் சரி பின்னால் வந்த கூட்டணியும் சரி சும்மா அரசியல் கோஷத்தை முன் வைத்ததே தவிர ஒரு நாட்டுக்குரிய பொருளாதார கட்டுமானத்தை அவர்கள் செய்யவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் இன்றைக்கு வட பகுதியிலே விடுதலைப்புலிகள் பொருளாதாக் கட்டுமானத்திலே கவனம் செலுத்துகின்றார்கள். இது அவர்கள் தமிழீழம் என்ற நோக்கத்திலே உறுதியாக இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது என்று கூறிப் பெருமைப்பட்டார்.

காலத்தின் தேவையை ஒட்டிய ஆரோக்கியமான இம் மாற்றம் பல இடதுசாரிக் கருத்துக் கொண்டவர்களிடம் காணப்படுகின்றது. இம்மாற்றத்தை ஜீரணிக்க முடியாது சில சந்தர்ப்பவாத அரசியல் பேசுவோர் இவர்கள் மீது சந்தேகப்படலாம். ஏனெனில், கடைந்தெடுத்த பிற்போக்குவாதிகூட சோஷலிஸ முகமூடி போட்டுக் கொண்டு தான் மக்கள் மத்தியில் செல்வாக்குத் தேட வேண்டிய சூழ்நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளான்.

நாளைய எமது சந்ததி இந்தப் புலம்பெயர்ந்த மண்ணிலே தன்னுடைய இனத்தின் முகத்தையும் முகவரியையும் தொலைத்து விட்டு திரியப் போகும் இருள் சூழ்ந்த கால கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அதிர் கனகசபாபதி போன்ற நல் இதயம் கொண்ட - முற்போக்குச் சிந்தனை படைத்த - கல்விமான்கள், பண்பாளர்கள், பொதுநலனின் அக்கறையும் துடிப்பும் கொண்ட ஆர்வலர்கள் எமது மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் - யுவதிகள் - மாணவமணிகள் மத்தியில் பெரும்பணியாற்ற ஸ்தாபன ரீதியாக இணைந்து செயற்பட வேண்டும் என்ற என் ஆதங்கங்களனைத்தையும் தெரவித்து, அதிபர் அவர்களின் நூற்றாண்டு விழா இந்த மண்ணில் நடைபெற வேண்டும் என்று நான் துதிக்கும் அம்பாளை இறைஞ்சுகின்றேன்.

**ரீ. கே. பரமேஸ்வரன்**

**ஆசிரியர் ஈழநாடு (கனடா பதிப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு
- திருக்குறள்

# மனையும் மாட்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத் தலைவன் தாயுமானார் ஆகின்றார்

''சாதகம் நல்லாய்ப் பொருந்தியிருக்கு. மாப்பிள்ளைப் பெடியன் மகாஜனாவில் விலங்கியல் விஞ்ஞானப் பட்டதாரியாம். தங்கப் பவுணான குணமாம். தென்னிந்தியாவிலை இந்தப் பாடத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்ததாம். திறமையான ரியூஷன் மாஸ்டராம். பாடசாலையில் 100 வீதப் பெறுபேறுகள் கிடைக்குமாம்.''

எனது ஒன்றுவிட்ட தங்கைக்குப் பேசி வந்த மாப்பிள்ளை விவரம் இது. இராமலட்சுமணர் என ஊராரால் மெச்சப்பட்ட சகோதரர் இருவர். செல்வச் சிறப்புப் பெற்றவருக்கு 5 பெண்களும் ஒரு ஆணும். கல்விச் சிறப்புப் பெற்றவருக்கு 4 ஆணும் 2 பெண்ணும். இவர்கள் ஆரம்ப காலத்தில் வளர்ந்து வரும் போதில் ஒரே வளவில் இரு வீட்டில் ஒன்றாக வளர்ந்தவர்கள். எமது சித்தப்பாவின் மகளுக்கு வந்த பேச்சுக்கால் மூலம் கனக்ஸ் 33 வருடங்களுக்கு முன் எமக்கு அறிமுகமானார்.

கனகசபாபதியின் பெற்றோர் பெருங் கமக்காரர். தந்தையாரோ நல்ல அறிவுள்ளவர். அவர் எங்கு கல்வி கற்றார் என்பது தெரியாவிட்டாலும், அவரது பேச்சில் பழம் பெரும் பாடல்கள், மேற்கோள்கள், இலக்கியச் செறிவுகள் காணப்படும். தமயனார் ஓர் ஆசிரியராக விளங்கினார். தகப்பனாரின் உயர்ந்த உருவமும் தாயாரின் முகப் பொலிவும் கொண்ட கடைக் குட்டியான கனெக்ஸ் வீட்டின் செல்லப்பிள்ளையானார். இவரிடம் இயல்பாகவே காணப்பட்ட விவேகமும் சுறுசுறுப்பும் தக்க தருணத்தில் கல்வியில் திருப்பப்படவே அவர் கல்வியிற் சிறந்து அயல்நாடு சென்று புகழ் பெறவும் வாய்ப்பாயிற்று.

அவர் புகுந்த வீடு அவருக்கு எவ்வகையில் உதவியது? பாடசாலை அதிபரான சித்தப்பா, அக்கால ஆசிரியர்கள் போன்று ஒரு கிராமத்தின் அறிவுத் தேவைக்கு ஏற்ற பிற அறிவு பெற்றவராகவும் இருந்தார். குழந்தைகள் பிறந்தால் சாதகம் கணிப்பது, விசேடங்களுக்கு நாட் பார்த்துக் கொடுப்பது, காணி அளந்து எல்லை வைத்துக் கொடுப்பது, ஏடு தொடக்குவது போன்றன செய்வார். நூல்கள் சேர்க்கும் ஆவல் நிறைய உண்டு. கல்வி சம்பந்தமான நூல்களுடன் சங்ககால நூல்கள், சோதிடம், பூமிசாஸ்திரம், நிகண்டு வகை, இராமாயண இதிகாச வகைகளோடு, ஆனந்த விகடன், கல்கி போன்றவற்றில் வரும் தொடர்கதைகளைச் சேர்த்து நூலுருவமாகக் கட்டியும் வைத்திருந்தார். சிறு வயதிலேயே எமக்கு வாசிக்கும் வெறியை ஏற்படுத்தியவரும் வானத்து விண் மீன்களையும் கிரகங்களையும், இராசிகளையும் எமக்குக் காட்டித் தந்தவரும் அவரே.

சின்னம்மாவோ உடுவில் பெண்கள் பாடசாலை ஆசிரியராக இருந்து விவாகத்துடன் அதனை விடுத்து எம்மூர் வந்தவர். பெண்கள் முன்னேற்றம் பற்றிப் புரியாத அந்தக் காலத்திலேயே, இந்திய அரசில் ஒரு அமைச்சராக இருந்த ராஜ்குமாரி அமிர்தகௌரி மீது மதிப்பு வைத்திருந்தவர். அதனால் பாட்டி, பூட்டி பெயரை வைக்காது தமது மகளுக்கு அமிர்தகௌரி எனப் பெயர் வைக்கவும், நமது குடும்பத்து 'நாயகி'யைச் சேர்த்து விட்டார் சித்தப்பா.

பெற்றவள், தமது கடமை முடிந்ததென இரு வயதிலேயே சென்றுவிட, அன்னைக்கு அன்னையாய் வந்த சின்னம்மாவின் அரவணைப்பில் வளர்ந்த கௌரிக்கு, வீட்டுப் பெயர் 'டாலி'. இளம் பருவத்தில் தந்தையும் மறைந்து விடவே இவரது அண்ணர் சிவகணநாதன் (பதில் பொது முகாமையாளர், இலங்கை வங்கி) இவரை இந்தியாவுக்கு அனுப்பி உயிரியல் பட்டதாரி ஆக்கினார். டாலி கொழும்பு அஞ்சல் அலுவலக நூலகராக இருந்தபோது, எங்கள் குடும்பத்துள் ஒருவராகக் கனக்ஸ் புகவும் அவரும் தம் தொழிலை விட்டு வந்துவிட்டார்.

மகாஜனாவுக்குப் புதிதாக வந்ததொரு மாணவி ''அவரா, அவர் ஒரு நொண்டி. யாருடைய உதவியோடும் தான் படிகளில் ஏறுவார். தாண்டித் தாண்டி நடப்பார்'' என்று சொன்னதும், ''என் தங்கைக்கு அழகில்லையா, செக்கச் சிவந்த நிறமில்லையா, நல்ல குணங்களில்லையா, படிப்பும் அறிவும் இல்லையா, சீதனம் இல்லையா? ஏன் இந்தத் தூரத்து உறவினர் இப்படித் தெரிவு செய்கிறார்கள்?'' என அவசரக் குடுக்கையாக நியாயம் கேட்கப் போனதும் உண்டு. அப்போதுதான் அண்மையில் ஒரு பெரும் மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்டு காலை, இடுப்பை உடைத்துக் கொண்டு, இன்னமும் சுகப்படாத நிலையில் பிளாஸ்டர் போட்டபடி பாடசாலை வந்து போகிறார் என்பதும் தெளிவாயிற்று.

திருமணப் பதிவிலன்று முதன்முதலாகப் பார்த்த உருவம் எம்மனதில் பதிந்து போயிற்று. நெடிது நிமிர்ந்து உயர்ந்த உருவம். அதேபோன்று உள்ளமும் உயர்ந்த கலப்படமற்ற கொள்கைவாதியாகக் கண்டோம். சித்தப்பாவின் இடத்தை நிரப்ப வந்த சரியான தலைவன் என உணர்ந்தோம். முதற் சம்பாஷணையே இலக்கிய சம்பந்தமானது. புதிய கவிஞர்கள் பற்றியது. அது மகா திருப்தியைத் தந்தது.

விவாகத்தின் முன்னர் பலவிதமான கதைகள் வருகின்றன. அவருக்குக் கோயில்களில் நம்பிக்கையில்லையாம். கோயிலில் கலியாணம் வைப்பது சிலவேளை பிடிக்காதும் இருக்கலாம். திருநீறு பூசுவதில்லையாம். ஆடம்பரம் விரும்பாராம். ஐயர் மணவறையில் திருநீறு கொடுத்தால் என்ன செய்வார் எனப் பார்ப்போம். இப்படி, இப்படி இவை எனக்கு உள்ளார மகிழ்ச்சியைத் தந்தன. நல்ல காலம், ஒரு பத்தாம் பசலியாக இல்லையே.

சீமான் வீட்டுள் காலடி வைத்தார். ஒரு சில மாதங்களுக்குள்ளேயே வீடும் வளவும் அந்த வீடுதானா எனக் கேட்கும் அளவுக்கு மாற்றம் பெற்றுவிட்டது. எமது பகுதி கட்டாந்தரை. சுண்ணக்கல் பிரதேசம். கடும் உழைப்பாலன்றிப் பயன் பெற முடியாதது. அந்த வளவில் 3 தென்னைகள். சடைச்சு வளர்ந்த ஒரு அலரிமா மரம். வெறும் 3 பறட்டை மாமரங்கள். சில செம்பரத்தை. ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநிறை செல்வன் கனகசபாபதிக்கும்
திருநிறை செல்வி அமிர்தகௌரிக்கும்
திருமணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை. ஒரு முல்லை. 'ட' வடிவ வீடு; இரு போட்டிக்கோ அறை; விறாந்தை; இரு அறைகள் நடைசாலை; பின் விறாந்தை; அடுப்படி; இவ்வளவேயான வீடு. 'ட' வடிவம் திடீரென 'ப'வாகிப் பின் சதுரமாகியது. புதிய அறைகளும் நவீன வசதிகள் கொண்ட ஹாலும் எழுந்தன. மாமரங்கள் தறிக்கப்பட்டுப் பூமரங்கள் நாட்டப்பட்டன. லொறிகளில் செம்மண்ணும் பெரும் பூஞ்சாடிகளும் வந்திறங்கின.

அந்த அலரிமா, எமது பால்ய நண்பி. சுட்டெரிக்கும் வெய்யில் நேரத்தில் சிறிது நிழல் தரு மரம். பத்துப் பன்னிரண்டு வயதிலிருந்து அக்கிளைகளில் ஏறிச் சாய்ந்திருந்தும் கதைப் புத்தகம் வாசித்தல், றேந்தை, மவ்ளர் பின்னுதல், தைத்தல் ஆகிய பொழுது போக்குகளுக்கும் கற்பனைகளுக்கும் இடமாயிருந்தது. எமது இளமை உணர்வுகளுக்கும் தனிமையில் நாடகம், பேச்சு வசனங்களை உரத்துக் கட்டியெழுப்புவதற்கும் வீட்டுவேலை செய்யக் கள்ளப்பட்டுத் தஞ்சம் புகும் இடமாகவும் இருந்த அந்த அலரிமாவுக்கும் வந்ததே அனர்த்தம். பழங்கள் எவ்வளவு ருசியானவை. ஆனால் மரம் பிற்காலத்தில் நல்ல பயன் தராத நிலையில் இருந்தது.

## - திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் -

கனக்ஸ் கைவைத்த மாணவர்கள் எப்படித் துலங்கினார்களோ அதுபோல உலகில் எத்தனை நிறங்களுண்டோ அத்தனை நிறத்திலும் ரோஜா, வெட்சி, போகன்வில்லா, போல்சம் பூக்கள் ஒருபுறம். விசிறி வாழை, சிறு மீன் குளம், அதன் நடுவே மீன் தொட்டி, அத்தொட்டியின் மேல் எண்கோணத் தொட்டி ஒன்றில் அருமையாகக் கிடைக்கும் சிறுமீன் தொடக்கம் வர்ணக் கலவையுடைய பெரும் மீன்வரை துள்ளி விளையாடுவது, மறுபுறம். இதற்குள் வேலை செய்துகொண்டும் உலாவிக் கொண்டும் வலம்வரும் இத்தம்பதியர் இன்னொரு புறம். அழகான நந்தவனத்தோடு கூடிய மாளிகையாகிவிட்டது அக்'கௌரியகம்'.

டாலியும் கனெக்ஸ்"ம் ஒருவரையொருவர் 'ஹலோ ஹலோ' என்றுதான் அழைப்பார்கள், கதைப்பார்கள். 'இஞ்சாருங்கோ' என்பதன் ஆங்கில வடிவமோ? நாங்களும் டாலியை ''ஹலோ பள்ளிக்கூடத்தால் வந்துவிட்டாரோ'' என்றுதான் பகிடியாகக் கேட்போம். அவவும் சளைக்காது ''ஹலோ இன்னமும் வரவில்லை'' என்பா.

இருவரது வாழ்வும் பிறர் பார்த்து வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக நடந்து வந்தது. 'எள்' எனக் கனக்ஸ் நினைக்கு முன்னரே 'எண்ணெய்' இருக்கிறது எனக் கூறக்கூடிய மனைவி. பார்ப்பதற்கும் கேட்பதற்கும் சிந்தனையைக் குளிர்விக்கும் மு.வ. வின் தோழமை பயின்ற வாழ்வு. கணவனின் முன்னேற்றத்தில் மிக அக்கறை கொண்டு தோளோடு தோள் நின்று செயல் புரியும் ஓர் புதுமைப் பெண் அவள். காலையிலேயே அவர் எழுதிக் கொண்டோ, பாடம் தயார் பண்ணிக் கொண்டோ இருக்கும்போது அவள் சமையலை முடித்து, வேண்டியன எடுத்து வைத்து, உடைகளைத் தெரிவுசெய்து, 'குளிக்க நேரமாயிற்று' என அவரைப் புறப்படச் செய்து பாதிவழி வந்து அனுப்பி வைப்பாள். பாடான அந்த விபத்தின் பின் மோட்டார் சைக்கிள் வாங்க அனுமதிக்கமாட்டாள். கண்டவன் நின்டவன் மீதெல்லாம் அன்பைப் பொழியும் கனக்ஸ் இயல்பான மனைவி மீது எப்படி உயிரை வைத்திருப்பார்? எண்ணிப் பார்க்க இனிப்பாகும் குண நயம் இது. எல்லாவற்றிற்கும் வளைந்து கொடுப்பாள். பின்னர் மெல்ல மெல்ல சரியான பாதைக்கு வளைத்தெடுப்பாள். கோவிலுக்குச் செல்ல விரும்பாதவரை மாவைக் கந்தனின் மகாஜனக் கல்லூரித் திருவிழாவுக்குத் தம்பதியராய் தர்ப்பை போட்டு யாக குண்டத்தருகே இருந்து கிரியைகள் செய்யும் சிவபார்வதி ரூபராய் சமயச் சடங்குகளில் பங்குபற்றவும் செய்தாரென்றால் என் தங்கையின் சாமர்த்தியம் எப்படி?

வீட்டுக்கு வரும் மாணவருக்குக்கூட விருந்தளிப்பார். உடனாசிரியர், நண்பர் வீடுகளுக்கு விஜயம் செய்வார்கள். அவரது கல்லூரி வைபவங்களுக்குச் சென்று கலந்து கொள்வதும், ஆக்க பூர்வமான யோசனைகள் சொல்லிக் கொடுப்பதும் அவளது அன்றாடக் கடமைகள். அவருக்கு உதவியாக பாடக் குறிப்புகள் தயாரித்தல், படங் கீறுதல், விடைத் தாள்கள் திருத்துதல் போன்றவற்றிலும் முழுப்பங்கு ஏற்றாள். அவரின் சமூக ஈடுபாடுகளுக்கு டாலியே பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் உதவியாக இருந்தாள் என்பது எமது முடிவு. அவளுடைய சகோதரர்களும் சிற்றன்னையும் கனெக்ஸை ஏற்றிப் போற்றினார்கள். முன்னேற்றத்துக்கு உதவினார்கள்.

ரியூசன்கள் அதிகரிக்கத் தொடங்கவே, பயந்து பயந்து ஒரு ஸ்கூட்டர் வாங்க அனுமதி கொடுக்கப் பட்டது. வந்து சேரும்வரை நெஞ்சில் கை வைத்துக் காத்திருப்பாள். எமதுபக்க வழக்கப்படி பெண் பிள்ளைகளின் கணவரைச் சகோதரிகள் ராணியத்தான், தேவியத்தான், ரதியத்தான் என அழைப்பர். குழந்தைகளும் ராணிச் சித்தப்பா, டாலிச் சித்தப்பா என்பர். எனவே ஆஜானுபாகுவான் ஒருவர் ஒரு சிறு ஸ்கூட்டரில் வருவதைக் கண்டு, பிள்ளையார் எலி வாகனத்தில் வாறது மாதிரி டாலியத்தான் ஸ்கூட்டரில் வாறார் என எமது சகோதரிகள் டாலியைக் கேலி செய்வர். பயம் தெளியவும் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினார். அப்போதும் ஒரு விபத்து நேர்ந்தது. வாகனப் பொருத்தம் இல்லையோ தெரியாது. அந்த வாகனத்தை இரவல் வாங்கிப் போகும் நண்பர்கூட விழுந்தடிக்காமல் வரமாட்டார். ஈற்றில் மோட்டார் பைக் பைத்தியத்தை விட்டு ஒரு கார் வாங்கச் சம்மதித்து விட்டார்.

மணிவண்ணன் எனும் 'அப்பு' மணிமாறன் எனும் 'நணா' இல்லஞ் சிறக்கத் தளிர்நடை புரிந்தனர். நீண்ட வருடங்களின் பின் மணிமொழியும் மணிவிழியும் பிறந்தனர். பின்னர் உல்லாச வாழ்வின் அகத்திலும் புறத்திலும் சோதனைக் காலம் ஆரம்பமாகியது. சவாலை ஏற்றார் நைஜீரியா சென்றனர். அங்கேயுங்கூட இலங்கைத் தமிழர் அனைவரும் உண்டு, உடுத்துத், தங்கி, உறவாடிச் செல்லும் நிலை தொடர்ந்தது.

எனது நண்பர் தாசீசியஸ் இத்தம்பதிகள் பற்றிக் கண்களில் கண்ணீர் பொங்கக் கதைப்பார். தம் மனைவிக்கு ஒரு விபத்து நேர்ந்து ஆஸ்பத்திரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது எப்படி இவர்கள் இருவரும் முழுப் பொறுப்பும் ஏற்றுத் தமது கையறு நிலையைப் போக்கி உதவி செய்தனர் எனப் போற்றுவார். இப்படிச் சமூகத்துக்கு உதவி புரிவதைத் தம் கடமையெனக் கருதி நடந்தனர்.

பின்னர் கனடா கை நீட்டியழைத்தது. காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்ந்த காலம் முடிவு பெறுகிறது. பாடசாலைப் படிப்பையே முடிக்காத ஆண் மக்கள் இருவர், வயதுக்கும் வராத மணிமொழி, பல சத்திர சிகிச்சைகளை எதிர்நோக்கியிருக்கும் மணிவிழி. இவர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் தோழனாகவும் புதிய பாத்திரம் ஏற்கும் நிலை டாலியத்தானுக்கு வந்து விட்டது. சமூகத்தை அணைத்து நடக்கும் டாலி, படுக்கையில் இருந்தபடியே இதுவரை கணவருக்குத் தெரியாத சமையற்கலையையும் பயிற்றிவிட்டுச் சென்றுவிட்டாள். வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற வேண்டிய நேரத்தில் கனக்ஸ் தமது வாழ்க்கைத் துணையை, வாழ்க்கை வழிகாட்டியை, அருமைத் தோழியை, இல்லத்தரசியை இழந்துவிட்டார்.

உலக நாடக மேடையில் கப்பும் வளையும் பொறுத்த புதிய பாத்திரமொன்றை ஏற்றுவிட்ட கனக்ஸ் நிலைகண்டு, தங்கை மறைந்த துன்பத்தைக் காட்டிலும் பெருந் துன்பம் அடைகிறோம். இவர்களால் உபசரிக்கப்பட்ட பலபேர் இவர்களுக்கு உதவி செய்வதில் பின்னிற்கவில்லை. ஆனாலும் யந்திரமயமான கனடாவில் யாழ்ப்பாணம்போல அண்டை அயல் உறவு சுற்றமா பொறுப்பில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கு?

இடிந்து விடுவார், உடைந்து விடுவார் என்றெல்லாம் எண்ணப்பட்ட கனக்ஸ் எப்படித் தம்மைச் சுதாரித்துக் கொண்டார். குழந்தைகள் தாயில்லாத குறையையுணரக்கூடாது, தாய்க்காக ஏங்கக்கூடாது எனும் ஒரே குறிக்கோளில் அவர் 'தாயும் ஆனார்'. உடைகள் கழுவி, உணவு சமைத்து ஊட்டி சத்திர சிகிச்சைகளின் போது - வயதுக்கு வந்தபோது - கண்ணுங் கருத்துமாக அன்பினால் அவர்களை ஆகர்ஸித்து நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து 'டாலியே தோற்றுவிடுவாள்' என நினைப்போம். இந்த இளம் சிறுமிகளுக்காகவாகிலும் ஒரு முதிர் கன்னியை விவாகம் செய்தாலென்ன என எம் மனம் மறுகும். பெரிய பாடசாலைகளையே நிர்வகித்த இவருக்கு 4 சிறுவர்களைக் கொண்ட குடும்பப் பாடசாலையையா நிர்வகிக்க முடியாது?

இளாவாலை எஸ். ஜெகதீசன் எவ்வளவு அற்புதமாக 'சமூக மோகம் சுயசோகத்துக்குக் கழிம்பு தடவியது' என எழுதியிருந்தார். ஆம்! அப்படித்தான். கல்வி சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறவும், உத்தியோகம் பற்றிய அறிவுரை பெறவும் வீடும், டெலிபோனும் தமிழ்க் குரல்களால் நிறைந்து வழியும். பழமைபோல விருந்துகளும் இடம்பெறும். ஆரம்பத்தில் நண்பர் குடும்பமோ, உறவினரோ சமையல் உதவிக்கு அழைக்கப்படுவர். ஒருவருக்கு விருந்தளிப்பதற்காக உதவி செய்யும 10 பேருக்கு அன்று 'வெட்டு'த்தான். ஆனால் இப்போ 'கனெக்ஸின் கட்லெட்ஸ்' பேர் பெற்றவை. சமையற் கலையிலும் தேர்ச்சி பெற்றுவிட்டதால் - ஏதோ பெண்கள் 'தாங்கள் இல்லாமல் உலகம் நடக்காது' என்ற மாதிரி யல்லவா கூக்குரல் இடுகிறார்கள் என்று சவால் விடுகிறார்.

இவருடைய முன்னேற்றத்துக்குத் தடையாக இல்லாது உதவியாக இருக்கிறார்கள் இவர் பெற்ற செல்வங்கள். சமையற் கடமையில் குறிப்பிட்ட நாட்களில் 'அப்பு' தன் வரிசையைக் காட்டுவார். லீவு விட்டால் 'நணா'வின் நளபாகம் திக்குமுக்காட்டும். பிறந்து இரு வருடங்களில் நாட்டைவிட்டு நீங்கிய 'பிள்ளை' மேற்கத்திய சமையலில் கை வைப்பார். புதிய புதிய 'ஈற்றுணா'ச் செய்வதில் 'தேனு' தேனீதான். இவர்களின் படிப்புக்கு உதவி செய்வதிலும் ஒரு நேரத்தை ஒதுக்கி விடும் கனெக்ஸ் 'நேர சூசி' போலவே இயங்குகிறார்.

வாழ்க்கையில் வேதனைகள் சோதனைகள் இடி மேல் இடியாக இறங்கும்போது எப்படியெல்லாம் குணத்தில், போக்கில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தன்னை மறந்த நிலை தவிர்ந்த ஒரு நிரந்தர சோகம் வருகின்றதே அப்படியெல்லாம் இவரில்லையே ஏன்? தன் மனைவியை அவர் இன்றும் தன் வழிகாட்டியாக நினைக்கின்றார். தாயின் படத்தை வணங்குவதைக் கண்டிருக்கின்றோம். மனைவியின் படத்தை வணங்குபவர்களைக் கண்டிருக்கிறீர்களா? ஆம்! அவர் எங்கு புறப்படும் போதும் மனைவியின் படத்தின் முன் நின்று ஒரு நிமிடம் மௌனமாக விடை பெறுகிறார். இன்றும் அவள் மனைவிதான்! தோழிதான்! அவரைப் பொறுத்தவரை அவள் மறையவில்லை. ஆனாலும் அவர் சடமல்ல.

அந்தரங்கம் புனிதமானது. சில சமயங்களில் அவரது உள்ளம் ஊமையாக அழும். வெளியே சொல்ல மாட்டார். தொடர்ந்து நெஞ்சில் ஒரு வலி ஏற்படும். வலியினால் துடிக்கும்போது காரணகாரியத் தொடர்பை அலசினால் நெஞ்சப் பளுவே கிளறப்பட்ட நிலையில் இருக்கும்.

ஒரு மனிதனின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அவனது சூழலே காரணமாகும். உள்ளார்ந்த உற்சாகம் சூழலை வசப்படுத்தும். கனெக்ஸ் இன் சமூக விரிவாக்கத் தொடர்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒரு குடும்பத் தலைவனாக அவர் மிளிர்கின்ற போக்குக்கூட வளர்ச்சியடைந்திருக்கிறது.

செல்லப்பிள்ளையாக அடம்பிடித்த காலம் போய் இளம் வாலிபராகத் தாய் தந்தையருக்கு உதவி செய்த காலமும்போய் இன்னொரு குடும்பத்தில் நுழைந்து மச்சான்மாருடன் அன்பும் பண்புமாகப் பழகி அருமையான கணவனானார். காதலிக்கவும், கறி வகை சமைக்கவுமே பெண் உரியவள் என நினைக்காது பாரதியின் புதுமைப் பெண்ணாக நடந்து கொள்ள வேண்டும் என முற்போக்காக மனைவிக்குத் தன் காரியங்களிலும் பங்கு கொடுத்து, அவளது ஆற்றலையும் சமூகத்துக்களிக்கச் செய்த கணவனாகி, இன்று தந்தை மாத்திரமன்றித் 'தாயுமானார்' ஆகி குடும்ப நிர்வாகத்தைத் தாங்கியுள்ள திரு. கனகசபாபதி அவர்கள், பாட்டன் பூட்டன் பதவிகளும் வகிக்க எல்லாம் வல்ல இறைவன் தன் அருளைப் பொழிவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தான் என் அத்தான்!


1963ஆம் ஆண்டு ஆடி மாதம் 3ம் திகதி எங்கள் குடும்பத்தில் மறக்க முடியாத ஒரு தினம். ஆம். அன்று தான் எங்கள் குடும்பத்தில் அங்கத்தவர் ஒருவர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் வேறுயாருமல்லர்; எங்கள் மூத்த சகோதரி ''கௌரியை'' கைப் பிடித்ததன் மூலம் ''அத்தான்'' உறவோடு எங்கள் குடும்பத்தில் ஒருவரான திரு. பொ. கனகசபாபதி அவர்கள்தான். "Kanex" என்று எல்லோரும் இவரை அன்பாக அழைப்பர். காங்கேசன்துறை செய்த புண்ணியத்தால் ஒரு சிறந்த கல்விமான் அந்த மண்ணில் வந்து, அந்த மண்ணிற்கு மேலும் புகழ் சேர்த்தார்.

எனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், இன்று ஒரு நல்ல நிலையில் நான் இருப்பதற்கும் காரணமாக இருந்தவர்கள் இருவர். ஒருவர் எனது மூத்த சகோதரர் திரு. சிவகணநாதன் (பதில் தலைமை முகாமையாளர், இலங்கை வங்கி). அடுத்தவர் எனது அத்தான் திரு. பொ. கனகசபாபதி அவர்கள். 1960ஆம் ஆண்டு வைகாசி மாதம் எமது தந்தையார் திரு. அ. குருநாதபிள்ளையின் மரணத்தின் பின் செயலிழந்திருந்த எங்களுக்கு ஒரு சுமை தாங்கியாக வந்தவர்தான் எங்கள் அத்தான். எமது தந்தையார் நடேஸ்வராக் கல்லூரி கனிஷ்ட பாடசாலையில் அதிபராக இருந்தவர். அத்தான் புத்தூர் சோமஸ்கந்தா, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிகளில் அதிபராக இருந்தவர். எனவேதான் காங்கேசந்துறையில் யாராவது வீடு தேடி வந்து ''பிறின்சிப்பல்'' வீடு எது என்று விசாரித்தால், குரு வீதியில் இருக்கும் ''கௌரி அகத்தை''த் தான் எல்லோரும் காட்டுவார்கள்.

வார இறுதி நாட்களில் ''கௌரி அகம்'' ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக மாறி விடுவதுண்டு. அக்கா கௌரியின் விருந்தோம்பலும் இதற்கு ஒரு காரணம். எல்லாத் திசைகளில் இருந்தும் மாணவர்கள் இங்கே வருவார்கள். பாடம் முடிந்ததும் பல விடயங்களும் அலசி ஆராயப்படும். அரசியல், சினிமா, விளையாட்டுத்துறை, கதை, கட்டுரை, கவிதை, நாடகம் எல்லாமே ஆராயப்படும். கிணற்றுத் தவளை போல இருந்த எங்களுக்கு இது பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. புத்தகப் பூச்சியாக இருந்த பல மாணவர்களுக்கு இவருடைய கலந்துரையாடல் பொது அறிவை வளர்க்கப் பெரும் உதவியாக இருந்தது.

வீட்டுத் தோட்டத்திலே அவருக்குப் பெரும் ஈடுபாடு உண்டு. எல்லா வகையான பழ மரங்களும் அங்கே நிறைந்து வழிந்தன. காங்கேசந்துறையிலேயே மிகச் சிறந்த ஒரு வீட்டுப் பூந்தோட்டத்தை அங்கே அமைத்துக் காட்டினார். சினிமாவில் வரும் பூந்தோட்டம் போல எங்கள் வீட்டுப் பூந்தோட்டமும் காட்சி அளிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக அயலில் நிகழும் எல்லா நல்ல நிகழ்ச்சிகளுக்கும் போகும் பெண்களின் தலை முடியில் அவர்களின் சேலைக்கேற்ற நிறத்தில் பூக்கள் குடி கொள்ளத் தொடங்கின. புகைப் படக் கலைஞர்களும் இங்கே வந்து புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் காட்டினர்.

வீட்டில் ஒரு பெரிய நூல் நிலையத்தை மட்டுமல்ல, எல்லா புதிய பழைய பாடல்களையும் ஒலிப் பதிவு நாடாவில் பதித்து ஒரு ஒலிப்பதிவு நாடாக்களைக் கொண்ட தொகுப்பு (Audio Library) ஒன்றும் செய்து வைத்திருந்தார். மிகப் பழைய பாடல்களுக்காக பலர் இங்கே வந்து இவரிடம் பிரதி செய்வதுண்டு. கர்நாடக இசையில் அவருக்கு இருந்த ஆர்வம் அவர் விடிய விடிய இந்தியாவில் நடக்கும் இசைவிழாக்களைக் கேட்டுக் கொண்டிருப்பதில் இருந்து அறிய முடிந்தது. அவருக்கு பிடித்தமான பல பாடல்களில் இதோ ஒரு சில:
தண்டபாணி தேசிகர் பாடிய ''தாமரைப் பூத்த தடாகமடா'', பாரதி தாசனின் ''துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா'', ''வெண்ணிலாவும் வானும் போல'', ''தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை''. பாரதியாரின் பாடல்கள் எல்லாமே ஒலிப்பதிவு செய்து வைத்துள்ளார்.



**மக்கட்செல்வங்கள் மணிவண்ணன், மணிமாறன், மணிவிழி, மணிமொழி ஆகியோருடன்**

புகைப் படக் கலையில் அவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக அவரது மூத்த மகன் அப்பு பிறந்தபோது ''ஒவ்வொரு மாதமும் அதே தினத்தில் புகைப்படம் எடுத்து அவரது வளர்ச்சியை ஒரு அல்பமாக தொகுத்து வைத்திருந்தார். முதலாவது பிறந்த தினத்திலன்று ஒவ்வொரு மணி நேரமும் புகைப் படமாக்கி அதைத் தொகுத்திருந்தார். இந்தப் புதுமையான முயற்சி அவரது பல மாணவர்களைக் கவர்ந்தது. அவரது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களாகிய எனது நண்பர்கள் பலரது வீடுகளில் இப்படியான புகைப் படத் தொகுப்பை அவர்களும் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்திருந்ததைச் சமீபத்தில் காணக் கூடியதாக இருந்தது.

ஒரு முறை எனது மூத்த சகோதரர் ஒரு சத்திர சிகிச்சைக்காகக் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நானும் அவருடன் நின்றேன். அப்போது அத்தான் அவரைப் பார்ப்பதற்காக அங்கே வந்திருந்தார். வெள்ளை நிற ஆடையில் மிகவும் கம்பீரமாக அவர் உள்ளே நடந்து வந்தபோது அவரைச் சுற்றிப் பல வைத்தியர்கள் கதைத்துக் கொண்டு வந்தார்கள். அவர் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு விடுதியில் ஓய்வில் இருந்தவர்கள்கூட அங்கே வந்து கூட்டம் கூடிவிட்டார்கள். இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிங்கள உதவியாளர்கள் தங்களுக்குள் ஏதோ கதைத்துவிட்டு அருகில் இருந்த டாக்டர் கார்த்திகேயலிங்கத்திடம் ''இவர் யார்? சுகாதார மந்திரியா?'' என்று சிங்களத்தில் கேட்டார்கள். அதற்கு கார்த்திகேயலிங்கம் ''மந்திரி அல்ல, மந்திரியைவிடப் பெரியவர். நாங்கள் இங்கே இந்தப் பதவியில் இருப்பதற்கு இவர்தான் காரணம்'' என்று சிங்களத்தில் சொன்னார். எனக்கோ இதைக் கேட்டதும் 'ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்'' என்ற திருக்குறள் தான் ஞாபகத்திற்கு வந்தது. தாயார் அங்கே இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ந்திருப்பார் என நினைத்தேன்.


அவருடன் நான் விடுமுறைகளில் மலையகத்திற்குச் சென்றிருக்கின்றேன். அங்கே எல்லாம் அவரது மாணவர்கள், விடுதியில் இருந்தவர்கள் யாவரும் அவரிடம் காட்டிய மதிப்பும், அன்பும் மறக்க முடியாதவை. எல்லோரும் அவருக்கு விருந்து கொடுத்து உபசரிப்பதில் போட்டி போட்டார்கள். இதுவும் ஒரு விதமான அன்புத் தொல்லை என்பது அப்போதுதான் புரிந்தது.

இவரது புகழ் இலங்கையில் மட்டுமல்ல வெளி நாடுகளிலும் பரவியிருக்கின்றது என்பதைச் சமீபத்தில் கண் கூடாகக் காணக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. பாரீஸ் விமான நிலையத்தில் நான் சிறிது நேரம் தங்கி நின்றபோது தேநீர் அருந்துவதற்காக ஒரு சிற்றுண்டிச் சாலைக்குப் போனேன். அதன் பொறுப்பாளராக ஒரு தமிழ் இளைஞர் இருந்தார். அவர் தேநீர் பரிமாறும் போது எங்கே இருந்து வருவதாகக் கேட்டார். நான் 'ரொறன்ரோ' என்று சொன்னேன். உடனே அவர் ''அப்ப எங்கடை பிறின்சிப்பூலை தெரிஞ்சிருக்குமென நினைக்கின்றேன்'' என்றார். நான் எனக்குள் சிரித்துக் கொண்டு ''உங்கடை பிறின்சிப்பல் யார் என்று எனக் கெப்படித் தெரியுமென்றேன்''. ''என்ன நீங்கள் சொல்லுறீங்கள், கனடாவிற்குப் புதிதா? Kanexஐ தெரியாமல் கனடாவில் எங்கடை ஆட்கள் இருக்கினமா?'' என்று கேட்டார். ''ஏன் அப்படி சொல்லுகிறீங்கள்'' என்று கேட்டேன். ''அவர் எவ்வளவு பிரபல்யமானவர். அவரைத் தெரியாது என்று எமது தமிழ் மக்கள் சொன்னால் அதற்கு இரண்டே இரண்டு காரணம் தான் இருக்க முடியும். ஒன்று அவர்கள் பாமரர்களாக இருக்க வேண்டும் அல்லது அவர் மீது பொறாமை கொண்டவர்களாக இருக்க வேண்டும்'' என்றார். தான் புத்தூர் சோமஸ்கந்தாவில் படித்ததாகவும் தனக்கு அவரது வகுப்பில் படிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும் வருத்தப்பட்டார். ஆனால் அவரது சகோதரி அவரிடம் படித்ததாகவும் இப்போது கொழும்பில் வைத்தியராக இருப்பதாகவும் சொன்னார்.

எனது மனதைத் தொட்ட இன்னுமொரு நிகழ்ச்சி என்னவென்றால், சமீபத்தில் மலேசியாவிலிருந்து அத்தானின் பழைய மாணவர் ஒருவர் (அங்கே வைத்திய கலாநிதியாக இருப்பவர்) அவரது மகனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதிலே பிள்ளைகள் நன்றாகப் படித்து அப்பாவின் பெயரையும் புகழையும் காப்பாற்ற வேண்டும் என்றும் தான் படிக்கும் பருவத்தில் மிகவும் குழப்படியாக இருந்தாகவும், அத்தான் தன்னை அடித்துத் திருத்திய படியால்தான் தான் இன்று நல்ல நிலையில் இருப்பதாகவும் எழுதியிருந்தார். இதில் இருந்து என்ன தெரிந்த தென்றால் அன்று அன்பால் மட்டுமல்ல அடித்தும் மாணவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றார் என்பதுதான்.

விளையாட்டுத்துறையில் அவருக்கு நல்ல ஈடுபாடு உண்டு. காங்கேசந்துறை குரு விளையாட்டுக் கழக போஷகராக இருந்தபோது உதைபந்தாட்டத்தில் அக்கழகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் புகழ்பெற்ற ஒரு கழகமாக மாற்றி அமைத்த பெருமை அவரையே சாரும். இதே ஆர்வம்தான் மகாஜனாக் கல்லூரியையும் உதைபந்தாட்டத்தில் முன்னணிக்குக் கொண்டு வருவதற்கு உதவியது.

மகாஜனாக் கல்லூரியில் நான் தமிழ் மாணவர் மன்றச் செயலாளராக இருந்தபோது பல அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவு செய்வதற்கு இவர் செய்த உதவி அளப்பரியது. தமிழகத்தில் இருந்துகூட அறிஞர்களை வரவழைக்க இவருக்கு அவர்களுடன் இருந்த தொடர்பு மிகவும் உதவியாக இருந்தது. இத்தகைய அவரது தமிழ் உணர்வுதான் மகாஜனா மாணவர்களிடையே வேரூன்றி இன்று பல வீரர்களைக் களத்திலே நிறுத்தியிருக்கின்றது.



குரு. அரவிந்தன்

எத்தனையோ நல்ல குணங்களை அவரிடம் கண்டாலும் சிலருக்கு அவரிடம் பிடிக்காத ஒரு குணமும் உண்டு. அதுதான் அவர் எதையுமே நேருக்குநேர் சொல்லிவிடும் பழக்கம். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ளாதவர்கள் பலர் சங்கடப்பட்டிருக்கிறார்கள். புரிந்து கொண்டவர்கள் தங்களைத் திருத்தி இருக்கின்றார்கள்.

அறுபது ஆண்டு நிறைவை அடையும் அத்தானை எல்லாம் வல்ல குருநாதர் நீண்ட காலம் வாழ அருள் புரிய வேண்டி வாழ்த்துகின்றோம். அவர் தமிழ் உலகிற்காக வாழாவிட்டாலும் எங்கள் குடும்பத்திற் காகவாவது (சுயநலம் தான்) நீண்ட காலம் வாழ வேண்டுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A FATHER IS....

*A father is strong.*
*A father is wise.*
*A father is stubborn.*
*A father is sweet*
*A father is difficult.*
*A father is kind.*
*A father is arrogant.*
*A father is loving.*
*My father is all this and more.*
*a whole lot more.*

**-K. MANIVILLIE -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று....

அன்போடும் ஆர்வத்தோடும் அளவாக ஏற்பாடு செய்யப்பெற்ற அதிபர் கனகசபாபதி அவர்களின் மணிவிழா அழகான முறையில் நிறைவுபெற உதவிக்கரங்கள் நீட்டியவர்கள் எமது நெஞ்சங்களைவிட்டு நீங்காதவர்கள்.

மணிவிழா மலரை வெளியிடுவதற்கும் விழா நிகழ்ச்சிகளைச் சிறப்புற ஒழுங்கு செய்வதற்கும் விருந்தோம்பி மகிழ்வதற்கும் மற்றும் விழாத் தொடர்பான அனைத்து அலுவல்களுக்கும் உதவிபுரிந்து எம்முடன் இணைந்து செயலாற்றிய ஒவ்வொருவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விழா மலருக்கு எழுத்தமைப்புச் செய்து உதவிய சரோஜா தம்பிப்பிள்ளை அவர்களுக்கும் அட்டைப் படத்தை அமைத்து உதவிய சசி பத்மநாதன் (ஹரன் கிராப்ஸ்) அவர்களுக்கும் அழகுற அச்சிட்டுத் தந்த சங்கர் அச்சகத்தாருக்கும் நாம் பெரிதும் கடப்பாடுடையோம்.

**- விழாக் குழுவினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டை: சசி–ஹரன் கிறாப் • SHANKAR PRINT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org